பொருளியல் நோக்கு

மலர் 12 இதழ் 12 மார்ச் 1987

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

நிரல்கள்

கைத்தொழில்	12	சிறிய நடுத்தர அளவு கைத் தொழில்களின் முக்கியத்துவம்
வேலைவாய்ப்பு	13	வேலை வாய்ப்புக்களில் அண்மைக்கால போக்கு
வியாபார விளைபொருள்கள்	15	தேயிலை – பயிர் வீழ்ச்சியும் ஏற்றுமதி அதிகரிப்பும்
வளர்முக உலகம்	17	எண்ணெய் வளம் கைகழுவி விடுகிறது
சுகாதாரம்	18	யானைக்கால் நோய் அபாயம்
பொருளாதாரம்	20	இலங்கையின் பொருளாதாரம் – 1986

விசேஷ அறிக்கை

3	சுகாதாரமும் வைத்திய சேவைகளும்

சிறப்புக்கட்டுரைகள்

வகாபு கொன்ஸல்டன்ஸ் நிறுவன அறிக்கை	22	கிராமோதய சபைகள்
எஸ். ஆர். டி. எஸ். ஜயதிலக	26	உள்ளூர் மட்ட அதிகாரத்தின் இயக்க ஆற்றல்
வி. கைலாசபிள்ளை	29	வீடமைப்பு அபிவிருத்தி

வண்ணார்பண்ணை இளைஞர்கள்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும், அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

அடுத்த இதழில்

- ★ சிறு ஏற்றுமதிப் பயிர்கள் – அவற்றின் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள்
- ★ கடற்றொழில் அபிவிருத்தி – இலங்கையில் 200 மைல் பிரத்தியே மீன்பிடி வலயம்
- ★ இலங்கை – இந்திய வர்த்தம்
- ★ வர்த்தக வங்கிகளும் விவசாயக்கடனும்

அட்டைப்படம்
சேபாலிக்கா பெர்னான்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார சேவைகள் மீதான அரசாங்க முதலிடுகள்

சமூக சேவைகள் மீதான செலவுகள் இப்பொழுது மனித மூலதனம் மீதான முதலீடுகளாக கருதப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சமீப காலத்தில் சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் மீதான செலவினங்கள் மனித மூலவளத்தின் தரமேம்பாட்டுக்கு துணை புரியும் காரணிகளாக மற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்ற சமூக சேவைகள் உற்பத்தி அதிகரிப்புக்கு (மறைமுகமாக) கணிசமான அளவில் உதவி புரியும் மூலதனங்களாக இருக்கின்றன.

அரசியல் சுதந்திரத்தையடுத்து வந்த ஆண்டுகளில் சமூக சேமநல சேவைகளை விஸ்தரிப்பதில் அரசாங்கங்கள் மிகத்தாராளமாக நடந்து கொண்டன. இலவச சுகாதார சேவைகள், உணவு மானியம், இலவச கல்வி என்பன இச்சேமநலக் கொள்கையின் பிரதான கூறுகளாக இருந்தன. சுகாதார சேவைகள் மொத்த அரசாங்க செலவினத்தில் சுமார் 3 சதவீதமாக இருக்கின்றன. அரச வரவுசெலவுத் திட்டத்தில் 6.3 சதவீதமும், மொத்த மூலதனச்செலவில் 2 சதவீதமும் 1986ல் சுகாதார சேவைகளுக்கென வழிப்படுத்தப்பட்டன.

சுகாதாரம் மீதான தலாநபர் செலவு (ரூபா வடிவில்) 1976 ல் ரூ. 82 ஆகவிருந்து 1985ல் ரூ. 155 ஆக அதிகரித்துள்ளது. ஆனால், தலாநபர் மெய்ச் செலவு பெயரளவிலான ஒரு அதிகரிப்பினையே காட்டியது. உற்பத்திச்செலவு அதிகரிப்பு, பணவீக்கப் போக்குகள் என்பன இவ்வதிகரித்த செலவினத்தின் தாக்கத்தைக் குறைத்துவிட்டன.

சுகாதார நிலைமை புள்ளிவிவர ரீதியாக கவர்ச்சிகரமானதாக இருந்த போதிலும், நாட்டின் சுகாதார சேவைகள் இன்னும் பல குறைபாடுகளைக் கொண்டவையாக இருக்கின்றன. இதுவரை காலமும் சிகிச்சைச் சேவைகளிலேயே கூடிய கவனஞ்செலுத்தப்பட்டு வந்திருப்பதனால், தடுப்புச் சேவைகள் சரியான முறையில் விருத்தி செய்யப்பட்டு, விஸ்தரிக்கப்படவில்லை.

அட்டவணை 2, 1983-86 சுகாதார வரவு செலவுத்திட்ட உள்ளடக்கத்தை தருகிறது. இன்னமும் சிகிச்சை சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை இவ்வொழுக்கிடுகள் காட்டுகின்றன. ஆனால் நிலைமை படிப்படியாக மாறி வருகின்றது. 1977 ல் 68 சதவீதமாக இருந்த சிகிச்சைச்சேவைகள் மீதான செலவினம் 1986ல் 53 சதவீதமாக குறைவுடைய, தடுப்புச் சேவைகள் மீதான செலவினம் அதிகரித்து வந்துள்ளது.

நிர்வாகச் செலவுகளும் செங்குத்தாக உயர்ந்து வருகின்றன. இது 1983 ல் 4 சதவீதமாக இருந்து 1986ல் 15.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அட்டவணை 1

சுகாதாரம் மீதான செலவு 1976-1986

(ரூ. பத்து லட்சம்)

	1976	1977	1978	1979	1980	1981	1982	1983	1984	1985
சுகாதாரம் மீது செலவு	431.4	484.8	603.2	752.5	884.0	953.7	1,182.0	2,024.1	1,750.6	2,439.9
மொத்த அர. செலவு	8,653.0	8,812.8	17,687.6	20,339.3	28,532.0	29,485.6	35,287.4	41,790.0	51,364.4	67,103.0
மொ. தே. உ.	27,750.0	34,432.0	40,242.0	49,542.0	61,814.0	76,831.0	91,253.0	108,762	134,772.0	146,005.0
அர. செலவில் சுகாதார செலவு%	5.0	5.5	3.4	3.7	3.1	3.2	3.3	4.8	3.4	3.6
மொ. தே. உ. யில் சுகாதார செலவு%	1.6	1.4	1.5	1.5	1.4	1.2	1.3	1.9	1.3	1.7
நடு வருடசனத்தொகை	13.7	13.9	14.3	14.5	14.7	15.0	15.2	15.4	15.8	15.8
சுகாதாரம் மீதான தலா நபர் செலவு (ரூபா)	31.5	34.9	42.5	51.9	60.1	63.6	77.8	131.4	112.2	154.4

அட்டவணை 2

சுகாதார சேவைகள் மீதான செலவு

(சதவீதம்)

நிகழ்ச்சித்திட்டம்	1983	1984	1985	1986
நிர்வாக செலவுகள்	4.0	5.4	10.6	15.4
சிகிச்சை சேவைகள்	78.7	65.2	51.7	53.2
தடுப்புச் சேவைகள்	17.3	29.4	37.7	31.4
மொத்தம்	100.0	100.0	100.0	100.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகாதாரமும் மருத்துவ சேவைகளும்

இவ்வாண்டின் முதற் காற்பகுதியில் இந்நாட்டின் மருத்துவ சேவையில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. முதலாவது, ஆசியாவிலேயே மிகப்பழைமையான உயர் தொழில் அமைப்புகளில் ஒன்றான இலங்கை மருத்துவச் சங்கம் அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. இதனையொட்டி மார்ச் மாத இறுதியில் நூற்றாண்டு விழா காங்கிரஸ் நடாத்தப்பட்டது. இரண்டாவது, சில வாரங்களுக்குப் பின் தேசிய சுகாதார சேவைகள் நிறுவனத்தின் புதிய கட்டிடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது. முன்னையது பெரும்பாலும் இந்நாட்டின் மருத்துவத் தரப்பனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பின்னையது முதனிலை சுகாதார நலன் ஆப்பினைப் பிரதிபலிக்கிறது. (இவ்விரு நிறுவனங்களுக்குமிடையிலான இடைவெளி, இலங்கை மருத்துவச் சங்க காங்கிரஸ் நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. இக்கூட்டத்தில் பல்வேறு தரப்பட்ட மருத்துவ சிறப்பறிஞர்களால் சாதனைக்குரியதான 110 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் இவற்றில் பத்துக்கும் குறைந்த கட்டுரைகளே முதனிலைச் சுகாதாரப் பராமரிப்பு பற்றிக் குறிப்பிட்டன). சுகாதாரத்திற்கான நிட்டங்களை வகுப்போரும் கொள்கை உருவாக்குவோரும் எதிர்நோக்கும் பணி இவருவானதன்று. அவர்களது பணியானது, அரசியல், சமூக, நிதி மற்றும் வேறுபட்ட அழுத்தங்களின் விளைவாகத் தோன்றிய திட்டமிடப்படாத பல நிறுவனங்களாக வளர்ந்து பரவியுள்ள 100 ஆண்டுகள் பழைமையான மருத்துவ சேவையொன்றை மீளமைப்புச் செய்தலை மட்டும் உள்ளடக்கியதன்று; ஒரு தலைப்பட்சமானதும் வர்த்தக நோக்குடையதுமான மருத்துவ முறைமையின் பிசுத்தியையான விளைவுகளிற் சிலவற்றை ஒழிப்பதும் இப்பணியின் ஓர் அம்சமாகும்.

ஏறத்தாழ 1978 ம் ஆண்டிலிருந்து, சுகாதாரம் என்பது அடிப்படையில் ஒரு மனிதாபிமைப் பிரச்சினை என்பதும், மருத்துவச் சேவைகளை விருத்தி செய்வது கொண்டு மட்டும் சுகாதாரப் பராமரிப்பு முறையில் நிரந்தரமான முன்னேற்றத்தை அடைந்துவிட இயலாது என்பதும் ஆழமாக உணரப்பட்டு வந்துள்ளது. சுருங்கச் சொன்னால் மருத்துவம் என்பது சிறந்த உடனலத்துக்கு அடிப்படையானதொரு காரணி எனக் கொள்ளமுடியாது. எனவே சுகாதாரக் கொள்கைகளில் அழுத்தம் தரப்படும் அம்சங்களும் நோக்கும் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். சமூகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலாரோக்கியத்தை தீர்மானிப்பவற்றை சமூக அமைப்பும் அரசியற் பொருளாதாரமும் கட்டுப்படுத்துகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. மருத்துவ சேவைக்கான அணுகுமுறைகளில் மாற்றங்கள் அவசியம். மனிதனின் சிறந்த உடனலனுக்கு அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வது, மற்றைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் விட சமூக அபிவிருத்திக்குரிய பலம் பொருந்திய சக்தியாகும். இந்த உணர்வுதான், நாட்டின் சுகாதார சேவைகளை மீளமைப்புச் செய்வதற்கு உந்து சக்தியாக விளங்குகிறது.

சுகாதார சேவைகளை விருத்தி செய்வதற்கு உருவாக்கப்பட்டுள்ள புதிய குறிக்கோள்கள், மக்களின் அரசியல், பொருளாதார, சமூக தரங்களை உயர்த்துவதில் இச்சேவைகள் எத்தகைய பங்கினை வகிக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. பரிகார, தடுப்புச் சேவைகள் இரண்டும் மக்களுக்கு அவசியமாகும். நோயினால் மக்களுக்கு ஏற்படும் துன்பங்களை அகற்றுவதற்காக மக்கள் உணரும் தேவைகளை நிறைவேற்றுவது, சமூகத்தில் நம்பிக்கையைப் பிறப்பிப்பதற்கும், பிற சமூக, பொருளாதார மாற்றங்களில் அவர்களைப் பங்கு பெறச் செய்வதற்கும் ஒரு வழியாக அமைகிறது. சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணி இச்சவாலை எதிர் நோக்குகிறது. மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யத்தக்க வகையில் பயிற்சியை மாற்றியமைத்து உயர் தொழில் மனோபாவங்களையும் மாற்றுவதே இக்குறிக்கோளை அடைதற்கான உத்தமமான சூழலை உருவாக்கும். இத்தொடர்பில் வலுவான ஒரு வாதம் யாதெனில், பொதுமக்களுக்குப் பணி புரியக் கூடிய வகையில் சுகாதார சேவை மீளமைக்கப்பட வேண்டுமாயின் நோயாளர் மற்றவர்களில் தங்கியிருக்கும் நிலையையும், சுகாதார சேவையில் ஒரு பகுதியினர் மக்களைச் சுரண்டும் நிலையையும் தோற்றுவிப்பதும் வர்த்தக நலன்களை மெலோங்கச் செய்வதுமான தற்போதைய சுகாதார சேவை முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாகும். சுகாதார சேவை நீண்டகாலமாக குறிப்பிட்ட உயர்தொழில் வகுப்பொன்றின் தனியுரிமையாக இருந்து வந்துள்ளது என்றும், சமூக, பொருளாதார போட்டி அதிகரித்தமையாலும் நுகர்ச்சி மனர்ச்சார்பு உருவாகியுள்ளமையாலும் துரதிர்ஷ்ட வசமான சில விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் இக்கருத்து வலியுறுத்துகிறது. தற்போதைய 'அமைப்பு' இப்பிரச்சினையை, உயர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் சிந்தனை அடிப்படையில் நோக்க முடியுமே ஒழிய வேறு கோணத்திலிருந்து நோக்க முடிவதில்லை. ஆதலால் சமூகம், சுகாதாரப் பிரச்சினைகள் மீது கூடிய கவனஞ் செலுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. மேலும், அரசாங்கங்கள் சுகாதார அமைச்சுக்கு அளிக்கும் குறைந்த முக்கியத்துவமும் தேசிய அரங்குகளில் சுகாதாரப் பிரச்சினைகள் இடம் பெறுமையும் உண்மையில் மருத்துவ உயர் தொழில் ஆற்றுவோர் நெகிழ்வற்ற அளவுகோல்களுடன் பிற துறைகளுடன் தொடர்பற்ற நிலையில் தம் பணியினை ஆற்ற விரும்புவதனால் ஏற்பட்ட விளைவாகும். நடைமுறைப் பிரச்சினைகளுள் ஒன்று, மருத்துவத் தொழில் தோற்றுவித்துள்ள தடைச் சுவர்களைத் தகர்த்து, அபிவிருத்தி விவாதத்தில் சுகாதாரத்துக்கும் இடமளிப்பதாகும்.

இவ்விவாதத்தில் கிளப்பப்பட்ட மிக அடிப்படையான பிரச்சினை சுகாதாரம் பற்றிய தற்போதைய கருத்தாகும். இக்கருத்தின்படி, நோயற்ற நிலைமையைத் தோற்றுவிப்பதே சுகாதாரம் என்பதாகும். சுவீடன் நாட்டு சுகாதாரப் பரிகார ஆய்வுத் துறைப் பேராசிரியர் கோரன் ஸ்டர்க்கியின் வார்த்தைகளில் உணர்ச்சியூட்டும் வகையில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. ''அடிக்கடி ஒரு மருத்துவ 'மேனிலைச் சந்தை' (சுப்பர் மார்க்கெற்) யாக ஆக்கப்படும் சுகாதார சேவைகள் முறைமை, சுகாதாரப் பிரச்சினையை நாம் பார்க்க முடியாத அளவுக்கு நோய்ப் பிரச்சினைக்கு முக்கியத்துவமளித்துக் காட்டுகிறது. ஆதலால் நாம் தனிப்பட்டவரின் நோயல்லாது சமூகத்தின் சுகாதார நிலை எம் கருத்தைத் தொடுவதில்லை'' என்று அவர் கூறியுள்ளார். ''மேல் நாட்டு மருத்துவர் ஒரு தனிபரின் நோயைக் கண்டறிந்து சிகிச்சை செய்கிறார். அவர் நோயாளியைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் தனித்தனியான ஊகங்களை ஏற்படுத்திக் கொள்கிறார். நோயாளரும் மனிதப் பிறவிகளும் அநேகமாக இயல்பாகவே ஒருவரிலிருந்து ஒருவரும் சூழலிலிருந்தும் பிரிக்கப்பட்டவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.''

பேராசிரியர் ஸடர்சி, உலக சுகாதார தாபனத்தின் யாப்பில் தரப்பட்டுள்ள சுகாதாரம் பற்றிய வரைவிலக்கணம் பொதுப் படையாகப் பிரயோகிக்கப்படலாமா என்ற வினாவை எழுப்புகிறார். நடைமுறையில் இந்த வரைவிலக்கணம் ''சுகாதாரம் என்பது முற்றுமுழுதான உடல், உள, சமூக நல்வாழ்வினையே குறிக்கின்றது. வெறுமனே நோயும், சுகவீனமும் அற்ற ஒரு நிலையையல்ல.''

இது எதனால் ஏற்படுகிறது என்பதைத் தீர்மானிக்கும் தனி உரிமையை மருத்துவருக்கு வழங்குவதுடன், தொழில் சார்ந்த திருப்தி மக்களின் தன்னம்பிக்கையை இழக்கச் செய்கிறது என்றும் அவர் கூறுகின்றார். உலக சுகாதார தாபனத்தின் கொள்கையில் தெளிவானதொரு முரண்பாடு காணப்படுவதாக பேராசியர் வலியுறுத்துகிறார். மேற்கூறிய வரைவிலக்கணத்தைத் தரும் அத்தாபனம், அதேவேளையில், சமூகத்தின் ஈடுபாட்டையும் மக்கள் தம் சுகாதாரப் பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சமாளித்துக் கொள்வதற்கு அவர்களுக்குள்ள ஆற்றலையும் ஆடம்பரமடையாமல் கொண்ட ஒருவனிடம் சுகாதாரப் பராமரிப்பு பற்றிய கருத்தையும் ஒருங்கிணைக்கிறது என்றும் அவர் கருதினார். சுகாதாரம் அபிவிருத்திக்குரிய ஒரு கருவியாக ஆகவேண்டுமானால் அடிப்படைச் சுகாதாரக் கருத்து பற்றிய எமது - சுவாசாரசிரியிலான வழிவிலக்கணம் ஒன்று அவசியமாகும் என்று பேராசிரியர் ஸ்டர்லியின் கருத்தாகும். அவரது நோக்கில் பிரச்சினை யாதெனில் சுகாதாரப் பராமரிப்பை உயர்தொழில் மயமாக்கப்பட்ட சேவை என்ற நிலையிலிருந்து கட்டாயச் செயல்படுத்தப்படும் தன்னம்பிக்கையுடன் கூடிய ஒரு பராமரிப்பாக மாற்றுவதாகும்.

பாரதூரமான விளைவாதெனில், இப்பணிக்கு எந்த இப்போதைய சுகாதார அபிவிருத்தி நிறுவனங்கள் பொருத்தமானவையா என்பதாகும். வேறு விதமாகச் சொல்வதானால் தொழில்சார் அமைப்புக்கள் முதனிலை சுகாதாரப் பராமரிப்பின் நோக்கத்தைக் கெடுத்துவிடுமா? மருத்துவச்சாலைகள் மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளிலிருந்து தள்ளிவைக்கப்பட்டுவிட்டன. இவான் இலிச் கூறுவது சரியாக இருக்கலாம். சுகாதாரப் பராமரிப்பு முறைமை எதிர் விளைவை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது. அதிக மருத்துவரும் பணியாளரும் வழங்கப்படுவது, மக்களை மேலும் நோயாளர்களாக ஆக்குவதற்கு ஏதுவாக அமைகிறது. இதனிடமோசமானது என்னவென்றால் 'மருத்துவ சேவைக் கருத்தியல்' மக்கள் தம் ஆக்கத்திறனைப் பறித்து விட்டனமையாகும். அதாவது நீக்கக்கூடிய சுகாதாரப் பிரச்சினை தொடர்பாகக் கூட்டாகச் செயல்படக்கூடிய ஆற்றலை ஒழித்து விட்டனமையாகும்."

இப்பிரச்சினைகள் இந்நாட்டின் சுகாதார நிலைக்கும் மருத்துவச் சேவைகளுக்கும் எத்தனை தொடர்புடையவை?

1950 ஆம் 1960 ஆம் ஆண்டுத் தொடர்களில் குறைப்படுத்தும் சிகிச்சைக்கான மருத்துவம் விரைவாக வளர்ச்சியடைந்து வந்தது. அத்துடன் புது மருந்துகளும் பரிகாரச் சாதனங்களும் பரந்லாகக் கிடைக்கக் கூடியனவாக இருந்தன. வேதனையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சிகளுக்கும், பரீட்சைகளுக்கும் கோடிக் கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டன. மருந்தாக்க வர்த்தகத் தாபனங்களின் இலாபங்கள் அபரிமிதமாக அதிகரித்தன. இம்முன்னேற்றமானது, நோய்த் தடுப்பு, பொதுச் சுகாதார நடவடிக்கைகள் என்பவற்றின் முக்கியத்துவத்தை மறைத்துவிட்டன. இதன் விளைவாக சுகாதாரத் துறைத் தொழிலில் ஈடுபட்டவர்களும் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் கவிர்வாக்கும் மருத்துவச் சாத்தியங்களில் அதிக கவனம் செலுத்தினர். அதே வேளையில் இசுகாலப்பிரிவில் மலிவு நடவடிக்கையும், வாழ்க்கைப் பாங்குகளும் சுகாதாரத்தையும் நோயையும் தீர்மானிப்பதில் முக்கியப்பங்கு கொள்கின்றன என்பது உணரப்பட்டு வந்தது. செல்வம் கொழிக்கும் நாடுகளில் உடல் நலவிறைச் செய்யும் தொற்றாத நோய்கள் பெருகின. வறிய நாடுகளில் வறுமையும் அறியாமையும் மக்களின் மனோபாவங்களையும் நடத்தைப் பாங்குகளையும் தீர்மானிக்கும் காரணிகளாய் அமைந்து உடனலக் குறைவிற்கான காரணிகளைப் பெருக்க உதவின. அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் சமூக, பொருளாதார, அரசியற் காரணிகள் நோய்க்கு ஏதுவாக அமைகின்றன எனக் காணப்பட்டது. மக்களின் மிக்க உணரப்பட்ட சுகாதாரத் தேவைகளை சுகாதாரச் சேவை முறைமை மட்டும் நிறைவேற்ற முடியாது என்பது தெளிவாக்கியது. இதன் காரணமாக சமூக, கூட்டு வாழ்க்கையின் முக்கிய அம்சங்களைத் தற்போதுள்ள சுகாதார சேவைகள் உள்ளமைப்புடன் இணைப்பதற்கான ஓர் அணுகுமுறையைத் தேடும் முயற்சிக்கு வழிவகுத்தது. இப்பின்னணியில்தான் முதனிலைச் சுகாதாரப் பராமரிப்பு விருத்தி செய்யப்பட்டது.

1970 ஆம் ஆண்டுத் தொடரில் குறைந்த வருமானமுள்ள பல நாடுகள், செலவு குறைந்த சுகாதாரப் பராமரிப்பு முறைகளைக் கையாண்டு கணிசமான அளவு நோய்களைக் குறைத்து விட்டன என்பதற்குப் போதிய சான்றுகள் இருந்தன. இம்முறைகள் மிக்க வறிய நாடுகளது பொருளாதார வளத்திற்குக் கூட அப்பாற்பட்டனவல்ல என்பதுடனும் சுகாதாரப் பராமரிப்பு என்பது அனைவருக்கும் நடைமுறைச் சாத்தியமானதொன்று எனத் தோன்றியது. 1978 அல்மா அடிப்படைச் சுகாதாரச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்குப் பரவலான சர்வதேச அரியல் ஆதரவு கிடைத்தது. அல்மாண்டு செப்டம்பர் மாதம் அல்மா அட்டாவில் நடைபெற்ற முதனிலைச் சுகாதாரப் பராமரிப்பு பற்றிய சர்வதேச மாநாடு இப்புதுச் சுகாதார முன்னுரிமைகளுக்கு அரியல், தொழில்சார் கட்டமுறைமை நிலையை ஏற்படுத்தியது. அத்தியாவசியச் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை வறியவர்கள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை விருத்தி செய்யும் இப்புதுக் கருத்து 1980 ஆம் ஆண்டுத் தொடரில் அதிக வலுவோடு பின்பற்றப்பட்டது. வளர்முக நாடுகளில் வீடமைப்பு, சுகாதாரம் என்பவற்றில் ஏற்பட்டுள்ள விருத்தி உடனலத்தை விருத்தி செய்வதற்குப் பெருந்துணை புரிந்துள்ளன. தனிய சுகாதாரப் பராமரிப்பினை அடைவதற்கான வாய்ப்புகளைப் பரவலாக்குவதற்கான அரியம், சுகாதாரத் துறையில் முக்கியத்துவம் பெற்றது.

எனவே, இவ்வாறாக சமூக வளங்களில் தங்கிய நிலையில் முதனிலைச் சுகாதாரப் பராமரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அத்தியாவசியச் சுகாதாரப் பராமரிப்பாக மாற்றமடைந்தது; தாய், சேய் சுகாதாரப் பராமரிப்பு, நோய்த்தடை ஏற்பாடு, காயங்களைக் குணப்படுத்தல், போசாக்கு, சுத்தம் என்பவற்றை விருத்தி செய்தல் என்பன முதனிலைச் சுகாதாரப் பராமரிப்பில் அடங்கும்.

இறுதியாக, முதனிலைச் சுகாதாரப் பராமரிப்பு மூலம் அனைவர்க்கும் உடனலன் அளித்தல் எனும் உணர்வு, சிறந்த சுகாதாரத்துக்கும் கூடிய மனித நலனுக்குமான தேடலுக்கு அச்சாணியாக விளங்கியது. இவ்வணுகுமுறையின் இறுதி விளைவு 2000 ஆம் ஆண்டில் அனைவர்க்கும் உடனலன் என்ற இலட்சியமாகும். அதாவது, 2000 ஆம் ஆண்டில் உலகப் பிரசைகள் அனைவரும், சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நல்விளைவை ஏற்படுத்தத்தக்க வாழ்க்கை நடத்துவதை இயலுமாக்கத்தக்க மட்டத்தில் உடனலனை உருவாக்குவதாகும்.

இலங்கையில், 2000 ஆம் ஆண்டில் அனைவருக்கும் உடனலம் என்ற இலக்கை அடைவதற்கான பகுத்தறிவு ரீதியான உத்திகள் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 1980 ல் உலக சுகாதாரத்தாபனத்தின் மூலம் உலக சமுதாயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வுத்திகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

(அ) உடனல அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பாக பல்வேறு பிரிவுகளுக்கிடையே இயைபினை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒரு தேசிய உடனல அபிவிருத்தி அமைப்பினைத் தாபித்தல்;

(ஆ) சுகாதார நிருவாகத்தைப் பன்முகப்படுத்தல்;

(இ) செயல்படுத்தும் பொருட்டு பொதுச் சுகாதாரப் பராமரிப்பு ஆக்க அம்சங்களை இனங்கண்டு முன்னுரிமையளித்தல்;

(ஈ) பின்னர் தேசிய அடிப்படையில் அமுல் செய்வதற்காக ஒரு முன்மாதிரியைத் தயாரித்தல்.

அத்தியாவசிய சுகாதாரப் பராமரிப்புக்கான வாய்ப்பினை எல்லாச் சனங்களுக்கும் அளிப்பதற்கான நோக்கத்துடன் மிக்க நியாயமான வகையில் அமைந்த சுகாதாரப் பராமரிப்பு முறைமையைத் தாபிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. அனைவர்க்கும் உடனலம் என்ற இலட்சியத்தினை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடைமுறை நடவடிக்கை, ஒரு தேசியச் சுகாதார அபிவிருத்தி அமைப்புத் தொகுதியைத் தாபித்தலாகும்.

இவ்வமைப்புத் தொகுதியின் வரும் ஐந்து அம்சங்களைக் கொண்டது:

1. தேசிய சுகாதாரப் பேரவை
2. தேசிய உடனல அபிவிருத்திக் குழு
3. ஆறு நிலையியற் குழுக்கள்
4. மாவட்ட உடனல அபிவிருத்திக் குழுக்கள் (மாவட்ட அபிவிருத்திச் சபையின் சுகாதாரத்துறை)
5. உப பிரிவு, கிராம மட்டங்களில் அமைப்புகள்

பொதுச் சுகாதாரத் திட்டமானது மக்களது அடிப்படைச் சுகாதாரத் தேவைப்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். இதில் இனங் காணப்பட்டுள்ள எல்லா அம்சங்களும் பூரணமாக அளிக்கப்பட முடியுமானால் 'அனைவர்க்கும் உடனலம்' எனும் இலட்சியத்தை அடைய முடியும். எவ்வாறாயினும் இக்குறிக்கோளினை அடைவதற்கு மேலும் பல விடயங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன. தற்போதுள்ள சுகாதாரச் சேவைகளின் சில அம்சங்களை ஆராய்ந்தால் இந்நிலைமை தெளிவாகும்.

உதாரணமாக அரசாங்கத்தின் திட்டமிட்ட செலவில் ஏறத்தாழ 3 சதவீதம் சுகாதாரத்துக்காகச் செலவிடப்படுகிறது. சென்ற 10 ஆண்டுகளாக அரசாங்கத்தின் நேரடிச் சுகாதாரச் செலவு இருமடங்காக அதிகரித்துள்ளது. இச்செலவு 22.5 கோடி ரூபாவிலிருந்து 45 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. இச்செலவுப் பாங்கில் முக்கியமானது யாதெனில் திட்டமிட்ட செலவில் சுமார் மூன்றில் இரு பங்கு நோயாளர் பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதாகும். 1983 ல் இவ்வம்சத்துக்காக மொத்தச் செலவில் 79 சதவீதம் ஒதுக்கப்பட்டது. எனினும், 1986 ல் இது 53 சதவீதமாகக் குறைந்தது. அதே வேளையில் 1983 ல் சமூகச் சுகாதாரச் சேவைகளுக்காக மொத்தச் செலவில் 17 சதவீதம் செலவிடப்பட்டது. இது 1986 ல் 31 சதவீதமாக அதிகரித்தது. இதிலிருந்து, அரசாங்க நிதியத்தில் ஒரு பெரும்பகுதி பரிகாரச் சேவைகளுக்காகச் செலவிடப்படுகிறது என்பது தெளிவாகிறது.

பரிகாரச் சேவைகள் ஏறத்தாழ 825 நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இவற்றில் 12 பிரதான நகரங்களில் அமைந்து மாகாண மருத்துவச்சாலைகள் என வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 மாணவருக்கு மருத்துவ போதனைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன; 19 ஆதார மருத்துவச்சாலைகள்; 115 மாவட்ட மருத்துவச்சாலைகள், 109 மகாணக் கூறுகள். இவற்றுடன் 128 கிராம மருத்துவச்சாலைகளும், 87 பிரசவ விடுதிகளும், 328 மத்திய மருத்துவ நிலையங்களும் மற்றும் 25 சிறப்புச் சிகிச்சை நிறுவனங்களும் உள்ளன. 1985ல் மொத்தம் 1914 மருத்துவ உத்தியோகத்தர்கள் நேரடி நோய்த்தடுப்புச் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர். இத்தடுப்புச் சேவைகள் சிறப்பறிவு இயக்கங்கள் வாயிலாகவும், நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மூலமாகவும் ஏறத்தாழ 100 அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்களின் பொறுப்பின் கீழ் அளிக்கப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இவர்களுக்கு உதவியாக சுமார் 8,500 சுகாதார ஆதரவுப் பணியாட்கள் கடமையாற்றுகின்றனர். மேலும், சுமார் 37 மருத்துவ உத்தியோகத்தர்கள் நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அரசாங்கச் சுகாதாரச் சேவை வசதிகளில் காணப்படும் குறைபாடுகள், பாரதூரமான பிரச்சினைகள் காரணமாக பல சந்தர்ப்பங்களில் மிகக்குறைந்தளவு சேவைகளைப் பேணுதல்கூட கடினமாயிற்று. இப்பிரச்சினைகளில் பயிற்றப்பட்ட ஆளணியின் கடுமையான பற்றாக்குறை; பல்வேறு புவியியல் பிரிவுகளிடையே தற்போதுள்ள ஆளணியினரின் முறையற்ற பகிர்வு; புற எல்லை மருத்துவச்சாலைகள் போதியளவு பயன்படுத்தப்படாமை; மாகாண, மாவட்ட மருத்துவச் சாலைகளில் சன நெருக்கடி; பல்வேறு நிறுவனங்களுக்கு மருந்துகளுட்பட வைத்திய வழங்கல்கள் முறைகேடாகவும் போதாக்குறையாகவும் வழங்கப்படுதல்; பதவியினர் கண்காணிக்கப்படாமை என்பன சிலவாகும்.

இத்தகைய குறைபாடுகளே பல பிரச்சினைகளுக்குக் காலாக அமைந்துள்ளன என்று தோன்றுகிறது. ஆதலால் மக்களிற் பலர் தம் பிரதேசங்களிலுள்ள மருத்துவச் சாலைகளில் சிகிச்சை பெற நாடவில்லை என்பது ஆச்சரியத்துக்குரியதன்று. நோய் எதுவாக இருந்தாலும் பெரிய மருத்துவச் சாலை ஒன்றில் சிறந்த பரிகாரம் கிடைக்கும் என்று மக்கள் பொதுவாக எண்ணுகின்றனர். பெரிய மாகாண, ஆதார வைத்திய சாலைகளில் படுக்கைகள் நூறுசதவிதத்திற்கு மேல் பயன்படுத்தப்படுகின்றன. மத்திய மருத்துவ நிலையங்களிலும், கிராமிய மருத்துவச் சாலைகளிலும் முறையே 12 சதவீத, 72 சதவீதப் படுக்கைகள் மட்டுமே உபயோகப்படுத்தப்படுகின்றன. சென்ற 20 ஆண்டுகளாக பெரிய மருத்துவச் சாலைகளில் நோயாளர் தங்கும் காலம் குறைக்கப்பட்டிருந்தும் இந்நிலைமை காணப்படுகிறது.

"மருத்துவ நிறுவனங்களைக் கடந்து செல்வது ஒரு பெரும்பிரச்சினை. இதனால் சில நிலையங்கள் மேலதிகமாகவும் சில போதாக்குறையாகவும் பயன்படுத்தப்படுகின்றன" என்று மருத்துவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

எல்லா மட்டங்களிலுமான அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் பெறுவாகக் காணப்படும் ஒரு குறைபாடு, மருந்துகள், சாதனங்கள் போதாமை போன்ற வசதிக்குறைவுகளாகும். வேறு காரணங்களுடன் இப்பொருட்களில் பற்றாக்குறை ஏற்படப்

தெரிவு செய்யப்பட்ட சில வகை
வைத்தியசாலைகளில் நோயாளர் தங்கும் சராசரிக் காலம்

	சராசரி தங்கும் காலம்		
	1965	1975	1985
கொழும்பு பெரிய மருத்துவச்சாலை	8.1	8.3	8.8
மாகாண மருத்துவச்சாலைகள்	8.3	7.0	6.2
ஆதார "	6.3	6.2	5.0
மாவட்ட "	5.9	4.6	3.8
புறஎல்லை கூறுகள்	-	4.0	3.6
கிராமிய மருத்துவச்சாலைகள்	-	4.2	4.6

மூலம்: சுகாதார அமைச்சு மருத்துவப் புள்ளிவிவரப் பிரிவு

(இவ்வாறு காலம் குறைக்கப்பட்டமைக்குக் காரணம் மருத்துவச் சாலைகளுக்கு நோயாளரை அனுமதித்தல் அதிகரித்தமையாகும் என்றும், மருத்துவச் சாலைகளுக்கு அதிக எண்ணிக்கையான நோயாளர் வருகை நோய்களில் ஏற்படும் மாற்றம், கடுமை அல்லது அதிக பயனுள்ள சிகிச்சை முறைகள் என்பன இதற்குரிய காரணங்களாகும் என்றும் கூறப்பட்டுள்ளது).

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்களின் நோய்களிற் பெரும்பாலானவை தடுக்கத்தக்க நோய்கள் என்றும் இவை புற எல்லைப் பகுதிகளிலேயே தவிர்க்கப்பட முடியும் என்றும் அவ்வாறு செய்தால் நோயாளர் மீண்டும் வைத்தியசாலைகளுக்கு வருவதைத் தடுக்க முடியுமென்றும், இதனால் பெரிய மருத்துவச்சாலைகளில் சன நெருக்கடியைக் குறைப்பதோடு நோய்கள் ஏற்படுவதிலேயே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்ட நோய்ப்பாங்கு மதிப்பீடுகள் காட்டுகின்றன.

பிரதான காரணம் இவை திருடப்படுவதாகும். இழப்புக்கள், திருட்டு, விரயம் என்பன இந்நிறுவனங்களிலிருந்து அடிக்கடி கிடைக்கும் முறைப்பாடுகளாகும். இதற்கான முக்கிய காரணம் பொறுப்பானவர்களிடையே காணப்படும் அக்கரையின்மையும் கண்காணிப்புக் குறைவுமாகும் என்று சுகாதார அதிகாரிகள் கண்டுள்ளனர்

சுகாதார சேவைகளில் பயிற்றப்பட்ட மனித வது போதியளவில் இல்லாதிருத்தல் இன்றுவரை ஒரு பிரதான பிரச்சினையாக இருந்து வருகின்றது. சுகாதார அமைச்சின் கூற்றின்படி 1986 ல் 2,416 டாக்டர்களும், 1443 உதவி வைத்திய உத்தியோகத்தர்களும் தேவையாக இருந்தனர். ஆனால், இவ்வாண்டில் இவ்வாளணியினர் முறையே 2151, 957 என்ற விதத்திலேயே கிடைக்கப்பெற்றனர். இதன் விளைவாக 1984 ல் 5528 ஆக இருந்த டாக்டரொருவருக்கான ஆட்களின் அளவு 1985 ல் 7,368 ஆக அதிகரித்திருந்தது. 1985 ல் 12,550 தாதிமார் தேவையாக இருந்த போதிலும் 8091 தாதிமாரே இருந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தரங்களில் பதவியினர் பற்றுக்குறையும் முக்கியமானதாகும். பெரிய மகாண, ஆதார வைத்தியசாலைகளில் பயிற்றப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் பற்றுக்குறை மிகப் பாரதூரமானதாகும். அதிக வேதனத்துக்காக மருத்துவ உத்தியோகத்தர்கள் பிற நாடுகளை நாடிச் செல்வது இந்நிலைக்கு முக்கிய காரணமாகும். புற எல்லைகளிலுள்ள மருத்துவச் சாலைகளில் இலகுவாகத் தனிப்பட்ட முறையில் சிகிச்சையளித்து கூடுதலான வருமானம் பெற முடியுமாகையால் அத்தகைய நிறுவனங்களில் கடமையாற்றப் பல மருத்துவ உத்தியோகத்தர்கள் விரும்பிச் செல்வதும் ஒரு காரணமாகும். மருத்துவத் தொழில் அதன் உயர் தரத்துக்கும் உயர்நிலைக்கும் பேர்பெற்றதாக இருப்பினும் சில மருத்துவ உத்தியோகத்தர்கள், நோயாளரின் வேதனையைக் கொண்டு முறைகேடான பயன்பெற முனைவதால் அத்தொழிலுக்கு அவப்பெயரைத் தேடித் தருகின்றனர். இத்தகைய மனப்பாங்கினால் சிகிச்சையளிப்பவர்களுக்கும் சிகிச்சை பெறுபவர்களுக்குமிடையிலான இடைவெளி விரிவடைகிறது எனலாம்.

சில மருத்துவர்கள் தம் தனிப்பட்ட மருத்துவத் தொழிலை நடாத்தும் முறையிலிருந்தும் தனிப்பட்ட மருத்துவமனைகளிலும் மருந்து விற்பனையிலும் அவர்களுக்குள்ள நலன்களிலிருந்தும் இம்மனோபாவம் இலங்கையில் மிகத்தெளிவாக வெளியாகிறது. உயர் தொழிலுக்கு ஒவ்வாத இத்தகைய நடத்தை பற்றி அரசாங்க, தனிப்பட்ட மருத்துவச் சேவைகளைச் சார்ந்த மருத்துவர்களுக்கெதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய நடத்தைகளில் ஒன்று சில மருத்துவர்கள் பெரிய மருந்து வர்த்தக தாபனங்களுடன் வைத்துள்ள தொடர்பாகும். அண்மையில் வெளிப்படுத்தப்பட்ட ஓர் ஆய்வுக் கட்டுரையில் பேராதனை மருத்துவப்பள்ளியின் மருத்துப் பொருளியல் துறையின் தலைவர் பேராசிரியர் கே. ஜயசேன, மூன்றும் உலக நாடுகளில் மருந்துகள் சந்தைப்படுத்தல் தொடர்பாக தம் அனுபவம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ''இந்நாடுகளில் மருத்துவர்கள் நோயாளரைச் சோதித்து மருந்துகளை விதித்துரைப்பது மட்டுமன்றி மருந்துகளை அவர்களுக்கு விற்பதும் பொதுவான ஒரு வழக்கமாக மட்டுமல்லாம் நியதியாகவும் அமைந்துவிட்டது. எனவே, மருத்துவரின் வருமானம், அவரது மருத்துவ ஆலோசனைக் கட்டணத்தைவிட மருந்து விற்பனையிலேயே அதிகமாகத் தங்கியுள்ளது. எனவே இந்த மூன்றும் உலக நாடுகளில் தனியார்துறை மருத்துவர்களின் எண்ணிக்கை, அரசாங்கத் துறையிலுள்ளவர்களின் எண்ணிக்கையை ஒத்ததாக இருக்கிறது. அவர்கள் பெருந்தொகையான மருந்துகளின் விற்பனைக்குக் காரணமாக இருக்கின்றனர். எல்லா மருத்துற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளும் இவ்வைத்தியர்களை அடிக்கடி சந்தித்தல் ஆச்சரியத்துக்குரியதன்று. மருத்துவர்களுக்கு மருந்துகளின் இலவச ''மாதிரி'' களுடன் வேறு சன்மானங்களும் வழங்கப்படுகின்றன. குறித்த ஒரு துறை மருந்துகளில் தமக்கு அதிக இலாபமிருப்பதாகக் கண்டதும் தமக்குத் தேவையான மருந்துகளை குறித்த பிரதிநிதியிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றனர். இத்தகைய சந்தைப்படுத்தல் முறை, நுகர்வோருக்குப் பாதுகாப்பு அளிப்பதில்லை என்பது தெளிவு. இதனாலேற்படும் ஒரு விளைவு நோயாளருக்குத் தேவையானாலும் இல்லாவிடினும் மருந்துகள் அல்லது மருந்துப்பட்டியல்கள் தேவைக்கதிகமாகக் கொடுக்கப்படுவதாகும்.''

பேராசிரியர் ஜயசேன கூறுவது போல, 'அத்தியாவசியமாகும்பொழுது மட்டுமே மருந்துகள் வழங்கப்பட வேண்டும் என்ற கூற்று, அபிவிருத்தியடைந்த நாடுகளிற்போலவே மூன்றும் உலக நாடுகளின் மருத்துவர்களாலும் புறக்கணிக்கப்படுகிறது. இலங்கை போன்ற நாடுகளில் சுகாதாரப் பராமரிப்பின்

சுகாதார சேவைகள் 1981–1985

வகை	1981	1982	1983	1984	1985
1. வைத்தியசாலைகள் (அ) மேனாட்டு மருத்துவம்	488	479	483	484	490
2. கட்டில்கள்	44,082	44,389	44,016	44,919	45,211
3. மத்திய மருந்துச்சாலைகள்	340	336	334	336	338
4. மொத்த டாக்டர்கள்	2,233	2,036	1,951	2,822	2,151*
5. மொத்த உதவி வைத்திய உத்தியோகத்தர்	925	911	933	992	957
6. மொத்த ஆயுர்வேத வைத்தியர்கள்	10,685	11,531	12,043	12,277	12,277
7. மொத்த தாதிமார்	6,805	6,931	7,112	7,216	8,091
8. சிற்றூழியர்	4,883	4,932	4,690	4,705	4,881
9. உள் நோயாளர் ('000)	2,283	2,445	2,524	2,524	2,497
10. வெளிநோயாளர் ('000)	30,439	31,896	30,720	31,907	29,570
11. நாணயச் செலவு (ரூ. பத்துலட்சம்)	857	999	1,308	1,621	1,783
12. மொத்த சுகாதார செலவு (ரூ. பத்துலட்சம்)	999	1,188	2,024	1,751	2,031

மூலம்: சுகாதார அமைச்சு,
உண்ணாட்டு மருத்துவ அமைச்சு

(அ) மகப்பேறு நிலையங்களையும் உள்ளடக்கியது.

* (அரசாங்க டாக்டர்களின் இத்தொகை 1986ல் 2,300 ஆக அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்கும் 550 டாக்டர்களும் இருக்கிறார்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மட்டங்களில் (ரூபவாகினி மாகாணம், அபிவிருத்தி மாகாணம், பொதுவான மருத்துவச்சிகள், சிறப்பறிவு நிபுணர்கள்) உபயோகிக்கப்படுத்துவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட மருந்து நிரல்களிலிருப்பதுடன் மருந்து உபயோகம் நியாயமானதாகவோ கவனமெனினும் சில மருந்துகள் அளவிக்கதிகமாக விநியோகிக்கப்படுகிறது ஒரு போக்கு உள்ளது. எவ்வாறாயினும், தனியார்துறையிற் கட்டுப்பாடில்லை. "சில வேளைகளில் மருத்துவர்கள் ஆலோசனை கூறுவதற்குப் பதில் அவர்கள் நோயாளியைத் திருப்திப்படுத்துவதற்காக மருந்துகளை விநியோகிக்கின்றனர்."

அனைவர்க்கும் உடனடியாக மன்ற கருத்துவதற் மயனறிதாகவும் மற்றோர் அம்சமுமுள்ளது. திருமதி மருந்துவர்களை அவர் சாடுகிறார், "2000 ஆம் ஆண்டில் அனைவர்க்கும் உடனடியாக என்று திட்டத்தின் கீழ் வியின்பர். நீர் மலம் எடுக்கும் மட்டவர்களாகவிருந்த, கைதுரப்பாளர்களிலும் மக்கள் முழுமையாகப் பங்குபற்றுவர். எனினும் மருந்துகளை விநியோகம் விடயத்தில், நியாயமாக செயல்வதை மருத்துவரே மேற்கொள்கிறார். எவ்வளவு மருந்து விநியோகிக்கப்படுகிறது, அது எவ்வாறு நோயாளிக்கு உதவ முடியும், சாத்தியமான தீய விளைவுகள், எக்கொள்வு வேண்டிய முன்னெச்சரிக்கை போன்ற அடிப்படை விடயங்கள் கூட நோயாளிக்குத் தெரிவிக்கப்படுவதில்லை."

மேலும் உலகில் இவ்வாறு நோயாளருக்குத் தகவல் தரப்படாமை மருத்துவர்கள், நோயாளர்கள், கல்வியறிவற்றவர்கள் என்ற காரணத்தைக் கூறி நம்பிக்கை காத்துக் கொள்கின்றனர். இந்நிலை, கல்வியறிவுள்ளவர்களுக்குக் கூடத் தகவல் தரப்படுவதில்லை என்பதையும், தனியாரான வெழுதியே கூறுகிறார் கல்வியறிவுள்ளவர்களும் புரிந்து கொள்ளப் பல்பலவும் புறக்கணிக்கின்றது. அண்மையில் நடைபெற்ற இலங்கை மருந்துவச் சங்கத்தினுடைய கிராமிய கூட்டத்தில் கொழும்பு மருத்துவர் குழுவொன்றினால் "மருந்திய கொழும்பு மருத்துவமனையில் பட்டிருக்கும் மருந்து தயாரிப்பின் பகுப்பாய்வு" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் கட்டுரையொன்றில் பகுதியுள்ளதாகவும் கருத்துப்படுத்தப்பட்டன. இவ்வாய்வினிலிருந்து, விநியோகிக்கப்படும் மருந்துகளில் 48 சதவீதமானவை மட்டுமே அவற்றின் இனப் பொதுப் பெயரால் குறிப்பிடப்படுகின்றன என்பது தெரிய வந்தது. இவ்வாய்வின்படி ஒரு மருந்துப்பட்டியலுக்குச் சராசரி 11.22 ரூபா செலவாகிறது, எனினும் மருந்துகளும் இனப் பொதுப் பெயரால் குறிப்பிடப்படுமாயின் ஒவ்வொரு பட்டியலுக்கு 13.00 ரூபா குறைவாகச் செலவாகும். பட்டியல்களில் மருந்துகள் இனப்பொதுப் பெயரால் குறிப்பிடப்படாவிடில் நோயாளியின் செலவு மருந்தாழ 17 சதவீதத்தால் அதிகரிக்கும். ஆனால், 50 புள்ளிகளில் 60 சதவீதத்திற்குக் குறைந்தவாறேனும் மருந்துகளில் இனப் பொதுப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும், பெரும்பாலான மருந்துப் பட்டியல்களில் மிகக்குறைந்தளவு விலையுடையேனும் தரப்படுவதில்லை என்றும் இவ்வாய்வு கூறுகிறது. போலிக்குரிய உற்பத்திப் பொருட்களை தெரிவுக்கதிகம் விநியோகிக்கப்படுகின்றன.

பேராதனையைச் சார்ந்த மற்றொரு மருத்துவர் குழு சமர்ப்பித்த "இலங்கையில் கலைதாரவாதிகளிடையே மருந்து: நிபுணர் கருத்து" என்ற தலைப்பிலான ஆய்வும் பல்வேறான தகவல்களையே தருகிறது. இவ்வாய்வில் ஒரு பட்டியலில் சராசரி எண்ணிக்கை (மாதம் ரூ.1500) பொதுவாக மருத்துவ ஆசிரியர்களின் கருத்துகள் தொகுத்துத் தரப்படுகிறது. இவை விஷயமறிந்தவர்களின் கருத்துக்களாகக் கொள்ளப்பட்டன. காரணம் மாடசாலை ஆசிரியர்கள் பலவாக இருப்பதுடன் சமுதாயத்தில் அறிவுமிக்க ஒரு குழுவினராகவும் கருதப்படுவதாகும். எமுமாவும் உயரும் அளவு கூடுதலாக நாடும் போக்கு இவர்களிடம் காணப்படும் ஒரு பொதுவான போக்காகும். இருக்கலாமென, இக்குழுவில் 77 சதவீதமானோர் இரகசியமாக மேலதிக மருந்துவழங்கிய நாட (21 சதவீதமானோர் சமயா சமயத்தில்) 18 சதவீதமானோர் மட்டுமே இரகசியமாக ஆயுர்வேத மருந்துகளை நாடுகின்றனர். (சில சந்தர்ப்பங்களில் மட்டும் அவர்களாகவுமுள்ள நாடுவோர் 61%). இவர்களுள் சுமார் 75 சதவீதத்தினர்தாம் மருந்து மருத்துவர் குறிப்பிட்டனர். இக்குறிப்பிட்ட குழுவினர் பொருத்தமானதாக ஒரு பொது மருத்துவரிடம் செல்கின்றனர், மற்றவர்கள் மிக அண்மையிலுள்ள அரசாங்க மருத்துவச்சாலைக்கு பெரிய மருத்துவச்சாலைக்கு அல்லது ஒரு சிறப்பறிவுடையோரிடம் செல்வர். (மேலு ஆய்வுகளின்படி குறைந்த வருமான முடையோரிடையே இப்போக்கு விதிவிலக்காகவுமுள்ளதாக கணப்படுகிறது).

கருவுறுதலிலிருந்தும் காலத்தில் வழக்கமான பராமரிப்பும் நோய் எதிர்ப்புச் சிகிச்சையும் பொதுவாக மருத்துவச்சாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அதே வேளையில் குடும்பக் கட்டுப்பாடு, பிறப்பாக்கம், நோய்கள் குறிந்த நோயுக்கிப் பொறுத்தவரை பொது மருத்துவர்களின் ஆலோசனை நாடப்படுகிறது. இருதயநோய்கள் போன்ற குறிப்பிட்ட நோய்களைப் பொறுத்தவரை மட்டுமே பெரிய மருத்துவச்சாலைகளில் அல்லது மருத்துவ நிபுணர்களிடம் பரிசோதனை நடத்தப்படுகிறது.

நாட்டுள் கலைதாரவாதிகளுக்கு திட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், 80 சதவீதமானோர் மாட்டுள் பொருட் மகாதார நிலையத்திடம் மிக மோசமானது என்று கருதுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்லை என்பதுவரை பல்வேறு கருத்துக்களை வெளியிட்டனர். மறுபுறம் 78 சதவீதமானோர், நோய்த் தடுப்புத்திட்டம் நல்லதென்றும் உத்தமமானதென்றும் மதிப்பிட்டனர். பெரும்பாலானோர் குடும்பத்திட்டம், பிரசவப் பராமரிப்பு, பல் பராமரிப்புத் திட்டங்களை மத்திமமானதென்றும் அதற்கும் குறைந்ததென்றும் மதிப்பிட்டனர். உள்ளூர் மருத்துவச்சாலைகளில் அளிக்கப்படும் சேவை 15 சதவீதத்திற்கும் குறைந்தவர்களுக்கே திருப்தியளித்தது. உள்ளூர் மருத்துவச்சாலைகள் மருந்துத் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகவுள்ளது. மேலும், 53 முதல் 63 சதவீதமானோர் குறிப்பிட்ட பிரச்சினைகள் உணவின் தரம், பதவியினரின் இங்கிதம், மந்தமான சேவை என்பனவாகும். மருத்துவர்கள் கிடைக்காமை 59 சதவீதமானோருக்குப் பிரச்சினையாக இருந்தது.

நகரின் பெரிய மருத்துவச்சாலையின் ஒரு பெரும் பிரச்சினையாதெனில் மருந்துகள் இல்லாததாகும். (மோசம் - படுமோசம் 82%). இம் மருத்துவச்சாலைகளில் 7 சதவீதமானோருக்கு மட்டுமே உணவின் தரமும், பணியாளரின் இங்கிதமும் திருப்தியளித்தது. இக்குழுவினர் சுகாதாரச் சேவைகளை விருத்தி செய்வதற்குத் தெரிவித்த கருத்துகளில் ஒன்று புறஎல்லை மருத்துவசாலைகளை அபிவிருத்தி செய்வதாகும்; அத்துடன் கொழும்பில் சிறப்புச் சேவை கூறுகளை அதிகரிக்க வேண்டும் (84%); கூடிய எண்ணிக்கையில் மருத்துவர்களைப் பயிற்றுவதற்கு மருத்துவமாணவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும் (87%). தற்போதைய பற்றுக்குறையை நீக்குவதற்கு வெளிநாட்டு மருத்துவர்களை வரவழைப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை (88%); அரசாங்க மருத்துவசாலைகளில் கட்டணம் அறவிட வேண்டும் (59%) மேலும், அதிகம் மருத்துவர்கள் தனிப்பட்ட மருத்துவத் தொழிலை மேற்கொள்ள அல்லது குடும்ப மருத்துவர்களாக ஆவதற்கு உற்சாகமளிக்கப்பட வேண்டும் (55%).

இலங்கைக் குடிசனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட சமூக - பொருளாதார ஆய்வின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து சுகாதார சேவைகள் இந்நாட்டில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றியும் பல்வேறு தரப்பட்ட வருமானமுள்ள குழுக்களின் செலவுப் பாங்கு பற்றியும் ஒரு பொதுவான கருத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அகில இலங்கையிலும் குடிசனத்தில் 80 சதவீதமானவர்கள் மேனாட்டு மருத்துவமும், 14 சதவீதமானோர் ஆயுர்வேத மருத்துவமும் செய்துகொள்கின்றனர் 1981/82 ல் நடாத்தப்பட்ட இவ்வாய்வு மாதிரிக்காகத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் 4,300 பேரில் 1959 பேர் (46%) மேனாட்டு மருந்துவத்தை நாடினர்; 1471 பேர் (34%) தனியார் மேனாட்டு மருத்துவர்களை நாடினர்; 519 பேர் (12%) தனியார் துறை ஆயுர்வேத மருத்துவத்தையும் 94 பேர் (2%) அரசாங்க ஆயுர்வேத மருந்துவத்தையும் நாடினர். 15 பேர் (.3%) ஹோமியோபதி முறையிலும், 6 பேர் (.1%) அக்யுபங்கர் முறையிலும் 236 பேர் (5.5%) வேறு முறைகளிலும் சிகிச்சை பெற்றனர்.

இவ்வாய்வு 1981/82 ல் செலவிடும் கூறு ஒன்றின் (பொதுவாக ஐவரைக் கொண்ட ஒரு குடும்பம்) மாதாந்தச் சராசரிச் செலவு (உணவு தவிர்ந்த நீடித்து உழைக்காத பொருட்களுக்கானது) 552.27 ரூபா என்றும் 24.77 ரூபா அல்லது 4.5 சதவீதம் மருந்துவச் செலவு என்றும் காட்டியது.

ஒரு ஆளுக்கான சராசரி மருத்துவச் செலவின் அடிப்படையில், எல்லாமடங்கிய செலவில் 74 சதவிதம் மேனாட்டு மருத்துவத்திற்காக மேற்கொள்ளப்படு

அரசாங்க வைத்திய அதிகாரிகள் 1985

சுகாதார மாவட்டம்	சிகிச்சை சேவைகள்		நிர்வாக தடுப்புச்சேவைகள்		சுகாதார மருத்துவ அதிகாரிகள்	
	எண்.	விகி.*	எண்.	விகி.*	எண்.	விகிதம் *
கொழும்பு	659	36.1	13.	0.7	10	0.5
கண்டி	200	17.8	7	0.6	6	0.5
யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி	138	15.5	6	0.7	7	0.8
மட்டக்களப்பு	43	12.1	3	0.8	3	0.8
காலி	92	10.5	2	0.2	6	0.7
களுத்துறை	86	9.6	11	1.2	8	0.9
கம்பகா	125	8.4	3	0.2	9	0.6
பதுளை	93	7.7	4	0.6	2	0.3
இரத்தினபுரி	65	7.6	5	0.6	4	0.5
திருகோணமலை	20	7.3	1	0.4	1	0.4
குருணைகல்	80	6.1	3	0.2	9	0.7
புத்தளம்	32	6.0	2	0.4	4	0.7
மாத்தளை/பொலனறுவை	37	5.6	3	0.4	2	0.3
அநுராதபுரம்	35	5.5	1	0.1	3	0.5
கேகாலை	39	5.3	-	-	6	0.8
மாத்தறை/அம்பாந்தோட்டை	53	4.6	1	0.1	11	0.9
நுவரெலியா	30	4.6	1	0.1	2	0.3
அம்பாறை	16	3.8	1	0.2	2	0.5
மொனராகலை	7	2.4	-	-	2	0.7
வவுனியா/மன்னார் முல்லைத்தீவு	7	2.3	2	0.7	2	0.7
விசேட இயக்கங்களும் ஏனையவும்	97	0.6	69	0.4	-	-
மொத்தம்	1,914	12.0	137	0.8	99	0.6

மூலம்: வைத்திய புள்ளி விவரப் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு எனக் கணக்கிடப்பட்டு முழுமொத்த மிகைக்கு 150.6 சதவிதம் கடன்களாகவும், மற்றும் கடன் பொன்றுவழங்கும் அலகுகளுடன் தொடர்பான செலவுகளாகவும், மாறும். முறைமுக்கு மாதம் ஒன்றுக்குச் செலவிடப்படும் தொகை 7 ரூபா 1 சதம். நகர்ப்புறங்களில் ஒருவருக்கான செலவு இரண்டு விடக் கூடியதாகும் (ரூ. 9.04); தோட்டப் பிரதேசங்களில் மிகக் குறைவாகும் (ரூ. 3.04). கிராமப்புறங்களில் மருந்துச் செலவு சராசரி ஒருவருக்கு 4.24 ரூபா. அத்துடன் பிரயுப்புறங்களில் ஒருவரது மிகைக்கான அதிக பணம் செலவிடப்படுகிறது. தோட்டத்துறையில் மேலுட்டு மருந்துவத்துக்காகவே அதிக பணம் செலவு செய்யப்படுகிறது; நகர்ப்புறங்களிலேயே மேலுட்டு மருந்துவத்துக்காக ஒருவருக்கு மிகக்கூடிய தொகை செலவிடப்படுகிறது (ரூ. 7.18).

மாதிரிக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களிடை ஆய்வு நடைபெற்ற 14 நாட்களில் நோய் வாய்ப்பட்டோர் பொதுவாகக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர் என்பதும் தெரியவந்தது. ஏறத்தாழ 50 சதவிதமானோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டனர். இவர்களில் 5 சதவிதமானோருக்குப் பத்துடன் சமாந்தரமாக அல்லது தனிப்புக் கொள்ளாமலும் இருக்கக் காணப்பட்டது. மேலும் 25 சதவிதமானோருக்கு இருமலும், மூச்சுத் திணறலும் இருந்தன. 11 சதவிதமானோரும் வயிற்றோட்டம், வாந்தி மற்றும் வயிற்றுக் கோளாறுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டனர். 9 சதவிதமானோருக்கு மூட்டுநோய் பிரச்சினைகள் இருந்தன.

முன்னர் மத்திய மாகாணத்தில் நடாத்தப்பட்ட இத்தகைய ஆய்வுகள் மேலுட்டு மருந்துவத்தை நாடும் எல்லா வகை நோயாளர்களதும் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்பதைக் காட்டுகிறது. கிராமக் கட்டங்களில் தகுதிவாய்ந்தவர்களே பெரும்பாலும் மேலுட்டு மருந்துவத்தை நாடினர். அந்த வேளையில் சுன்னாட்டு மருந்துவர்களுக்கு புறனடிப் பகுதிகளில் அதிக கிராக்கி இருந்தது. மேலும், 1950, 1960 ஆம் ஆண்டுத் தொடக்கங்களில் மருந்துவ விநியோகத்தில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டபடியால் மருந்து வகைகளைப் பிரிக்கப் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை தவிர்ப்புமுக்களில் முக்கியக் கவனத்து மிருபடுத்தப்பட்டு வந்தமையினால். மேலுட்டு மருந்துகளின் தனித் துவப்படுத்தும் தன்மை கவனமாகக் கருதப்படாமல் மக்களைப் போல் கிராமப்புறத்தவர்களும் அதனைக் கருதுவதாக விருப்பினர். என்று இந்த தகவல்களில் மிகக்குறைந்த வருமானமுடையவர்கள் மத்தியிலேயும் மேலுட்டு வைத்தியத்துக்கான செலவு குறிப்பாக அதிகரித்து வந்தது. உயர்ந்த வருமானமுள்ளவர்களை விட மிகக் வறியவர்கள் நோயினால் கஷ்டமுடையவர்களாகக் கருதப்படுகின்றனர் என்பது தெளிவு.

1963ல் மாத வொன்றுக்கு 100 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெற்றகுடும்பங்கள் மேலுட்டு மருந்துவத்துக்காக தம் வருமானத்தில் 0.16 சதவிதத்தைச் செலவிட்டன. இவ்விகிதம் 1973ல் 0.55 சதவிதமாகவும் 1983ல் 0.83 சதவிதமாகவும் அதிகரித்தது. 1973க்கும் 1978க்கு மிடையில் இச்செலவு 3 மடங்குக்குமேல் அதிகரித்து 1982ல் மேலும் அதிகரித்தது. குறைந்த வருமானமுடையோர் கூடுதலாக மேலுட்டு மருந்துவத்தில் அதிகமதிகம் தங்கியிருப்பதற்குப் பல காரணங்களுண்டு.

(அ) ஆகாயவழி போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்காகக் காடுகளும் இயற்கைத் தாவரங்களும் அழிக்கப்பட்டதனால் உள்நாட்டு மருந்துகள் கிடைப்பது அரிதாகிவிட்டது.

(ஆ) பிரதான அபிவிருத்தித் திட்டங்களில் வருமானம் குறைந்தவர்களுக்கு மேலுட்டு அடிப்படை மருந்துவ வசதி மறுக்கப்பட்டமை.

(இ) நீர்ப்பாசன அபிவிருத்தியின் விளைவாக வயல்களில், கழிவு நீர் முகாமைப் பிரச்சினை கிளைவிடுதல் அதனால் நீர் மூலம் பரவும் நோய்கள் கிராமப்புறங்களில் அதிகரித்துள்ளமை. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேலுட்டு மருத்துவ முறையை விரிவாக்குதல் அவசியமெனக் கருதப்படுகிறது.

(ச) அதிகரித்துவரும் வாத்தக மயமாக்கல் காரணமாகவும் பணப்பயிர்ச் செய்கை அதிகரித்திருப்பதாலும் குறைந்த வருமானமுடையவர்கள் முன்னர் போல பேரூராக்குள்ள எல்லையாவை உணவுட்கொள்ள முடியாமையும். இதனால் அவர்களிடையே அடிக்கடி நோய் ஏற்படுவது அதிகரித்துள்ளது.

(ட) இலவச மேலுட்டு மருந்துவ முறை பாரிய மனோபாவமும் இரண்டிய வறிய மக்களிடையே மாற்றமடைந்து வருகிறது.

உயர் வருமானக் குழுவினரிடையே நோய்கள் அடிக்கடி ஏற்படுவதைக் விருத்திவரும் கூகாகார தீங்கான, பிறப்பான நோய்களுடனும் தொடர்புறுகின்றன. உயர் வைத்திய தொழில்நுட்பம், வைத்திய நிபுணர் சேவை என்பன கிடைக்கப்பெற்றமையே போன்ற முக்கிய காரணங்களாக இருந்தன. மேலும், பெரும்பாலான உயர் வருமானக் குழுக்கள் சுகாதாரப் பாதுகாப்பு பொன்றை எதிர்பார்த்துப் பெற்றிருந்தமையால் மேலுட்டு வைத்தியச் சேவைகளை இவர்களதுகள் மூலம் நாடுகின்றனர். மேலும், 1963 இலிருந்து 1983 வரை நடைபெற்ற முற்றும் முழுதான மாற்றங்கள், உயர் வருமான வகுப்பினரைவிட மூன்று வருமான வகுப்பினர் தமது வருமானத்தில் அதிக சதவிகிதத்தினை மேலுட்டு வைத்தியத்துக்கு செலவிட்டு வந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்களின் முக்கியத்துவம்

நாட்டின் அபிவிருத்தி வேகத்தினை நிலைநிறுத்துவதில் கைத்தொழில் பன்முகப்படுத்தலினதும், வளர்ச்சியினதும் பங்கு 1980 களிலும் 1990 களிலும் முக்கியத்துவம் மிக்கதாக இருக்குமென கருதப்படுகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் வருமானம், வேலைவாய்ப்பு, ஏற்றுமதி என்பவற்றை இலக்காக கொண்ட போட்டித்திறனும், ஆற்றலும் மிக்க கைத்தொழில் துறையொன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. எனினும், இலங்கையின் கைத்தொழில் துறையானது, சிறிய உள்ளூர் சந்தை, குறுகிய தொழில்நுட்ப அடித்தளம், புதுமை, விருத்தி என்பவற்றுக்கான போட்டியின்மை போன்ற தடங்கல்களை வெற்றி கண்டால் மட்டுமே மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைய முடியும்.

பெரும்பாலும் உற்பத்தித் தயாரிப்புக்களான துணிகள், உடுபுடவைகள், உணவு, பானவகைகள், புகையிலை, மரம், சாகிதாகிகள் ஆகியவை 1990 ம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 4 சதவீத வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், சிறியளவிலான முயற்சிகளின் பெரும் பண்பையும், உற்பத்திப் பெறுமதியின் அதிகரிப்பினையும் பெற்றதுமான இத்துறையின் வளர்ச்சி அண்மைக் காலங்களில் தேய்ந்து செல்லும் போக்கினையே காட்டுகின்றது.

சிறப்பாக மரபுரீதியான சிறிய அளவிலான கைத்தொழில் முயற்சிகட்கும் பாரிய முயற்சிகட்குமிடையே இடையேயுள்ள வேறுபாட்டை இணைக்க எடுத்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் எவ்வித இணைப்புமின்றியே காணப்பட்டன. இந்நிலையே பாரிய தொழில் முயற்சியாளர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிறிய அளவிலான முயற்சிகளை, உப - ஒப்பந்த மாற்று (Sub Contract - Ecchange.) என்ற அடிப்படையில் கைத்தொழில் அமைச்சு அவர்களை ஊக்குவிப்பதற்குக் காரணமாகவிருந்தது.

அத்துடன் பெரிய அளவிலான உற்பத்தியாளர்களதும் பொதுத் துறையினரதும் தேவைகளை கண்டுகொள்ளக் கூடியதாக இருந்ததுடன், சிறிய நடுத்தர முயற்சியாளர்களது இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்து முன்னேற்றம் காண்பதற்கும் வழிவகுத்தது. உப-ஒப்பந்த மாற்று (SCF) மூலம் பெறப்பட்ட கட்டளைகளின் பெறுமதி 1984 ல் 17 லட்சம் ரூபாவாக இருந்து 1985 ல் 1 கோடியே 72 லட்சம் ரூபாவாக உயர்ந்தது. இது முழு அளவிலான கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். உள்ளூரில் போதிய நிதி வசதியின்றி சிறிய கைத்தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்ய முடியாது இருந்தவர்களுக்கு மிகவும் பேருதவியாக இருந்தது- சிறிய மத்திய தரக் கைத்தொழில் நிதித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட இலகு முறைக்கடன் திட்டமாகும்.

சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) 1979 ம் ஆண்டு இலங்கைக்கு வழங்கிய 1 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர்களைக் கொண்டே சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கைத்தொழிற் துறையின் அபிவிருத்திக்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் வழங்கிய கடன்வசதி மிகவும் இன்றியமையாததாகும். அக்காலத்தில், கடன்களை அறவீடு செய்வதில் தாமதம் ஏற்படக் கூடிய கைத்தொழில் துறைக்கு கடன் வசதிகளைச் செய்வதிலும் பார்க்க, குறுங்காலத் தேவைக்குக் கடன்களை வழங்கி பணவருவாயைப் பெறத்தக்க வர்த்தகத் துறையினருக்கு கடன் வழங்குவதே முக்கியத்துவம் பெற்றிருந்தது. எனவே ச. அ. சங்கமானது தன்னிடமிருந்து 1 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர்களையும், நிறுவன ரீதியான கடன் வசதிகளைச் செய்யும் உள்ளூர் கடன் நிறுவனங்களான மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் முதலியவற்றிற்கு வழங்கியது.

இத்திட்டத்தின் பிரதான அம்சம் என்னவெனில் பங்குபற்றும் நிதிநிறுவனத்தினால் வழங்கப்பட்ட 80% கடன் தொகையானது, கடன் வழங்கும் நிறுவனத்தினால் மீள நிதியளிப்புச் செய்யப்படுவதாகும். இத்தொகையினை தேசிய அபிவிருத்தி வங்கியே வழங்கும். மிகுதி 20% வீதமும் குறிப்பிட்ட வங்கிகள் தங்கள், சொந்த மூலதனத்திலிருந்தே கொடுக்கவேண்டியது அவசியமாகும். இலங்கை மத்திய வங்கியானது, நிதி நிறுவனம் வழங்கிய 60% கடன் தொகைக்கு கடன் உத்தரவாதத்தினை வழங்கும்.

கடனுக்கான வட்டி 15% ஆகும். அதனை மீளச் செலுத்தும் காலம் 10 ஆண்டுகளும் 2 ஆண்டு தாட்சண்ய காலமுமாகும். இவ்வாறு சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் சிறிய மத்திய தர கைத்தொழிற்கடன் - I திட்டம் எனப்படும் முதலாம் கட்டத்தில் புதிய முயற்சிகட்கு வழங்கப்படும் கடன் எல்லை ரூ. 20 லட்சமாகும். ஏற்கெனவே செயற்படும் திட்டங்களை விஸ்தரிப்பதற்கு வழங்கப்படும் கடன்தொகை ரூ. 10 லட்சமாகும். சிறிய மத்திய தர கைத்தொழில் திட்டம் - I ன் கீழ் 1981 ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 22 கோடி 95 லட்சமாகும்.

சிறிய மத்திய தரக் கைத்தொழில் கடன் திட்டத்தின்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்புகளில் அண்மைக்காலப் போக்கு

மத்திய மாகாண ஆட்புலங்களின் படி 1985ல் உப அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்புகள் முன்னுக்கு தொடர்ந்தும் அரசாங்கத் துறையிலும் ஒழுங்கு அமைந்த, அமையாத தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது. 1984ல் அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்பு 7,597 பேரால் அல்லது 1.5 சதவீதத்தினால் அதிகரித்ததென்று ஆரம்பகால மதிப்பீடுகள் காட்டுகின்றன. (1985ல் ஏற்பட்ட அதிகரிப்பு 8874 பேர் அல்லது 1.3 சதவீதமாகும்). புதிய வேலை வாய்ப்புகள், கல்வி, விவசாயம், கால்நடை உற்பத்தி, சுகாதாரம், நிர்வாகம், கணக்காய்வு, மாவட்ட நிருவாகம், உடலுழைப்பு, சிவறுச்சாலை ஆகிய துறைகளிலேயே ஏற்பட்டன. மறுபுறம், காணிக் குடியேற்றம், எரிபொருள் தொழில், பொருளொரு அபிவிருத்திச் சேவைகள் என்பவற்றில் வேலைவாய்ப்புகள் குறிப்பிடத்தக்கவாறு குறைந்தன.

அரசாங்கத்துறை

அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்புகள் சிறிய அளவுக்கு அதிகரித்தன. குறைந்தளவுக்கு நடைமுறையிலுள்ள தாமதங்களும், உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேட்பாளர்களின்மையும் காரணமாகும். மத்திய வங்கியின் புள்ளிவிபரப்படி நடைமுறையிலுள்ள அரசாங்கத்துறையில் 23,600 நிரப்பப்படாத வெற்றிடங்களும், மேலும் அரசாங்கத்துறையில் 21,700க்கு மேற்பட்ட நிரப்பப்படாத வெற்றிடங்களுமிருந்தன. 1984ல் இது முறையே 13,500க்கு மேற்பட்டும் 18,000க்கு மேற்பட்டுமிருந்தன. அரசாங்கத் துறையில் மிகப் பெருந்தொகையான வெற்றிடங்கள் ஆசிரியர்பதவிகளிலும் (37 சதவீதம்) சிற்றூழியர் துறையிலும் இருந்தன. மொத்த வெற்றிடங்களில் சுமார் 18 சதவீதம் உபதரங்களிலும், சுமார் 10 சதவீதம் நிலஅளவைத் திணைக்களங்களிலும் இருந்தன. இவை நிரப்பப்படாதிருந்தமைக்கான பிரதான காரணம் நடைமுறை தொடர்பான தாமதங்களாகும். சுமார் 7 சதவீதமானவை பொருத்தமானவர்கள் கிடைக்காததால் நிரப்பப்படாதிருந்தன. ஏதேனுமொரு 5 சதவீதமான வெற்றிடங்கள், அரசாங்கத் தரவுகளில் வெளியீடு முறையாதற்காக இவை முடிவடையுமுன்னர் அல்லது சுருக்கப்படுவதற்கு நிரந்தரமாகவே நிரப்பப்படாதிருந்தன.

உப அரசாங்க நிறுவனங்கள்

உப அரசாங்க நிறுவனங்களில் நிர்வாகரீதியான வெற்றிடங்களே மிகப் பெருமளவில் காணப்பட்டன (19 சதவீதம்). உபதரங்களிலான வெற்றிடங்களிலிருந்து விதிவிலக்காகவும் குறிப்பிடத்தக்கதாகும் (18 சதவீதம்). இவற்றை நிரப்பாது விட்டமைக்கு முதன்மை காரணம் பொருத்தமான ஆட்கள் கிடைக்காதமையாகும் (29 சதவீதம்). சில வெற்றிடங்களை நிரப்பமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டதால் 13 சதவீதமான வெற்றிடங்களும் நடைமுறை தொடர்பான தாமதங்களால் 5 சதவீதமானவையும் நிரப்பப்படவில்லை.

உப அரசாங்கத் துறையில் 1981ல் காணப்பட்ட வேலைவாய்ப்புக் குறைவுப் போக்கு 1985லும் தொடர்ந்தது. இதற்கான முக்கிய காரணம், பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த தொழிலாளர் தொழிலை மீளமைப்பும் செயற்கை விலைவாசி அமைந்த தொழிலாளர் வேலை நுண்ணுக்கப்பட்டமையாலும், ஆம்புலன்சுத்தாக்கு அறிவிருத்தி, கனரகப் பொருளுற்பத்தி, சிமெந்து, கடதாசிப் பொருட்கள், இறும்பு உருக்கு, பொதுமக்களின் வழங்கல் ஆகிய துறைகளிலும் வேலைவாய்ப்புகள் குறைந்தன. இதற்குமாறாக பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி, கட்டிடப் பொருட்கள், பயிர்ச் செய்கைகள், புடைவை ஆகிய உற்பத்தித் துறைகளிலும் விடைமைப்பு அபிவிருத்தி, பொக்குவரத்து ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்கவாறு வேலை வாய்ப்புகள் அதிகரித்தன.

தனியார் துறை

தனியார் துறை வேலைவாய்ப்புகளில் குறிப்பிடத்தக்கமாற்றம்

ப. கொ. பொ. மு. வே. று ஆ. குழு. உ. மு. ரூ. த. இடங்களில் வேலைவாய்ப்பு ஆறுதல் 1978-86

வருடம்	ப. கொ. பொ. மு. வேலை வாய்ப்புக்கள்	வெ. மு. ஆ. த. வருடாந்த வேலைவாய்ப்பு அதிகரிப்பு	உ. மு. ஆ. த. வருடாந்த வேலைவாய்ப்பு அதிகரிப்பு
1978	261	5,287	18,518
1979	5,876	15,608	32,617
1980	10,502	14,680	15,071
1981	19,727	14,416	11,023
1982	24,020	12,717	8,420
1983	28,705	15,715	10,033
1984	32,725	10,040	21,521
1985	35,788	4,885	12,850
1986	40,047	350	
மூன. தவ. மொத்தம்	48,047	103,997	133,471

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டதற்கான அறிகுறிகளில்லை. இத்துறையில் வருடாந்தத் தரவு முறை ஒன்று இல்லாமை குறித்து வங்கி கவலை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட அரசாங்க, தனியார் துறை வரையறுத்த பொறுப்புடைய கம்பனிகளின் வர்த்தக முயற்சிகள், திட்டமிட்ட முதலீடு என்பன பற்றிய அளவையின்படி, முந்திய ஆண்டைவிட 8.6 சதவீதம் அதிகரிப்பு வேலைவாய்ப்பில் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1985/86 ம் ஆண்டில் 10.8 சதவீத அதிகரிப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் துறையில் வேலைவாய்ப்பு உருவாக்கல் பற்றிய மற்றொரு காட்டி யாதெனில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு, வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு, உள்நாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகள் பற்றிய பதிவுச் சுவடிகளாகும். சென்ற ஈராண்டுகளாக உள்ளாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவின் தொழிலாளர் சேர்ப்புத்திறன் குறைந்து வந்துள்ளது. 1984 ல் உ.மு.ஆ. குழு அங்கீகரித்த திட்டங்களின் வேலைவாய்ப்புத்திறன் 21,524 பேராகவிருந்தது. இது 1985 ல் 12,850 பேராக குறைந்தது. 1986 ல் 7,500 பேராகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெ.மு.ஆ. குழு அங்கீகரித்த திட்டங்களின் வேலைவாய்ப்புத்திறன் 1984 ல் 10,040 பேரிலிருந்து 1985 ல் 4339 பேராகக் குறைந்தது. எனினும், இது 1986 ல் சுமார் 7000 பேராக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் பா.கொ.பொ.ஆ.கு. வின் கீழ் வரும் முயற்சிகளின் தொழில்திறன் 1984 ல் 32,725 லிருந்து 1985 ல் 35,786 ஆக உயர்ந்தது. அதிகரிப்பு 3,061 ஆகும். 1986 ல் இவ்வெண்ணிக்கை 45,000 மாக அதிகரித்தது. இது ஒரு வருடத்திற்கு 9,000 பேரால் அதிகரித்தது. பா.கொ.பொ. குழுவின் கீழ் வரும் உற்பத்திக் கூறுகள் 1983 ல் 67 லிருந்து 1985 ல் 81 ஆகவும் 1986 நவம்பரில் 89 ஆகவும் அதிகரித்தது. இவை உற்பத்தி தொடங்கியதனால் மறைமுகமான வேலைவாய்ப்புகளும் உருவாகியிருக்கலாம். ஆனால் தரவுகள் இல்லாமையால் இதன் அளவைக் கணிப்பது சாத்தியமானதல்ல.

உல்லாசப் பிரயாணிகள் வரவு 402,349 லிருந்து குறையத் தொடங்கியது. 1983 ல் 317,734 பேர் வந்தனர். இது 1985 ல் 257,456 ஆகக் குறைந்தது; 1986 ஜனவரி முதல் நவம்பர் வரை வந்தவர்களின் தொகை 204926 ஆகும். இதன்விளைவு இத்துறையில் வேலை வாய்ப்பு அதிகரிக்காமல் இருப்பதும் சில பிரதேசங்களில் பலர் தம் வேலையை இழந்ததுமாகும். எவ்வாறாயினும் போக்குவரத்துத் துறையிலும் ஏற்றுமதி இறக்குமதித் துறையிலும் வளர்ச்சிக்கான அறிகுறிகள் தென்பட்டன. இதனாலும் இத்துறைகளில் தொழில் வாய்ப்புகள் அதிகரித்திருக்கலாம்.

(12ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் வழங்கப்பட்ட நிதியானது பெருமளவு கைத்தொழில் முயற்சியாளர்களை ஈர்த்துள்ளது என்பதை அறியலாம். 1981 ம் ஆண்டு வழங்கப்பட்ட கடன் தொகையில் அனுமதிக்கப்பட்ட 3350 கைத்தொழில்களில் 30 சதவீதமானவை உணவு பதனிடும் துறைக்கும், விவசாயக் கைத்தொழில் துறைக்குமே வழங்கப்பட்டுள்ளது. இத் கைத்தொழில்கள் யாவும் கட்டாயமாக உள்ளூர் மூலவளத்தைக் அடிப்படையாகக் கொண்டவையாக நாடு முழுவதும் பரவியிருந்தன. கட்டம் I ன் கீழ் வழங்கப்பட்ட 22 கோடி 95 லட்சம் ரூபா 1741 கைத்தொழில்களை அமைப்பதுடன், சுமார் 17500 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் என்றும் கணக்கிடப்பட்டது.

சிறிய மத்தியதர கைத்தொழிற்திட்டத்தின் இரண்டாம் கட்டமானது 1982 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. ச.அ.ச. இத்திட்டத்திற்கு 2 கோடியே 80 லட்சம் அமெரிக்க டொலர்களை இரண்டாம் தடவை வழங்கியது. இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட கடன் தொகை ஒரு திட்டத்துக்கு 20 லட்சம் ரூபாவாகும்; பின்னர் 1985 ம் ஆண்டு இது ரூ. 40 லட்சமாக உயர்த்தப்பட்டது. 1982 ம் ஆண்டு வரையும் வட்டி வீதமானது 18% ஆகவும், பின்னர் மே 1983 ல் 20% ஆகவும் அதிகரிக்கப்பட்டு மீண்டும் ஜூன் 1983 ல் 14% ஆகக் குறைக்கப்பட்டது. கடனை மீளச் செலுத்தும் கால எல்லை 20 வருடங்களாகும் மேலும் 2 வருட அவகாசமும் வழங்கப்பட்டது. செப்டம்பர் - 1986 வரை சி.ம.த.க. திட்டம் II ஆனது 15560 பேருக்கு வேலைவாய்ப்பினைத் தரக்கூடிய ரூ. 65 கோடியின் பெறுமதியான 1565 திட்டங்கட்கு நிதி உதவி வழங்கியிருந்தது.

மீண்டும் உணவு பதனிடும் துறைக்கு அதிகளவு கடன் வழங்கப்பட்டதுடன் பெருமளவு கடன் தொகையானது உலோக உற்பத்திகட்கும் கட்டிடப் பொருள்கட்கும் மரவேலை உற்பத்திக்கும் வழங்கப்பட்டது. இத்தகைய கைத்தொழில்களின் சிறப்பம்சங்களை அவற்றின் அமைவிடங்களில் காணலாம். சுமார் 20 வருடங்கட்கு மேலாக 1970ம் ஆண்டு வரை புதிதாக அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்கள் யாவும் 75 சதவீதமானவை கொழும்பு மாவட்டத்திலேயே (கம்பஹா மாவட்டத்தையும் உள்ளடக்கியது) அமைக்கப்பட்டன. சிறிய ந.கை.தின் மூலம் அனுமதிக்கப்பட்ட 1565 திட்டங்களில் 44% மாத்திரமே கொழும்பிலும் கம்பஹா மாவட்டத்திலும் அமையப் பெற்றன. காலி மாவட்டத்தில் 10% புத்தளம் குருணாகல், கேகாலை, மாத்தறை ஆகிய 4 மாவட்டங்களில் 6 வீதமும், அனுராதபுரத்தில் 5% திற்கு அதிகமாகவும், கண்டி இரத்தினபுரி ஆகிய ஒவ்வொன்றும் 4 வீதத்தினையும் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைபொருள்கள்

தேயிலை பயிர்விழ்ச்சியும் ஏற்றுமதி அதிகரிப்பும்

1986ம் ஆண்டு உற்பத்தியுடன் ஒப்புநோக்குகையில் இலங்கையின் தேயிலை உற்பத்தி 1986ல் 23 இலட்சம் கிலோவால் வீழ்ச்சியுற்றது. 1986ல் வருட அறுவடை 21 கோடியே 13 லட்சம் கிலோகிராமாக இருந்தது. 1985ல் இது 21 கோடியே 41 லட்சம் கி. கிராமாக இருந்தது. உலகின் மிகப்பெரிய தேயிலை உற்பத்தி நாடுகளின் விளைச்சல் 1986ல் குறைந்திருந்தது. குறிப்பாக வட இந்திய உற்பத்தி 1985ஐ விட 1986ல் 37 சதவீதத்தால் குறைந்தது. 1986ஆம் ஆண்டின் பெரும் பகுதியில் நிலவிய பாதகமான கால நிலை காரணமாகவே இலங்கையில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. 1986ம் ஆண்டின் முதற் கால் பகுதியில் உற்பத்தி 6 சதவீதத்தால் அல்லது 24 லட்சம் கி. கிராம்களால் குறைந்தது. இதற்குக் காரணம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சீரற்ற கால் நிலை நிலவியதாகும். இரண்டாவது காற்பகுதியில் முந்திய ஆண்டின் இரண்டாவது காற்பகுதியை விட உற்பத்தி 23 லட்சம் கி. கிராமினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு குறிப்பிடத்தக்கதல்ல. 1986ன் மூன்றாவது காற்பகுதியில் குறிப்பாகக் கடைசி இரண்டு மாதங்களில் மீண்டும் பயிர் வீழ்ச்சியுற்றது. 1986 ஆகஸ்டில் விசுத்தாழ்ந்த பயிர் உற்பத்தித் தொகை 1 கோடியே 19 லட்சம் கி. கிராமாக இருந்தது. இது 1985 ஆகஸ்டுடன் ஒப்பிடுகையில் 32 சதவீதம் குறைந்தாகும். 1986ன் மூன்றாம் காற்பகுதியின் இறுதியிலிருந்த பற்றாக்குறை 56 லட்சம் கி. கிராம்களாகும். இறுதிக் கால் பகுதியில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டது.

உயர அடிப்படையில் நோக்குகையில் அதி உயர்ந்த இடங்களிலும் நடுத்தர உயரங்களிலும் தேயிலை உற்பத்தி 1985ஐ விட 1986ல் குறைந்து காணப்பட்டது. மறுபுறம் தாழ்வான பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி 1960 முதல் அதிகரித்தே வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். இறுதியில் அதிஉயர், நடுத்தரப் பிரதேசங்களின் உற்பத்தியை தாழ்வான பிரதேச உற்பத்தி மிஞ்சிவிட்டது. 1986ல் தாழ்பிரதேச உற்பத்தி 8 கோடியே 90 லட்சம் கி. கி. ஆக இருந்தது. இது 1960ல் உற்பத்தியான 4 கோடியே 50 லட்சம் கி. கிராமின் இருமடங்காகும். 1985ல் 7 கோடியே 88 லட்சம் கி. கி. ஆகவும் 1984ல் 7 கோடியே 94 லட்சம் கி. கி. ஆகவும் இருந்த உயர்ந்த பிரதேச உற்பத்தி 1986ல் 7 கோடியே 70 லட்சம் கி. கி. ஆக வீழ்ச்சியுற்றது. நடுத்தர உயரப் பிரதேச உற்பத்தியானது, 1985ல் 5 கோடியே 53 லட்சம் கி. கி. ஆகவும் 1984ல் 5 கோடியே 45 லட்சம் கி. கி. ஆகவுமிருந்து 1986ல் 5 கோடியே 33 லட்சம் கி. கி. ஆகக் குறைந்தது. இவ்வகையின் குறிப்பிடத்தக்கதொரு அம்சம் யாதெனில், 1975 லிருந்து இவ்வகை உற்பத்தி குறைந்து வந்தமையாகும். அவ்வாண்டில் உற்பத்தியான தொகை 7 கோடியே 39 லட்சம் கி. கி. ஆகும். இக்கடுமையான வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணம், நடுத்தரத்தின் கீழ் நடப்பட்டிருந்த பொருளவு நிலப்பரப்பு, 1975 க்குப் பின் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக இழக்கப்பட்டமையாகும்.

ஏற்றுமதியம்

1986ல் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 1 கோடி கிலோகிராமினால் அதிகரித்தது. 1985ல் 19 கோடியே 80 லட்சம் கி. கிராமும், 1986ல் 20 கோடியே 80 லட்சம் கி. கிராமும் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1986ன் ஏற்றுமதி 1984ஐ விட 30 லட்சம் கி. கிராமினால் அதிகமானதாகும். இதற்கிடையில், தேயிலை ஏற்றுமதி வருமானம் 1985ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீதத்தால் குறைந்தது. இதற்கு சம்பத்த தளர்ச்சி காரணமாகும்.

1984ல் 15 கோடியே 70 லட்சம் கிராமாக இருந்த மொத்தத் தேயிலை ஏற்றுமதி 1986ல் 13 கோடியே 80 லட்சம் கி. கிராமாக வீழ்ச்சியுற்றது. மறுபுறம், பாக்கட்டில் அடைத்த தேயிலையின் ஏற்றுமதி அதிகரிப்பைக் காட்டியது. இது 1984ல் 4 கோடியே 60 லட்சம் கி. கி. ஆக இருந்து 1985ல் 5 கோடியே 50 லட்சம் கி. கிராமாகவும், 1986ல் 6 கோடியே 6 லட்சம் கி. கிராமாகவும் அதிகரித்தது. ஆனால் பைகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையில் தொகையில் மாற்றம் ஏற்படவில்லை. 1986ல் இவ்வகைத் தேயிலை 2 கோடியே 60 லட்சம் கி. கிராம் ஏற்றுமதி செய்யப்பட்டது. திடீர்த் தேயிலை, பக்கைத் தேயிலை வகைகள் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றுமதியாகவில்லை. 1986ல் 30 லட்சம் கி. கி. ஏற்றுமதியாயிற்று. திடீர்த் தேயிலையின் ஏற்றுமதியில் 1986ல் ஏற்பட்ட வீழ்ச்சி கவனிக்கத்தக்கதாகும்.

ஏமத்திய கிழக்கு நாடுகளில் இலங்கைத் தேயிலைக்குத் தொடர்ந்து கிராக்கி இருந்து வந்தது. 1986ல் ஏற்றுமதியான மொத்தத் தேயிலையில் இலங்கையின் பங்கு 58 சதவீதமாகும். இப்பகுதிக்கு 1985ல் 12 கோடியே 19 லட்சம் கி. கிராம் ஏற்றுமதி செய்யப்பட இது 1986ல் 11 கோடியே 64 லட்சம் கி. கிராமாக அதிகரித்தது. இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வதில் முதலிலை நாடு என்ற நிலையை இரண்டாம் ஆண்டாக ஏகிப்து நிலை நாட்டியது. அந்நாடு 1986ல் 4 கோடி கி. கி. தேயிலை கொள்ளனவு செய்தது. இது இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ 20 சதவீதமாகும். 1984ல் இந்நிலையை வகித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த சராசரி (மொத்தவிலைகள்) ரூ/கி.கி

1986		%	1985		%	1984		%
அக்டோபர்	30.99		அக்டோபர்	31.51		அக்டோபர்	64.66	
நவம்பர்	39.62	28.5	நவம்பர்	30.23	-4.1	நவம்பர்	65.13	.7
டிசம்பர்	42.86	7.6	டிசம்பர்	31.66	4.7	டிசம்பர்	63.42	-2.6

மூலம்; தரகர் அறிக்கைகள்

இராக் நாடு 1984 ல் 3 கோடியே 60 லட்சம் கி. கிராம் தேயிலை கொள்வனவு செய்தது. 1985, 1986 ஆம் ஆண்டுகளில் அந்நாடு இரண்டாம் இடத்தை வகித்தது. இராக் 1986 ல் 2 கோடியே 30 லட்சம் கி. கிராமும், 1985 ல் 2 கோடி 90 லட்சம் கிராமும் கொள்வனவு செய்தது. 1986 ல் இராக் இலங்கைக்கு பூரண ஆதரவளித்தது என்பதை தரகர்கள் கவனத்திற் கொண்டுள்ளனர்.

1986 ல் சவூதிய அரேபியாவின் பங்கு 1 கோடியே 30 லட்சம் கி. கிராமாகக் குறைந்தது. முந்திய ஆண்டில் அந்நாடு 1 கோடியே 40 லட்சம் கி. கிராம் இறக்குமதி செய்தது. சிரியாவும் முந்திய ஆண்டைவிடச் சிறிது குறைந்த அளவே இறக்குமதி செய்தது. ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் – ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து, ஜெர்மனி, ஆகியவையுட்பட – 1986 ல் 10 – 12 சதவீதம் அதிகமான தேயிலையை இறக்குமதி செய்தன. 1985 ல் 1 கோடியே 90 லட்சம் கி. கிராம் கொள்வனவு செய்த அந்நாடுகள் 1986 ல் 2 கோடி 50 லட்சம் கி. கிராம் கொள்வனவு செய்தன. ஐக்கிய இராச்சியம் 1985 ஐ விட 20 லட்சம் கி. கிராம் தேயிலையை அதிகமாக கொள்வனவு செய்தது. மொத்தக் கொள்வனவு 1 கோடியே 57 லட்சம் கி. கிராமாகும். எனினும், மேற்கத்திய கைத்தொழில் நாடுகளின் மொத்தக் கொள்வனவுத் தொகை குறைந்தது. அந்நாடுகளின் இறக்குமதிப் பங்கு 1986 ல் 11 சதவீதமாகவும் 1985 ல் 9 சதவீதமாகவும் இருந்தது. அவை 1986 ல் 1 கோடியே 79 லட்சம் கி. கிராமும் 1985 ல் 2 கோடியே 22 லட்சம் கி. கிராமும் இறக்குமதி செய்தன. கைத்தொழில் நாடுகளிடையே அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கொள்வனவு குறைய 1986 ல் யப்பானின் தேவை அதிகரித்தது. கனடா 4 கோடியே 60 லட்சம் கி. கிராம் கொள்வனவு செய்தது.

இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்யும் பிற நாடுகளிடையே பாகிஸ்தானின் தேவை 1986 ல் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. 1985 ல் 80 லட்சம் கி. கிராம் கொள்வனவு செய்த அந்நாடு 1986 ல் 1 கோடியே 40 லட்சம் கி. கிராம் கொள்வனவு செய்தது. ரஷ்யாவின் கொள்வனவு கடுமையாகக் குறைந்தது. 1984 ல் 96 லட்சம் கி. கிராம் கொள்வனவு செய்த ரஷ்யா 1985 ல் 86 லட்சம் கி. கிராமும், 1986 ல் 22 லட்சம் கி. கிராமும் கொள்வனவு செய்தது. இந்தியாவிடமிருந்து வியக்கத்தக்க அளவான 10 கோடி கி. கிராம் தேயிலையை வாங்கும் ரஷ்யர் இலங்கையிடமிருந்து கொள்வனவு செய்யும் அளவை எதிர்காலத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1987 ம் ஆண்டு ஆரம்பத்தில் ஒளி தெரிகின்றது

1986 ம் ஆண்டில் இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலானது மிகச்சிரமமான நிலைமை ஒன்றை எதிர்நோக்கியதுடன், அவ்வாண்டின் இறுதியில் தேயிலை வர்த்தகத்தில் ஒரு சாதகமான நிலை உருவாகியிருந்தது. 1985 ம் ஆண்டில் ஆரம்பித்த விலை வீழ்ச்சியானது 1986 ம் நடுப்படுத்தியில் மிக மோசமான மட்டத்தை அடைந்திருந்தது. 1986 ம் ஆண்டு ஜூன் மாதமளவில் தேயிலையின் சராசரி மாத விலையானது கிலோ ஒன்று ரூ. 25.11 கீழ் இறங்கியதுடன், இலங்கையின் மொத்த விற்பனை விலைகள் உற்பத்திச் செலவைவிடவும் மிகக் கீழ் மட்டத்தில் இருந்தன. 1985 ம் ஆண்டின் தேயிலையில் ஏற்பட்ட 6 கோடி கி. கிராம் மிதமிஞ்சிய வழங்கலே 1986 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிக்கான காரணமாக இருந்தது. அதேசமான, ஏனைய உற்பத்தி நாடுகள் இத்தகைய நிலையினை 1986 ம் ஆண்டின் மத்தியில் சீர் செய்து கொள்ளக் கூடியதாயிருந்த போதிலும், கொழும்பு விலைகள் மேலும் சரியத் தொடங்கின. மேலும், இத்தருணத்திலேயே இலங்கைத் தேயிலைக்கான எதிர்ப்பிரசாரம் ஆரம்பத்தில் இருத்ததனால், அது பெரும் தாக்கத்தை விற்பனையிலும் விலையிலும் ஏற்படுத்தியிருந்தது. நிலையான வாடிக்கையாளர்களது அச்சத்தினைப் போக்கி அவர்களுக்கு மீண்டும் நம்பிக்கையூட்ட பல மாதங்கள் தேவைப்பட்டன. இக்காலகட்டத்தினுள் கொழும்புச் சந்தை விலைகள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி தொடர்ந்தும் ஏனைய ஏல விற்பனவு நிலையங்களினது விலையிலும் கீழாகவே இருந்தன. அக்டோபர் 1986 லேயே தேயிலை விலையானது ஸ்திரமடைய காணப்பட்டது. நவம்பர் மாதத்திலே தெளிவான விலை அதிகரிப்பு ஏனைய விற்பனை நிலையங்களிலும் காணப்பட்டது. ஏல விற்பனை நிலையங்கள் தனிப்பட்டே செயற்பட்டன.

1986 ம் ஆண்டின் இறுதி ஏல விற்பனையின் சராசரி விலையானது கிலோ ஒன்று ரூ. 45 என்ற திருப்திகரமான விலையைக் காட்டியது. 1986 ம் ஆண்டில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியின் அளவைக் கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி விலையினை ஒப்பீடு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். 1984 ல் கிலோ ரூ. 62.79 ஆகவும், 1985 ல் கிலோ ரூ. 39.01 ஆகவும், 1986 ல் கிலோ ரூ. 30.68 ஆகவும் இவ்விலைகள் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் வளம் கைகழுவி விடுகிறது

எண்ணெய்க்களத்தில் உச்ச லாபக்கட்டத்தில் பல்லாயிரக் கணக்கான அரேபியர்களும், துருக்கியர்களும் அரேபிய எண்ணெய் வள நாடுகளை நோக்கி வேலை தேடி ஓடினர். எண்ணெய் விலை விழுந்தவுடனும், பொருளாதாரக் கட்டுமானத்தை தமது நாடுகளுக்கு வரும் இவர்களின் வேலையில் வளர்ச்சி, காலனி, நிலம் இல்லாமை, அரசுக் நிர்வாக வழியும் நலப்பணிகள் போன்று எவையே எதிர்நோக்கியுள்ளன.

எட்டு இலட்சத்துக்குமதிக மான இந்திய, பாகிஸ்தானியர் களும், 60 வீதம் அளவிலான மிகவறிய அரேபிய நாட்டவர்களும் 1980 துவங்கி எண்ணெய் வள வளைகுடா நாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். வளைகுடாக் நெருக்கடியே ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பொருளாதாரக் கஷ்டங்களை ஏற்படுத்துவதில் அவர்களது சொந்த நாடுகளுக்கு பாரிய சமூகப் பொருளாதார அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டுத் தொழிலாளர்கள் எண்ணெய் எண்ணெய்த் தொழிலிலே மாத்திரம் ஈடுபடவில்லை. சாரதிகளாகவோ, விற்றிகாரர்களாகவோ, வீட்டுப் பணியாளர்களாகவோ, கட்டுடத் தொழிலாளர்களாகவோ அவர்கள் எண்ணெய் வள நாடுகளை வளம்படுத்தத் தேவையான வேறெதை யெல்லாமோ செய்துவந்தனரே தவிர, பொருட்படுத்தப்படவில்லை. பொருட்படுத்தப்படவில்லை என்றால் அவர்கள் மனிதர்கள். அரேபியர்களல்லாத அரேபியர்கள், ஈரானியர், ஏமனியர், பாகிஸ்தானியர், ஆகிய நாடுகளிலிருந்து சென்றனர். அரேபியர்களோ, முக்கியமாக எகிப்து, ஜோர்டான், லெபனான் போன்று நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சர்வதேச தொழில் நிறுவனத்தின் தரவுகளின்படி, 1975-ம் அரேபிய நாடுகளிலுள்ள மொத்தத் தொழிலாளர்களில் 26.5% எகிப்தியர்களே எனினும் அரேபியர், துருக்கி, ஏமனியர், துக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்தவர்களாவர். அதேபோல் துனிசியர், மரோக்கியர், சுட்டான், துக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளிலும் வெளிநாட்டுத் தொழிலாளர்களே பெரும்பான்மையானவர்களாக இருந்தனர். மொத்தத் தொழிலாளர்களில், லிபியாவில் 42.5% ஏனும், சவுதி அரேபியாவில் 43% ஏனும் பெரும்பாலும் ஆசியாவையும் மிகவறிய அரபு நாடுகளையும் சேர்ந்தவர்களே. இரு தசாப்த காலப் பகுதியில் உண்மையிலே இதுவே.

இன்று பெருந்தொகையான வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வளைகுடாவை விட்டு வெளியேற வேண்டிய நிலை. மூட்டுமொத்தமாக கூறமுடியாதிருப்பினும் அவர்களின் எண்ணிக்கையில் காலவரையிலும் மேற்பட்டதாகிய, மிகவறிய அரேபியர்கள் 30 லட்சம் அளவில் ஏற்கனவே வெளியேறியிருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1985-ன் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 80,000 பேர் லிபியாவிலிருந்தும், 60,000 - 80,000 எகிப்தியர்களையும் லிபியாவில் வேலைநீக்கப்பட்டது, சவுதி அரேபியாவிலும், நியூயிலிருந்தும் அரசியல் சார்ந்த நடவடிக்கையாகவே கணிக்கப்பட்டது. இதனால் நியூயியா லிபியாவுடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டது. லிபிய அரசாங்கத்தினாலும் தொழிலாளர்களை அனுமதாது வைத்துக்கொள்ளவே முடியவில்லை. கேர்னல் கடாபியினது அரசாங்கம், மற்றெல்லா வளைகுடா நாடுகளும் வெளிநாட்டுத் தொழிலாளர்களை அதேவளவு விகிதத்தில் வெளியேற்றிக் கொண்டிருப்பதையே காட்டிக் காட்டியது.

பொதுவாக எண்ணெய் வள நாடுகள் வெளிநாட்டவர்கள் விலகுவது பற்றி கவலைகொள்ள வேண்டியே. சில நாடுகளும் குறைந்தளவு தேசிய சனத்தொகையைக் கொண்டமையினால், வெளிநாட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிடலாமென்ற அச்சமும் நிலவியது. ஆனாலும் நாட்டுள் அந்நியர்கள் அடியுன்றி விடாது பார்த்துக்கொள்வதற்கு வேண்டிய சவணம் எடுக்கப்பட்டது. நாட்டுக்குள்ளான அனுமதிக் கட்டுப்பாடுகள் எடுமையாக இருந்ததுடன் வெளிநாட்டவர்கள் மிகச் சில உரிமைகளையே அனுபவித்தனர். ஒரு வெள்ளிடிய குற்றம் கூட கடுமையாக நாடு கடத்தலிலேயே சென்று முடியும்.

எண்ணெய் வள நாடுகளின் தொழில் குறைப்பு நடவடிக்கை, இத் தொழிலாளர்களது தாய் நாட்டுமேல் மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். அவர்களே, தமது நாட்டின் அந்நியச் செலாவணிக்கு முக்கிய பங்களிப்புச் செய்கின்றனர். மத்திய கிழக்கில் வேலைசெய்யும் தமது தொழிலாளர்களிலிருந்து இந்தியா கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு 650 கோடி டொலர் சம்பாதித்தது. 1979-ம் - 1982-ம் காலப்பகுதியில் எகிப்திய தொழிலாளர்கள் வருடமொன்றுக்கு சராசரியாக 250 கோடி டொலர்களை தாமது பிட்டிலிருந்து அனுப்பினர்கள். 1982-ல் வட யெமென் நாட்டிற்கான தொகை 100 கோடி டொலர்களாகும்?

கட்டம் கட்டமாக வீடு திரும்பும் வெளிநாடு சென்ற தொழிலாளர்களுட் பெரும்பாலானவர்கள் திருமணமாகாதவர்களாயிருக்கின்றனர். ஏனவே தொழிலாளர் வழங்கல் அளிப்பதற்கு போதியளவு ஆற்றலின்றித் தத்தளிக்கும்

(19ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைக்கால் நோய் அபாயம்

யானைக்கால் ஒழிப்பு இயக்கம் தோன்றி 1987 ம் ஆண்டில் 40 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. சென்ற 40 ஆண்டுகளில் இந்நோய் தொற்றுதல் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளதெனினும், முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு நகர்மயமாக்கல் இடம் பெறுவதாலும் இந்நோய் பற்றிய சமூகத்தின் பாராமுகம் காரணமாகவும் சுகாதார அதிகாரிகள் கவலை கொண்டுள்ளனர். 1947 அக்டோபரில் யானைக்கால் ஒழிப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுச் சிறிது காலத்தில் தென்மேற்குக் கடற்கரையோரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு அப்பகுதிகளில் இந்நோய் 7.3 சதவீதம் தொற்றுகிறது என்பதைக் காட்டிற்று. எவ்வாறாயினும், சென்ற ஐந்தாண்டுகளில் தொற்று சதவீதம் 0.3 ஐவிடக் குறைந்துள்ளது. இதற்குக்காரணம், பல தடவைகளில் இவ்வியக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டபோதிலும் 1947 முதல் இதுவரை இவ்வியக்கம் வாபஸ் பெறப்படவில்லை என்பதாகும். இவ்வியக்கத்தின் பணிப்பாளர் அண்மையில் வெகுஜனத் தொடர்பு நிருபர்களிடையே உரையாற்றுகையில், ''யானைக்கால் நோய் ஒருவகைக் கிருமியினால் ஏற்படுகின்ற உறிஞ்சி நோயாகையால் அதனைக் கிரமமாக அவதானித்து வர வேண்டியது அவசியமாகும்'' என்று கூறினார். இந்நோய் நிலைத்திருப்பதற்கு பல்வேறு உயிரியல் காரணிகள் உதவுகின்றமையால் இதனை முறையாக கண்காணிக்க வேண்டியது அவசியமாகும். நோய்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் நோய் குறைவதாகக் காட்டும்பொழுது அவற்றுக்கெதிரான முயற்சிகளைக் கைவிடுவது நம் நாட்டு வழக்கமாகும். மற்றொரு நோய்க்கெதிரான முயற்சிகள் 1950 ம் ஆண்டுத் தொடரின் பிற்பகுதியில் வாபஸ் பெறப்பட்டமையால் ஏறத்தாழ எமது சுகாதார சேவைக்கான பணத்தில் அரைவாசியை அந்நோய்த் தடுப்புக்காகச் செலவிட வேண்டியுள்ளது. குறைந்த சுட்டெண்கள் நாம் சுயதிருப்தி அடைவதற்குக் காரணமாக அமையக்கூடாது'' என்றும் பணிப்பாளர் கூறினார்.

இலங்கையில் கூடுதலாக நகர்மயமாக்கப்பட்டுள்ள வலயம் தென்மேற்குக் கரைப் பகுதியாகும். நாட்டின் சனத்தொகையில் சுமார் கால் பகுதி இவ்வலயத்தில் வாழ்கிறது. இங்கு இந்நோய் இருப்பதற்குப் பல காரணங்களுண்டு. இப்பிரதேசம் இப்பொழுது பாரம்பரியமாக யானைக்கால் நோய் வலயம் எனப்படுகிறது. தற்போது இந்நோய் நியாயமான அளவு கட்டுப்பாட்டிலிருக்கிறது. எனினும், உலக சுகாதாரத் தாபன அதிகாரி ஒருவர், இலங்கையில் மட்டுமன்றி தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் திட்டமிடாத, கட்டுப்பாடற்ற நகர்மயமாக்கல் நடைபெறுவதாகக் கூறியுள்ளார். இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்நோய் கட்டுக் கடங்காமற் போய்விடும் என்றும் அவர் கூறியுள்ளார். உத்தியோகபூர்வமான கருத்து, ''கைத்தொழில் மயமாக்கலைத் தொடர்ந்து வேலைவாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதனால் மக்கள் இந்நோயுள்ள வலயத்திற்கு வந்து குடியேறுகின்றனர்'' என்பதாகும். இதனால் நிலைமை மீண்டும் மோசமடையலாம்.

யானைக்கால் நோய் ஒழிப்பு இயக்கத்தின் பிரதான உத்தியாவது இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்து உடனடியாகச் சிகிச்சை அளிப்பதாகும். இதனால் தொற்று ஒரே இடத்தில் குவிவதும் மற்றவர்களுக்குப் பரவுவதும் தடுக்கப்படுகிறது. இயக்க உத்தியோகத்தர் ஒருவர் இரவில் வீடுகளுக்குச் சென்று அங்குள்ளவர்களின் இரத்தத்தைப் பரிசோதனை செய்தபின் நோயுள்ளவர்களுக்கு வில்லைகள் கொடுக்கப்படுகின்றன. உலகிலேயே இந்நாட்டில் மட்டும் தான் வீடுகளுக்குச் சென்று இவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று இயக்கப்பணிப்பாளர் கூறினார். ஆகையினால் பொதுமக்கள் இதற்குத் தடையாக இருக்காமல் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

''எவ்வாறாயினும் எதிர்காலத்தில் யானைக்கால் நோய் பெருகலாம். அதிகாரமளிக்கப்

நுண் யானைக்கால் நோய் வீதங்கள் 1981 - 1985

ஆண்டு	1981	1982	1983	1984	1985
பரிசோதிக்கப்பட்டோர்	1,425,443	1,374,889	1,389,043	1,317,312	1,269,333
நோயுள்ளோர்	3,483	3,966	3,464	3,116	3,017
வீதம்	0.24%	0.29%	0.25%	0.23%	0.23%

சிகிச்சை பெறவேண்டிய நோயாளர் 1981 - 1985

சமூகமளித்தோர்	4,944	9,673	11,175	10,832	12,284
புதுநோயாளர்	1,606	2,676	1,622	1,603	1,706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாத, கட்டுபாடற்ற வகையில் நகர்மயமாதல் நடைபெறுகிறது. குடிசனம் இவ்வலைத்தில் பெருகிவருகிறது. சமுதாயம் பாராமுகமாக இருக்கிறது. நகரத்திட்டத்திற்கான சட்டங்கள் பலவீனமானவை. சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளதும் மனப்பான்மை மாறாவிட்டால், இலங்கையில் மானிக்காய் நோய் ஒரு பெரும் பிரச்சினையாக மாறலாம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நோய் அறிகுறிகள்பற்றிக் குறிப்பிடுகையில், "நுளம்பு வருந்து தொற்றுக் கிருமியின் முட்டைகள் மனிதரது உடலில் பிரவேசிக்குவிட்டால், பின்னர் எம்பற்றிக்கு சுரப்பைகளில் பதுத்து ஒரு புழுவாக வளர்ச்சியடைகிறது. பொதுவாக 7 மாதம் முதல் 2 வருடங்களுக்குள் நோய்க்குறிகள் தோன்றுகின்றன. இதனை அடைகாக்கும் காலம் எனலாம். இரத்தத்தில் நுண்ணபலேரியா கிருமிகளிருந்தால் இக்காலவரையறைக்குள் கண்டுபிடிக்கலாம். இது, எந்நேரத்தில் வளர்ச்சியடைந்த ஒரு ஆண்புழுவும் பெண்புழுவும் சந்தித்துக் கூடுகின்றன என்பதைப் பொறுத்ததாகும். இதற்குக் குறிக்க நேரம் கிடையாது. அது நடைபெறுவதே இரவு இருக்கலாம். ஆகையால் பரிசோதனை கிருமிகள் இல்லை யெனக் காட்டினால் நோயில்லை எனக் கொள்ளமுடியாது.

இலங்கையில் இனங்கண்டு பதிவு செய்யப்பட்ட 130 வகை நுளம்புகளுண்டு. மானிக்காய் நோயை ஒரே ஒருவகை நுளம்பு மட்டுமே பரப்புகிறது. தரமிழ்ந்துவசமாக நுளம்புத் தொல்லை பற்றிப் பொதுமக்களுக்கும் மானிக்காய் நோய் ஒழிப்பு இயக்கத்துக்குமிடையே ஒரு தவறான கருத்து நிலவுகிறது.

இவ்வியக்கத்தின் கடனாகவில் ஒவ்வொரு மானிக்காய் நோய் பரவுவதற்குக் காரணமாகவுள்ள நுளம்புகளை ஒழிப்பதாகும். இந்நுளம்பு வளர்ந்து பெருகுவதற்கு மிக அவசியமான நீர் அவசியம். இவ்வகை நுளம்புகளின் தொல்லையைக் குறைத்து நோய் பரவுவதைத் தடுப்பதற்கு இத்தகைய நீர்த்தேக்கங்களில் ஒரு வகை நுளம்பு நாசினி உபயோகிக்கப்படுகிறது. எல்லாவகை நுளம்புகளையும் ஒழிப்பது எவ்வகையிலும் இவ்வியக்கத்தின் பொறுப்பன்று. அது நுளம்பு ஒழிப்பு இயக்கமொன்றல்ல. நுளம்புகள் கடித்துத் தொல்லை கொடுப்பது உண்மையே. அதே வகையிலான எல்லாவகை நுளம்புகளும் நோய் பரப்புவதல்ல.

நகர்ப்புற மானிக்காய் நோய் பரவுவதற்கு நுளம்புகள் வளர்வதற்கேற்ற பல இடங்கள் நகர்ப்புறங்களிற் காணப்படுகின்றன. இவற்றில் தடைப்பட்ட வடிகால்கள், சேதமடைந்த மலக்குழிகள் போன்றவை சிலவாகும். இத்தகைய இடங்களுக்கு நுளம்பு முட்டை நாசினி தெளிப்பது இவ்வியக்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஏழுக்கமாகும். இவ்விடங்களுக்கு மேலும் நுளம்பு நாசினி தெளிக்கப்பட வேண்டுமென்ற வாதத்திற்கு, இவ்வகுத்த நீர் மனிதனின் அல்லது மிருகங்களின் நுகர்வுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்பது மேலும் வலுவூட்டுகிறது. நாசினிகளை உற்பத்தி செய்வோரும் அதில் அக்கறையுள்ளவர்களும் இத்தகைய பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது. இந்த மானிக்காய் நோய் வலயத்தில் வாழும் படித்த, எழுத்தறிவுள்ள குடிமக்கள் எனப்படுவோர் மானிக்காய் நோய் நுளம்புகளை ஒழிப்பதற்கு முட்டை நாசினி தெளிப்பது தவிர்ந்த வேறு எதையும் ஏற்கத்தயாராக இல்லை என்று சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

சுகாதார அதிகாரிகளின் கருத்துப்படி வடிகால் துவாரங்களை நீக்குவதும் மலசலக் குழிகளைத் திருத்துவதும், மானிமலகூடங்களை கழுவுப்பதில் நன்னீர் அடைப்பு மலகூடங்களை அமைப்பதும் இந்நோயைத் தடுப்பதற்குச் சிறந்த வழிகளாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இப்பிரச்சினை மானிக்காய் ஒழிப்பு இயக்கத்துக்கு மட்டும் உரிய பொறுப்பல்ல என்பதும் இப்பிரதேசத்தில் வாழும் சமூகத்துக்கும் இப்பொறுப்பில் பங்குண்டு என்பது உணரப்பட்டாலன்றி, நோய்க்கும் காரணமான நுளம்புகளை ஒழிப்பதில் நாம் அதிக முன்னேற்றம் காண முடியாது.

(17ம் பக்கத் தொடர்ச்சி)

தமது நாடுகளுக்கு மேலும், பரு ஏற்பட்டுள்ளது. அவர்கள் வளர்ந்து வரும் பெறக்கூடியது போன்ற உயர்ந்த சம்பளமும், எல்லையில்லா நாட்டுச் சீமான்களது வாழ்வும், வளமும், வாழ்க்கை முறைகளுமே அவர்களது எதிர்பார்ப்பாக உள்ளன. தரமிழ்ந்துவசமாக, தொழிலாளர்கள் முதன்முறையாகத் தமது விடுகளைவிட்டு வெளியேறுவதற்கான காரணகர்த்தாக்களாகவிருந்த முக்கிய பிரச்சினைகள் அவர்கள் மீண்டும் திரும்பி வரும்போதும் விலைபெறமெடுத்துக் காட்சி தருகின்றன. வெளிநாடு சென்ற தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் வறிய கானி பூமியற்ற கிராம வாசிகளாவர். அவர்கள் பணத்தைப் புத்திசாதுரியமாக கையாள்வதில் எதேர்த்தவர்களுமல்லர். இதனால் அவர்கள் தொடர்ந்தும் கானியற்றவர்களாகவே இருப்பதுடன் அவர்கள் திரும்பி வரும்போது நல்ல தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கேற்ற புதிய உத்திகளையோ, திறன்களையோ தெரிந்திருக்கவுமில்லை.

அலன் ஜோஸ்
- எர்த்லைன் - இலங்கை சுற்றுச்சூழல் சம்மேளன கட்டுரைச் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதாரம் – 1986

1986 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் பல்வேறு காரணங்களால் தடைப்பட்டது. முன்னைய மூன்று ஆண்டுகளின் 5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 ம் ஆண்டில் 4 சதவீத வளர்ச்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த 4 சதவீத வளர்ச்சி பல வளர்முக நாடுகளதும் அபிவிருத்தியடைந்த நாடுகளதும் வளர்ச்சி வீதத்தைவிடச் சிறந்தது எனக் கருதப்படினும், 1978 முதல் இலங்கையில் ஏற்பட்டுவந்த உயர்ந்த வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் இது ஒரு பின்னடைவாகக் கொள்ளப்படுகிறது.

1970 களின் பிற்பகுதிவரை இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் மிகவும் மந்தமாகக் காணப்பட்டது. 1960 தொடரில் வருடாந்தம் 2.1 சதவீதமாகக் குறைந்த கதியில் வளர்ந்த தலைக்குரிய வருமானம் 1970 - 76 காலத்தில் மேலும் வீழ்ச்சியுற்று 1.3 சதவீதமாக இருந்தது. 1970 ன் தொடராண்டுகளில் பொருளாதாரத்தின் சிறப்பம்சமாக அரசாங்கத்தின் பயனற்ற கொள்கைகள் அமைந்தன. பொருளாதார வளர்ச்சி, முதலீடு தொடர்பான இக்கொள்கைகள் நீண்டகால வறட்சி, இறக்குமதி செய்த எரிபொருட்களின் கடுமையான விலை ஏற்றம் என்பவற்றால் மேலும் உக்கிரமடைந்தது. பொருளாதாரத்தில் ஏற்பட்ட இத்தோல்வியின் விளைவாக கடுமையான வேலையில்லாப் பிரச்சினையும் அதனால் பொருளாதார, சமூக ஸ்திரமற்ற நிலையும் தோன்றின. 1977 ன் பிற்பகுதி முதல் புதிய நிருவாகம் தாராளமயமாக்கும் உத்தியைக் கையாண்டது. இது உற்பத்தி, வேலை வாய்ப்பு, சேமிப்பு, முதலீடு, ஏற்றுமதி ஆகிய முக்கிய துறைகளில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களை அடைவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களில் இறக்குமதி வர்த்தகத்தைத் தாராளமாக்கல், செலாவணி மாற்று வீதங்களை ஒருமைப்படுத்தலும் மதிப்பிறக்கமும், சேமிப்பையும் முதலீட்டையும் ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் என்பனவும் அடங்கும். இந்நடவடிக்கைகளால் பொருளாதாரத்திற்குத் தெம்பூட்டப்பட்டு 1978 க்கும் 1983 க்குமிடையில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சி வருடாந்தம் 6 சதவீதத்திற்கு அதிகமான வளர்ச்சியை அடைந்தது. சென்ற மூன்று ஆண்டுகளில் இவ் வளர்ச்சி வீதம் சராசரி 5 சதவீதமாக இருந்தது. இவ்வாண்டு இது 4 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1986 ல் கூடிய பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்குத் தடையாக இருந்தவை, வியாபார விளை பொருட்களின் விலை இறக்கம், பாதகமான காலநிலை, குறைந்த உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடு, சுற்றுலாத்துறை வருமானக்குறைவு என்பனவும் யாவற்றுக்கும் மேலாக இனப் பிரச்சினையுமாகும். முதலீடுகள், சுற்றுலா, கடற்றொழில், விவசாய உற்பத்தி, போக்குவரத்து என்பன யாவும் இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டன. எவ்வாறாயினும் நிதி அமைச்சர் தமது அண்மைய வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டவாறு குறைந்த வளர்ச்சி வீதத்திற்கான காரணிகளை நாம் விளக்குகையில் பல்வேறு துறைகளில் நாம் அண்மைக்காலத்தில் அடைந்த உயர்ந்த வளர்ச்சி வீதம், அத்தகைய வளர்ச்சி வீதங்களை அடைவதைக் கடினமாக்குகிறது என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும்.

கமத்தொழில்

1986 ல் நெல்லுற்பத்தி, 1985 ம் ஆண்டுச் சாதனையான உற்பத்தி அளவைவிட 7 சதவீதம் குறைவானதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும் போகப் பயிர் 4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. சிறுபோகம் சுமார் 15 சதவீதம் குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1984 லும் 1985 லும் அதிகரித்த தேயிலை உற்பத்தி 2 சதவீதத்தால் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985 ல் வியக்கத்தக்க வகையில் 52 சதவீதம் அதிகரித்ததென்னை உற்பத்தி 1986 ல் 8 சதவீதமே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1986 ல் இறப்பர் உற்பத்தி சுமார் 4 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985 ல் உற்பத்தி குறைந்திருந்த உப உணவுப் பொருட்களும் சிறு ஏற்றுமதிப் பயிர்களும் 1986 ல் சிறந்து விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் கால் பகுதி கமத்தொழிலிலும், பிற துறை முயற்சிகளில் கணிசமான அளவு விவசாய உற்பத்தியிலும் தங்கியிப்பதனால் 1986 ல் எல்லா மடங்கிய வளர்ச்சி வீதம் குறைந்தமைக்கு விவசாயத் துறையின் மந்த வளர்ச்சி முக்கியமான தொரு காரணியாகும்.

கைத்தொழில், வர்த்தகம், சேவைகள்

1985 ல் 1.5 சதவீதமாக இருந்த சுரங்கத் தொழில், அகழ்வுத் தொழில் துறை 1986 ல் 18 சதவீதமாகவும்; 1985 ல் 5 சதவீதமாக இருந்த கைத்தொழில் துறை வளர்ச்சி 1986 ல் 6 சதவீதமாகவும் வரை எதிர்பார்க்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படினும் நிர்மாணத்துறை 1.5 சதவீதமாக மட்டுமே வளரு மென எதிர்பார்க்கப்படுகிறது. இது, மகாவலித் திட்டத்தில் பிரதான அணைகள் கட்டி முடிக்கப் பட்டபின் அரசாங்கத்துறை நிர்மாண வேலைகளின் வேகம் குறைந்திருப்பதையும், தனியார் துறை நிர்மாண வேலைகள் குறைந்திருப்பதையும் பிரதிபலிக்கிறது. வர்த்தகம், போக்குவரத்து என்பனவும் பிற சேவைகளும் 4.4 சதவீதம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1985 ல் உறுதியாக இருந்த விலைகளின் போக்கு 1986 ல் சுமார் 7 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த நெல் வழங்கலும், அரசாங்கத்தின் கூடிய செலவினத்தின் பிந்திய தாக்கமுமே இதற்குரிய பிரதான காரணங்களாகும்.

சென்மதி நிலுவை

1985 உடன் ஒப்பிடுகையில் சென்மதி நிலுவை நிலைமை விருத்தியடையலாம். நடைமுறைக் கணக்கும் எல்லாமடங்கிய பற்றாக்குறையும் திருத்தமடையலாம் என எதிர்பார்க்கப் படுகின்றன. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை சுமார் 48.2 கோடி எஸ். டி. ஆர். களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985 இது 58.6 கோடி எஸ். டி. ஆர். களாக இருந்தது. இத்திருத்தத்திற்குக் காரணம் இறக்குமதி அளவு குறைந்ததும் பல இறக்குமதிப் பொருட்களின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்ததுமாகும். எவ்வாறாயினும் இறக்குமதி விலைகளின் சாதகமான போக்கினால் கிடைத்த கணிசமான பயனை ஏற்றுமதி விலைகளின் கடுமையான வீழ்ச்சி சமனாக்கியுள்ளது. 1986 ல் வியாபார நியதிகள் 8 சதவீதத்தால் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்மதி நிலுவையின் சேவைகள் கணக்கில் 1985 ஐ விடக் கூடிய பற்றாக்குறை ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உல்லாச பிரயாணத்துறையிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாதிப்பு குறையுமெனவும், தனியார் மாற்றங்கள் தொடர்ந்து தளிவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் துறைக்குக் கிடைக்கும் தேறிய பணமல்லா மூலதனம் பெருமளவில் குறையும். இதற்குக் காரணம், எயர் லங்கா, இலங்கை கப்பற் கூட்டுத் தாபனம், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கடன்குறைப்புக் கொடுப்பனவுகளாகும். வியாபார விளை பொருட்களின் விலை வீழ்ச்சி, கற்றுவாத்துறை வருமான வீழ்ச்சி, முன்னர் பெற்ற சில வர்த்தகக் கடன்களை ஒன்றாகத் திருப்பிச் செலுத்தல் என்பவற்றால் 1986 ல் கடனிறுத்தல் நிலைமேலும் மோசமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியக் கொடுக்கல் வாங்கலுட்பட எல்லாமடங்கிய கடனிறுத்தல் விகிதம் 1986 ல் 30.8 சதவீதமாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1985 ல் இது 22.3 சதவீதமாக இருந்தது.

செலவும் வருமானமும்

செலவுப் பக்கத்தில், 1986 ல் குறை நிரப்பல் மதிப்பீடுகள் சுமார் 620 கோடி ரூபாவாகும். பாதுகாப்புக்குரிய குறை நிரப்பல் மதிப்பீடுகளின் தொகை மட்டும் 280 கோடி ரூபாவாகும். குறை நிரப்பல் மதிப்பீடுகளை அவசியமாக்கிய ஆக்கப் பொருட் செலவு அம்சங்களினால் ஏற்படும் மேலதிக செலவு விமான இறங்குதுறை அபிவிருத்தி 21 கோடி ரூபா, போக்குவரத்துச் சபைகளுக்கு 30.8 கோடி ரூபா, மகாவலிச் சபைக்கு 73.6 கோடி ரூபா, நில்வளாகங்கை திட்டத்திற்கு 35.3 கோடி ரூபா, எயர் லங்காவுக்கு 40 கோடி ரூபா ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். பாதுகாப்புக்கும் எயர்லங்காவுக்குமுரிய குறைநிரப்பல் மதிப்பீடுகளைத் தவிர மற்ற அனைத்தும் வெளிநாட்டு உதவியை உள்ளடக்கியதாக இருக்கும்.

வருமானத்தைப் பொறுத்தவரை, இலங்கை ஏற்றுமதிப் பொருட்களின் விலை கடுமையாக வீழ்ந்தமையால் ஏற்றுமதித் தீர்வையாலும் தேயிலைக்கான வரியின் மூலமும் எதிர்பார்க்கப் பட்ட வருமானம் 12.8 கோடி ரூபாவால் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் பெருந்தோட்டத் துறையின் இளைய வீழ்ச்சியின் காரணமாக வரிமானவரியும் 67 கோடி ரூபாவினால் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் குழப்ப நிலைமை காரணமாகவும் 1986 தொடக்கத்தில் சிலோன் டுபாக்கோ கம்பெனியில் இடம் பெற்ற வேலை நிறுத்தம் காரணமாகவும் உள்நாட்டுப் பொருள் வரியும் பாதிக்கப்படும். உள்நாட்டுப் பொருள் வரி 31.5 கோடி ரூபாவினால் வீழ்ச்சியடையும். வடக்கு கிழக்கு குழப்ப நிலை, ரெயில்வே, தொலைத் தொடர்புச் சேவைகளின் வருமானத்தையும் பாதித்துள்ளன. உற்பத்தித் துறையின் வியாபார மொத்த வரி வரவுகள் எதிர்பார்த்ததை விட 63.7 கோடி ரூபாவினால் குறைந்துள்ளது. இதில் அரைவாசிக்கு மேல் குறையக் காரணம் 1986 மார்ச்சில் சிமெந்துக்கான வியாபார மொத்த வரி ஒழிக்கப்பட்டதாகும்.

விலைகள்

1985 ஆம் ஆண்டில் விலைகளின் போக்கு மிக ஸ்திரமான நிலையில் இருந்தன. ஆனால், 1986 ஆம் ஆண்டில் நுகர்வோர் விலைகள் 7 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, வருடத்தின் ஆரம்ப மாதங்களில் நெல் வழங்கல் குறைவாக இருந்ததும், அரசாங்கச் செலவின அதிகரிப்பின் தாக்கமும் விலையேற்றத்தை ஆண்டிய பிரதான காரணிகளாக இருந்தன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமோதய சபைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆரம்ப கட்டமாக, இக்கிராமோதய சபைகளுக்கும், பிரதேசச் சபைகளுக்கும் தீர்மானம் எடுக்கும் அதிகாரமும், நிர்வாக அதிகாரமும் அதிகளவில் ஏழுங்கப்படவேண்டியது அவசியமென நாம் அபிப்பிராயப்படுகிறோம். அவைகளுக்கு தங்களது தீர்மானத்திற்கேற்ப செலவழிக்கக்கூடியவாறு ஒரு குறிக்கப்பட்டளவு பணம் இருக்கவேண்டும். இப்பணத்தைக் கொண்டு அமுல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் பற்றித் தீர்மானிப்பதற்குச் சுதந்திரமும், இவற்றை மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும் வேண்டிய அதிகாரம் கிராமோதய சபை, பிரதேசச்சபை ஆகிய மட்டத்திலும் கூட வழங்கப்பட வேண்டும். ஒரு கிராமோதய சபையானது சரியான முறையில் இயங்குவதாயின், இதன் கூட்டங்களுக்கு தொண்டர் ஸ்தாபனங்கள் சமூகம் கொடுப்பதற்கும், பிரேரணைகளை முன்வைப்பதற்கும், அவர்களது நேரத்தையும், முயற்சியையும் கிராமோதய சபையில் செலவழிப்பதற்கு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படவேண்டியது அவசியமாகும். இதன் கருத்துயாதெனில், மாவட்ட அபிவிருத்திச் சபையிலிருந்து, அரச சார்பற்ற ஒரு ஸ்தாபனத்திற்கு நிதி, நிர்வாக் அதிகாரங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பரவலாக்குவது என்பதைக் குறிக்கும்.

(2) இம் முறைமையினை விருத்தி செய்வதற்கான இரண்டாவது அடிப்படையான வழியாதெனில், கிராமத்தில் வாழும் எல்லாப் பிரிவினரையும் சிறந்த முறையிலும், பரந்த அடிப்படையிலும் பிரதி நிதித்துவப்படுத்தலை உறுதிப்படுத்தலாகும். வறிய குடும்பங்கள், தாழ்ந்த சாதி மக்கள், பெண்கள் போன்ற கிராமோதய சபையில் பிரதிநிதித்துவப்படாத பலம் குறைந்த இப்பிரிவினருக்கு விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். கிராமோதய சபையில் எத்தகைய தொண்டர் ஸ்தாபனங்கள் அநுமதிக்கப்படவேண்டும் என்பது பற்றிய ஒரு எண்ணக்கரு உருவாக்கப்படவேண்டும். தொண்டர் ஸ்தாபன அங்கத்தவர்களால் கிராமோதய சபைத் தலைவர்களுக்கு பூரண ஆதரவு கிடைக்கக் கூடியவாறு கவனம் எடுக்கப்படல் வேண்டும். கிராமோதய சபைக் கூட்டங்களுக்குச் சமூகம் கொடுக்கும் தலைவர்களுக்கும், அங்கத்தவர்களுக்குமிடையிலான தொடர்புவிளைவு ஊக்கப்படுத்தப்படல்வேண்டும். பொதுவாக, இதுவரை செய்யப்பட்டதிலும் பார்க்க, கிராமோதய சபை முறைமை பற்றிய தகவலை பொதுமக்களுக்கு இன்னும் விரிவாக, சிறந்த முறையில் வழங்க வேண்டும்.

(3) மூன்றாவதாக, கிராமோதய சபையினது பணிகளின் செயற்பாடானது பல்வேறு நடவடிக்கைகள் மூலம் அபிவிருத்தி செய்யப்படலாம். திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து தரம் பிரிப்பது பற்றியும், பின்னர் அவற்றை அமுல் நடாத்துவது பற்றியும் விரைவாகத் தீர்மானங்கள் எடுக்கக்கூடிய வகையில் கூட்டங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைக்கப்படலாம். விசேட சேவை உத்தியோகத்தருக்கும், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் போதிய நேரமும், பயிற்சியும் வழங்கப்படுமிடத்து, கூட்டங்களில் இவர்களது பங்களிப்பு இன்னும் பயனுடையதாக் இருக்கும். ஏனைய உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களை, அவர்களின் அநுபவங்களும், அறிவாற்றலும், தேவைப்படுமிடத்து மாத்திரமே கூட்டங்களுக்கு அழைக்க வேண்டும். இயலுமானவரை ஆகக் குறைந்த மட்டத்திலேயே திட்டங்கள் பற்றி தீர்மானிக்கப்பட்டு, அவை அமுல் நடாத்தப்பட வேண்டும். திட்டங்களை அமுல் நடாத்தக் கூடியவர்களின் அறிவும், வளங்களும், கிராமோதய சபையின் எல்லைக்கப்பாலும் வேண்டப்படுமிடத்தே இத்திட்டங்கள் பிரதேசச் சபைக்கும், மாவட்ட அபிவிருத்திச் சபைக்கும் அனுப்பப்படவேண்டும். கிராமோதய சபைத்திட்டத்தின் நடைமுறைச் செலவுகளைக் குறைக்கும் வண்ணம், கிராமோதய சபைகளின் எண்ணிக்கையை, உள்ளூர் மட்டத் தொடர்புகளை இழக்காது, அரைவாசியாகக் குறைக்கும் மாற்றுவழியொன்று இங்கு சமர்ப்பிக்கப்படும்.

(4) இறுதியாத நீடித்த பொருளாதார அபிவிருத்தியினை மையமாகக் கொண்டு, திட்டப் பிரேரணைகளைத் தயாரிப்பதனை தூண்டிவிடக்கூடிய ஆலோசனைகள் வழங்கப்படும். இச் சீரமைப்பு நடவடிக்கைகள் பற்றி இவ்வதிகாரத்தின் அடுத்த பிரிவுகளில் விரிவாக ஆராயப்படும். இந் நடவடிக்கைகள் அதிகளவில் ஒன்றுடனொன்று தங்கியிருக்கின்றது என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக, தொண்டர் ஸ்தாபனத்தின் பிரதிநிதித்துவத்தினை விருத்தி செய்வதற்காக, ஒரே சமயத்தில் கிராமோதய சபைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியமாகும். ஏனெனில், எந்த ஒரு கிராமவாசியும் பயனற்ற, சாமர்த்தியமற்ற ஒரு ஸ்தாபனத்தில் ஆர்வத்தைக் காட்டுவான் என எதிர்பார்க்க முடியாது. எனவே பின்வரும் பந்திகளில், ஒரு பகுதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படும்போது, மற்றப் பகுதிகளுக்கான ஆலோசனைகள் ஓரளவு பரந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டதென்பதை நாம் அனுமானித்துக் கொள்வோம். ஒரு பகுதிக்கு தேவைப்படும் அபிவிருத்தித் தேவைகளை எய்துவது சாதகமற்றுப்போகுமாயின், அது, ஏனைய பகுதிகளுக்காக எடுக்கப்பட இருக்கும் நட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களில் பயன்படுத்தும் தன்மையை வெளுவாகக் குறைக்கும்.

அவசிய நிபந்தனைகள்

பிரதேசசபையினதும், பிரதேசச் சபையினதும் பணிகளின் சீர்திருத்தத்திற்காக கொண்டுவரப்படும் முழுதளத்த பிரேரணைகளில் சில அவசிய முன் நிபந்தனைகளும், அனுமானிப்பதும் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமாகும். இத்திட்டத்தின் கொள்கைகளிற்கும், அதன் அந்தஸ்துக்கும் சம்பந்தப்பட்ட சில விடயங்களோடு இது தொடர்புடையதாகவுள்ளது.

(1) பொதுவாக மக்கள் அபிப்பிராயத்திலிருந்து சுதந்திரமாகப் பெறுவதில் ஆர்வங்கொண்டவர்கள் என்றும், எனவே இவர்கள் தங்களின் தொண்டர் ஸ்தாபனங்களினூடாக பிரதேசசபைகளில் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் அனுமானித்துக் கொள்கிறோம்.

(2) தொண்டர் ஸ்தாபனம், பிரதேசசபை, அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் அங்கம் வகிக்கும் உன்னாய் பெரியோர்களின் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து வழிப்படுத்தக் வல்ல அதிகாரம் பெரும்பான்மையோருக்கு குறிப்பாகவுமியமக்களுக்கு உண்டென அனுமானித்துக் கொள்கிறோம்.

(3) அரசாங்கமானது, உன்னாய் அரசியலிருந்து நடவடிக்கைகளில் மக்கள் பரந்த அடிப்படையிலும், பூரண ஆதரவுடனும் பிரதிநிதித்துவப் படுத்துவதைத் தூண்டி விடுவதற்காக எடுக்கும் முயற்சிகளில் மிகவும் அவதானமாகவும் சம்பிரமாகவும் இருந்து வருகிறதென நாம் அனுமானித்துக் கொள்கிறோம். பிரதேசசபைக்கும், பிரதேசச் சபையிலும் ஒரளவு நிதிவளமும், அதிகாரத்தைக்கும் பிரயோகிக்கும் முறையும் முறையே, உள்ளூர் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு கொள்ளக் கூடியவாக்கத்திற்கும், திட்ட ஆரவாக்கத்திற்கும் வேண்டிய அரசியல் விருப்பினையும் உள்ளிருக்கின்ற மனப்பான்மையினையும் அரசியல் வழிகாட்டி உத்தியோகத்தர்களும் கொண்டுள்ளார்கள் என்பதையும் நாம் அனுமானிக்கிறோம். மேற்கூறிய மூன்று நிபந்தனைகளும் வந்தால் கொள்ளப்படாவிடில், மின்னாலும் ஆலோசனைகளின் பெற்றியினை நாம் எதிர்பார்க்க முடியாது.

பிரதேசசபை முழுமையாக பங்குபற்றுதலும், பிரதிநிதித்துவப் படுத்தலும்

இந்த அதிகாரத்தில் முதலாவதாக, பிரதேசசபை சம்பந்தமான குறிக்கோள் பற்றியும், பிரதிநிதித்துவப்படுத்துதல், பங்கு பற்றுதல் என்பவற்றுக்கான வழிவகை பற்றியும் குறிப்பிடப்படுகிறது. இரண்டாவதாக பங்குபற்றுதல், பிரதிநிதித்துவப் படுத்துதல் என்பவற்றிலுள்ள பிரச்சினைகள், பற்றி குறிப்பிடப்படுகிறது. மூன்றாவதாக அவர்களின் சமூகப் பின்னணி பற்றியும், அவரது தொடர்பு பற்றியும், உள்ளூர் அபிவிருத்தியில் பங்குபற்றும் ஒரு சபையாக கடமையாற்றுகையில் பிரதேசசபை சபையினது சாத்தியக்கூறுகள் பற்றியும், இறுதியாக பிரதிநிதித்துவத்தினை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளைப் பற்றியும் விபரமாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிக்கோள்

பிரதேசசபையில் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு ஒழுங்கமைக்கும், அவர்களுக்குரியவாக பிரதேசத்திலுள்ள உத்தியோகத்தர்களும் அங்கம் வகிக்கிறார்களென, பிரதேசசபை சட்டங்களிலில் தெளிவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் உள்ளூர்க் குடிமக்களினது உண்மையான விருப்பங்கள், தேவைகளைப் பிரதேசத்திலுள்ள பிரதேசச் சபையுடனான மாவட்ட அபிவிருத்திச் சபைக்குச் சமர்ப்பிப்பார்கள்.

இந்த உண்மையான தேவைகளையும், விருப்புகளையும் பற்றிச் சமர்ப்பிப்பதற்கு, ஒருவர், இவ்வழியான வழியிலும், அவசியமேற்படுமிடத்து பல்வேறு நிலைகளிலும் தேர்ந்தவர், முன்னுரிமையான, உண்மையான பங்குபற்றுதலை கருவியாக மேற்கொள்கிறார். பிரதேசவாசிகளின் பங்குபற்றுதல் மூலம் சகலரும் சமமாக தன்மையினை பெறுவதற்கு, பிரதேசசபையுடனான ஒரு பரந்த அடிப்படையிலான பிரதிநிதித்துவமானது எல்லாப் பிரதேசவாசிகளுக்கும் ஒரு முன்னுரிமையாக இருக்கிறது.

பிரதேசசபையுடனான பங்குபற்றுதலிலும், பிரதிநிதித்துவப் படுத்துதலிலுமுள்ள பிரச்சினைகள்

நமக்கு தொண்டர் ஸ்தாபனங்களின் தலைவர்கள் மூலமாக பிரேரணைகள், பிரதேசசபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள். முன்னர் கூறப்பட்டுள்ளது போல் இத்தலைவர்கள் (அல்லது தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள்) கட்டங்களுக்கு ஏற்ப கொடுப்பதனை தவிர்த்துக் கொண்டனர். முன்னைக்கப்பட்ட பல பிரேரணைகள் அமுல்படுத்தப்படாதவிடுவிலுள், மக்கள் இதில் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். இந்தப் பிரச்சினையைவிட, தலைவர்கள் தான், தொண்டர் ஸ்தாபன அங்கத்தவர்களின் உண்மையான பிரதிநிதிகள் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டனர். இவ் தொண்டர் ஸ்தாபன அங்கத்தவர்களின் எண்ணிக்கையோடு, அவர்களுக்கு பிரதேசசபையிலிருந்து முரண்பாடு அறியும் இருக்கவில்லை என்றும், அவர்களது தலைவர்களிலும் பிரதேசசபையில் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது பற்றி அவர்களுக்கு தெரியாது என்பதையும் காண முடிகிறது. தொண்டர் ஸ்தாபனத்தில் கூட்டங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் கிராமோதய சபைபற்றியோ அல்லது கிராமோதய சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டப் பிரேரணைகளைப் பற்றியோ கவந்துரையாடப்படவில்லை என்ற முடிவிற்கு வரக்கூடியதாகவுள்ளது.

அன்றியும் பிரபல்யமான ஆதரவினைப் பெறக்கூடிய உள்ளூர்த் தலைவர்களே, அவற்றின் தலைவரர்க அநேகமாக தெரிவு செய்யப்படக் கூடியவராக இருக்கிறார்கள், (அத்துடன், அரசாங்கக் கட்சியினை ஆதரிக்கும் அரசியற் கொள்கைகளை அவர்கள் கொண்டிருப்பின்) எனவே உள்ளூர்த் தொண்டர் ஸ்தாபனத்தின் தலைவராக தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் எல்லா கிராம மக்களுக்கும் சமமானதாக இல்லை. கிராமத்திலுள்ள ஏறிய மக்களும், தாழ்த்தப்பட்ட பிரிவினரும், தாங்கள் விரும்பிய ஒருவரை கிராமோதய சபையில் தெரிவு செய்வதற்காக உள்ள சாத்தியங்களில் இது ஒரு பாரிய குறைபாடாக அமையலாம்.

மேலும், கிராமோதய சபையில் எல்லா தொண்டர் ஸ்தாபனங்களும் அங்கம் வகிக்கவில்லை. அத்துடன், அரச சார்பற்ற ஏனைய ஸ்தாபனங்களைவிட அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கிய தொண்டர் ஸ்தாபனங்கள் அதிகளவில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது. கிராமோதய சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களில், சராசரியாக 20% கிராம அபிவிருத்திச் சங்கங்களினாலும், 10% கூட்டுறவுச் சங்கங்களினாலும் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டனர். கிராமோதய சபையில் முக்கியமாக அங்கம் வகித்த ஒரேயொரு சங்கம் கோயில் சங்கங்களாகும். இது 15% அளவாக இருந்தது. சிரமதானச் சங்கம், விவசாயிகளின் சங்கம், கைத்தொழிற் சங்கம் போன்ற ஏனைய வகையைச் சார்ந்த தொண்டர் ஸ்தாபனங்கள், கிராம அபிவிருத்தி வேலைகளில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உற்சாகமாக இயங்கிய அளவிற்கு பங்கு கொள்ளவில்லை. இயற்கையாகவே இத்தகைய பயன்பாடற்ற ஸ்தாபனங்கள் அரசியல் அதிகாரமற்றவையாகவும், அம் மாவட்டத்தின் நன்மதிப்பைப் பெறாதவையாகவும் இருந்தன. அரசாங்க ஆதரவுடனான சங்கங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்களைவிட ஒரு பாரிய அளவிற்கு அரசியல் மயமாக்கப்பட்டவையாகவே தோன்றுகின்றன. கிராமோதய சபையானது, அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுகின்ற, அரசியற் கலப்பற்ற, அரசியலினால் பாதிக்கப்படாத ஒரு ஸ்தாபனமாகவே இருக்க வேண்டுமென அமைக்கப்பட்டாலும், அரசாங்கத்துடன் அதிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் தலைவர்களிடையே இருந்தே கிராமோதய சபைத் தலைவர் செய்யப்படுவதால், அது முற்றுமுழுதாக அரசியற் தலையீடின்றி இருக்க மாட்டாதென்று பகுத்தறியக் கூடியதாக இருக்கின்றது. ஏனெனில் தற்போதைய சூழ்நிலையில் தங்களின் சொந்த திட்டங்களை அமுல் நடாத்த கிராமோதய சபைகளிடம் மூலவளங்கள் இல்லை. இவைகளின் பிரேரணைகளும், பணிகளும் மாவட்ட அபிவிருத்திச் சபையினால் முதலில் அங்கீகரிக்கப்படவேண்டும். ஆனால் மாவட்ட அபிவிருத்திச் சபையானது அரசியற் சார்புடையதாக இருப்பதனால், கிராமோதய சபைகள் அரசியற் தலையீட்டினை வெகு இலகுவாகப் புறக்கணிக்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில், கிராமோதய சபை உருவாக்கத்திற்கான எண்ணக்கருவும், குறிக்கோள்களும், இதனால் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

சமூகப் பின்னணி: மக்களின் பூரண பங்களிப்புடனான அபிவிருத்திக்கு மூலவளங்களைச் சுழற்சிப்படுத்துவதிலுள்ள தடைகள்.

அபிவிருத்தி நடைமுறையில் பொதுமக்களின் அதிக அளவிலான பங்களிப்பினை உறுதி செய்வதற்காகவும், மூலவளங்களை ஆக்கிரமிக்கக் கூடிய அதிகாரம் மிக முக்கியமாக இருப்பதாலுமே கிராமோதயசபை (பிரதேச சபையும் உட்பட) ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால், இந்தப் பந்தியில், மக்களின் பூரண பங்களிப்புடனான உள்ளூர் அபிவிருத்தியில் ஏற்படக்கூடிய மூலவளத் தடைகள் பற்றி ஆராயப்படுகிறது. மூலவளங்கள் என்னும்போது மூலப் பொருட்களுட்பட மனித வளங்களையும் அது குறிக்கும். முதலாவதாக, இத்தகைய மூலவளங்கள் கிடைக்கக்கூடிய தன்மை, அவற்றை அடையக் கூடிய தன்மை, அவற்றைப் பிரயோகிக்கும் தன்மை ஆகியவை தொடர்பாகவுள்ள அரசியல், நிர்வாக, சமூக – பொருளாதாரத்தடைகள் எவை என்பதற்கு விடைகாண முயல்வோம். இரண்டாவதாக இத்தடைகள், எவ்வாறு மக்களின் பூரண பங்களிப்பை பாதிக்கின்றன எனப்பார்ப்போம்.

மூலவளங்களுக்கான நிர்வாகத் தடைகள்

தேவைகளோ அதிகம். ஆனால் இத்தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கான மூலவளங்களோ அரிதாகவே உள்ளது. போதிய பணமின்மை ஒரு பிரச்சினையாகும். ஆனால், அத்துடன் அதிகாரப்பாங்கில் காணப்படும் தாமதங்கள் (red tapism) அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் புதிய வகையிலான மூலவளங்களை உபயோகிப்பதை தடுக்கின்றது. நிர்வாகமானது, கிராமத்துடன் போதிய தொடர்புகளை வைத்திருக்கவில்லை. உள்ளூரில் கிடைக்கக்கூடிய அறிவாற்றலும், திறமைகளும் புறக்கணிக்கப்படுவதற்கு இதுவொரு காரணமாகும். நிர்வாகத்திலுள்ள மூலவளங்கள் ஒருங்கே குவிக்கப்பட்டிருப்பதால், இவற்றைப் பெறுவதில் நீண்ட; ஒழுங்குமுறைகள் காரணமாக திட்ட அமுலாக்களின் போது தாமதங்கள் ஏற்படவாதுவாகவுள்ளன. இது ஒன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்று தங்கியிருத்தலுக்கு வழிவகுப்பதோடு, துர்நடத்தைகளுக்கும் வழிவகுக்கலாம். (உதாரணமாக சட்டபூர்வமற்ற குறுக்கு முறைகள்)

மத்தியிற் குவிக்கப்பட்டுள்ள மூலவளங்களுக்கு, அவை ஒதுக்கப்பட்ட பின்பு, விசாலமான மேற்பார்வை தேவையாகவுள்ளது. இவ்வாவிடில் இழப்புகள் ஏற்படலாம். அத்துடன், திட்டங்களைத் திட்டமிடுகையில் பொது மக்களைக் கலந்தாலோசிக்காது அவற்றை அமுல் நடாத்தும்போதும், அவர்களது உள்ளீடுகளை உபயோகிக்காதபோதும், இத் திட்டங்கள் தோல்வி அடைவதற்கும், இழப்புகள் ஏற்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. மேலும் திட்டங்களை தொடர்ந்து நடாத்துவதில் கிராமிய மக்களினதும், அதிகாரிகளினதும் தொடர்ச்சியான ஆதரவினை, அதிகாரப்பாங்கான முகாமைத்துவம் தடை செய்கிறது

மூலவளங்களுக்கான அரசியற் தடைகள்

கிடைக்கக்கூடிய மூலவளங்களை அரசியற் தலையீடு முற்றாக கட்டுப்படுத்துகிறது. அதிக சாமர்த்தியம், தத்துவாதிகாரம், தொடர்புகளைக் கொண்டுள்ள அரசியல்வாதிகள் தங்களின் தேர்தற் தொகுதிகளுக்கு அதிகளவு மூலவளங்களை பெறக்கூடியதாகவும், கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பதால், இது மூலவளங்களின் சமமற்ற பங்கீட்டிற்கு வழிவகுக்கிறது அரசியற் தலையீடானது, நிர்வாகத்தினருக்கும், திட்டமிடல் நிறுவகங்களுக்கும், நிதியைப் பெறுவதற்கான புதிய வழிவகைகளை உபயோகிப்பதற்கு அதைரியத்தை அளிக்கின்றது. (கிராமோதய சபை, பிரதேச சபை என்பவை ஊடாக).

கிடைக்கக்கூடிய மூலவளங்கள், அரசியல் ஆதரவாளர்கள் மூலமாக வழங்கப்படுகிறது. "அரசியற்தரகர்கள்," இங்கு இடை நிலையிலவாளர்களாக பணியாற்றுகின்றனர். அரசியல் வாதிகள், இம் மூலவளங்களை அணுகுவதற்கு இவர்களே காரண கர்த்தாக்களாக உள்ளனர். இத்தகைய நிலைமையானது "அரசியற் ஒருபக்கச் சார்புக்" தோற்றப்பாட்டினை ஆதரிக்கின்றமையால், இங்கு பொது நலனானது புறக்கணிக்கப்படலாம். அடுத்தடுத்து வரும் அரசாங்கங்களின் கொள்கை மாற்றங்களினாலும் மூலவளங்களைப் பயன் படுத்துவதில் பாரிய மாற்றம் ஏற்படலாம்.

மூலவளங்களுக்கான சமூக — பொருளாதாரத் தடைகள்:

கிராமியப் புறங்களில் அதிகாரத்திற்கும் அந்தஸ்திற்குமான போராட்டம் ஒரு பொதுவான அம்சமாகும். இவ் அதிகாரத்தினையும், அந்தஸ்தினையும் பெறுவதற்கு காரணமாக அமைவது இம் மூலவளங்களை அணுகக் கூடிய தன்மையும், கட்டுப்படுத்தக்கூடிய தன்மையுமாகும். போராட்டங்கள் காரணமாக எந்த ஒரு கட்சியும் நிர்வாக ரீதியிலமைந்த ஒதுக்கீடுகளைப் பெற முடியாத நிலை ஏற்படலாம். ஏனெனில், உதாரணமாக ஒரு ஸ்தாபனத்தின் தலைமைத்துவத்தைப்பற்றி அவர்கள் இணக்கங் காண முடியாமையாகும். வகைப்படுத்தப்பட்டதும், வகுப்பு அடிப்படையில் ஒழுங்கு முறைப்பட்டதுமான ஒரு சமுதாயத்தில், எல்லைப்படுத்தப்பட்ட புறக்கணிக்கப்பட்ட குழுக்கள் அதிகாரம் செய்வதால், ஆட்சியிலுள்ள குழுக்களினால் ஆரம்பிக்கப்பட்ட "அபிவிருத்தி" நடவடிக்கைகளுக்கு வேண்டிய மூலவளங்களை வழங்குவதற்கு இவர்கள் முன்வரமாட்டார்கள் இந்த வகையில், இப் புறக்கணிக்கப்பட்ட குழுக்களின் சுயாதீன, முற்று முழுதான பங்களிப்பிற்கு களங்கம் ஏற்படுகிறது.

நிர்வாகத்தினருடனும், அரசியல் வாதிகளுடனுமான, பொதுக் கிராமவாசிகளின் தெளிவற்ற தொடர்பு முறை தொடர்பு இடைவெளி ஆகியன கிடைக்கக் கூடிய மூலவளங்களை இவ்விரு பகுதியினரும் அடைவதற்குத் தடைகளாக அமைகின்றன. உதாரணமாக (மான்யத் திட்டங்களில்) நிர்வாகம் சிக்கல் கொண்டதாகவுள்ளது. இத் தொடர்பு இடைவெளியானது விரிவினைகளையும், போட்டிகளையும், விரோதங்களையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தி, இறுதியில் மூலவளங்களின் இழப்பிற்கும் வழிவகுக்கலாம். அத்துடன், மூலவளங்கள் பிழையான இலக்குக் குழுக்களுக்கு ஒதுக்கப்படுமாயின் (கிராமத்திலுள்ள உயர்மட்டக் குழுக்கள், கிடைக்கக் கூடிய மூலவளங்களை சரியான இலக்குக் குழுக்களுக்கு ஒதுக்காது, ஏனையவற்றுக்கு ஒதுக்கும் வகையில் மாற்றியமைக்கின்றன), மூலவளங்களினது குறைவான உச்சப் பயன்பாட்டிற்கு இது வழிவகுக்கும்

முடிவுரை

மத்தியலமைக்கப்பட்டுள்ள நிர்வாக முறைமையின், வரையறுக்கப்பட்ட வட்டத்திற்குள்ளே, அரிதாகக் கிடைக்கும் மூலவளங்களுக்கான கட்டுப்பாடுபற்றி சலனம் செலுத்தப்படுகிறது. (மாவட்ட மட்டத்திற்குப் பரவலாக்கப்பட்டாலும் கூட), கட்டுப்பாடானது நிர்வாகத்தினர் வசமும், அரசியல் வாதிகள் வசமும் இருந்தபோது, நிர்வாகத்தினரை தாண்டிவிடக்கூடியனவிற்கு அரசியல்வாதிகள் போதிய அதிகாரம் கொண்டவர்களாக உள்ளனர். மூலவளங்கள் கிடைக்கக் கூடிய தன்மை, அவற்றை அணுகக் கூடியதன்மை, அவற்றின் பயன்பாடு என்பவற்றைத் தீர்மானிக்கும் காரணியாக இருந்த அரசியல் அணுகுந்தன்மை அதிகரித்துக் கொண்டே வந்தது.

அரிதாகவுள்ள மூலவளங்களுக்கான கட்டுப்பாடானது, மத்தியலமைந்துள்ள நிர்வாக முறைமையின் ஒரு வரையறுக்கப்பட்ட

(37ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் மட்ட அதிகாரத்தின் இயக்க ஆற்றல்

எஸ். ஆர். டி. எஸ். ஜயதிலக

அறிமுகம்

இவ்வாராய்ச்சி, மெனிக்கமை, குருந்துகமை (புனைபெயர்கள்) ஆகிய இரு கிராமங்களில் 1977 ஆகஸ்ட் முதல் 1978 ஆகஸ்ட் வரை நடாத்தப்பட்ட களப்பணிகளை அடித்தளமாகக் கொண்டதாகும்.

இக்கட்டுரையில் இலங்கையின் மேற்கு வலயத்திலுள்ள இரு கிராமங்களிற் காணப்படும் கிராமிய அதிகார அமைப்பின் இயல்பினை ஆராய விழைகிறேன். இங்கு நான் அதிகாரப் பங்கீட்டின் இயக்க ஆற்றல் பற்றி மட்டுமே கவனம் செலுத்துவேன். இத்தகைய ஓர் ஆய்வில் ஒவ்வொரு கிராமத்துக்கும் அது ஓர் அம்சமாக அமையும் பரந்த சமூக அமைப்பு முறைக்குமிடையிலான தொடர்பு கருத்திற் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இந்தப் பரந்த சமூக முறைமை (இலங்கைச் சமூகம்) இப்பொழுது துரிதமாக மாற்றமடைந்து வருவதால், அது கிராம வாழ்க்கைத் தலைமையில் அதன் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆதலால் நான் ஐந்து பிரதான துறைகளில் ஏற்படும் மாற்றங்கள் மீது கவனஞ் செலுத்துகிறேன்:

1. உள்ளூர் அதிகாரத்துக்கு ஆதரவான வளங்கள்;
2. அதிகாரத்திற்குப் போட்டி போடத்தக்க தனிநபர்கள்;
3. தலைவர்/பின்பற்றுவோர் உறவுகளின் இயல்பு;
4. தலைவர்கள் வகிக்கும் பங்கு;
5. அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு (இவ்வமைப்புகளூடாக) அரசாங்கக் கொள்கைகளைப் பயனுள்ளவையாக்குவதில் இக்காண்புகளின் விளைவு.

அதிகாரத்தின் வளங்களைப் பொறுத்தவரை பின்வரும் திட்டவட்டமான விடயங்களை ஆராய விரும்புகிறேன்:

1. அதிகாரம் பெறுவதற்கு நிலவுடைமையும் செல்வமும் அவசியமா?
2. அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு அவை போதுமானவையா?
3. கிராமத்தில் அதிகாரமிக்க நிலைகளை அடைவதற்கு அரசியல் தொடர்புகள் எவ்வளவு தூரம் உதவுகின்றன.?

பின்னணி

மேற்கூறிய விடயங்கள் இலங்கையின் உலர் வலயத்திலுள்ள இரு கிராமங்களிலிருந்து பெற்ற மனிதவியல் களத்தரவுகளின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. மெனிக்கமை மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ளது. அது களுத்துறையிலிருந்து ஆறுமைலுக்கப்பால் களுத்துறைக்கும் ஹொரணைக்கும் நடுவே கொழும்பிலிருந்து சுமார் 28 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. அக்கிராமத்தின் குடிசனத் தொகை 3322 ஆகும். அங்கு 643 வீடுகள் உள்ளன (குடியிருப்பாளர் நிரல் 1971). மெனிக்கமைக் கிராமவாசிகள் அனைவரும் பௌத்தர்கள். இவர்களிற் பெரும்பாலோர் வேளாளர் குலத்தைச் சார்ந்தோராவர். 'பதவரல' குலத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பிடத்தக்க மற்றொரு குழுவினராவர்.

குருந்துகமைக் கிராமம் அடுத்துள்ள தென்மாகாணத்தின் காலி மாவட்டத்தில் அமைந்துள்ளது; 12 மைல் தூரத்திலுள்ள அம்பலாங்கொடையே அதற்கு அண்மையிலுள்ள பட்டினமாகும். குருந்துகமையில் 379 வீடுகளுடன் 1759 குடிசனங்களும் உள்ளனர் (குடியிருப்பாளர் நிரல் 1971). இவர்கள் அனைவரும் சிங்கள பௌத்தர்களாவர். ஆனால், அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களில் இந்துக்களான இந்தியத் தொழிலாளர்கள் வசிக்கின்றனர். அவர்கள் பல்லாண்டுகளாக இங்கு வாழ்ந்துவரினும் அவர்கள் இக்கிராம வாழ்க்கையில் இரண்டறக் கலக்கவில்லை. அவர்களின் பெயர்கள் குடியிருப்பாளர் பட்டியலிற் காணப்படவில்லை. அவர்கள் உள்ளூர் அமைப்புகளுக்கோ சங்கங்களையோ சார்ந்தவர்களாயுமில்லை. ஆதலால் அவர்களை எனது ஆய்வில் சேர்த்துக்கொள்ளவில்லை. இக்கிராமத்தைச் சார்ந்த மக்களிற் பெரும்பாலோர் கரர்வ (பரதவர்) குலத்தவரவராவர். மற்றிரு பிரதான குலங்கள் வேளாளரும் வகம்புறவுமாகும்.

அதிகார வரைவிலக்கணம்

அதிகாரம் பற்றிய கருத்து பல சமூகவியல் விஞ்ஞானிகளால் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. இத்தொடர்பில் மெக்ஸ் வெப்ஸ்டரின் வரைவிலக்கணம் பயனுள்ளதாகும். அவர் பின்வருமாறு அதிகாரத்திற்கு வரைவிலக்கணம் கூறுகின்றார்:-

> ''ஒரு சமுதாய உறவு நிலைக்குள் ஒருவர், எதிர்ப்புகளிருந்தும் தமது விருப்பத்தை நிறைவேற்றத்தக்க நிலையில் இருப்பார் என்ற சாத்தியக்கூறு; அச்சாத்தியக்கூறு எதில் தங்கியுள்ளது என்பது பொருட்படுத்தத்தக்கதல்ல.''

பாரம்பரிய அதிகார அமைப்பு

கடந்த கால அதிகார அமைப்பினைப் பகுப்பாய்வு செய்கையில் மொறப்பிட்டிய கிராமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமதுரைற் றெமிள்சன் மேற்கொண்ட ஆய்வு பற்றிக் குறிப்பிடுதல் பயனுடைத்தாகும். அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> "கிராமத்தில் முக்கியமானவர்கள் யார்?" என்று கேட்டால் மொறப்பிட்டிய கிராமவாசி பின்வருமாறு பதிலளிக்கிறார்: கிராமத்தலைவர் (கிராமவிதானை) பௌத்த பிக்கு (ஹாமதுரு), பள்ளி ஆசிரியர். இவர்கள் தலைவர்களாகக் கொள்ளப்படவேண்டுமென்பது பழங்காலந்தொட்டு சிங்களவரிடையே இருந்துவரும் ஒரு பொது நிலைமாகும்.

இதற்கமைய, இச்சிங்களத் தலைவர்கள் குறிப்பிடப்படுவதற்கான முக்கிய காரணங்களாவன; முதலாவது, அவர்கள் சமுதாயத்தில் வகிக்கும் பங்கு காரணமாக அவர்கள் மதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கிராமத்துள் உள் விவகாரங்களிலும் கிராம விதானைக்கு கணிசமான அதிகாரம் இருந்தது. ஆகையால் தம் பதவியினூடே அவர் கிராமத்தவர்கள் மீது அதிகாரஞ் செலுத்தக்கூடியதாக இருந்தது. இரண்டாவது, பாரம்பரிய தலைவர்கள் விரும்பப்படக் காரணம் அவர்களுடைய பண்புகளாகும். கிராம பௌத்த பிக்கு நல்லதோர் உதாரணமாவார். மூன்றாவது அவர்களது பொருளாதார பலம் காரணமாக அவர்கள் மதிக்கப்படுகின்றனர். கிராமவிதானை, பள்ளி ஆசிரியர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு பதவியிருந்தாலும் அவற்றைப் பெறுவதற்குச் செல்வம் ஒரு முன் நிபந்தனையாக அமைந்தது.

இப் பாரம்பரியத் தலைவர்களைப் பொறுத்தவரை பின்வரும் விடயங்கள் மிகத் தெளிவானவையாகும்:

முதலாவது, இத்தலைவர்களுக்கு உயர்ந்த பொருளாதார, குல அந்தஸ்துகள் இருந்தன. அவர்கள் கிராமத்தில் உயர் வரிமரபின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர். இரண்டாவதாக, தலைவருக்கும் பின்பற்றுவோருக்குமிடையே இருந்த தொடர்பு உறுதியானதாக இருந்தது. அவர்களது அதிகாரத்திற்கு அச்சுறுத்தல்கள் இருக்கவில்லை. ஒரு சிலரே தலைவர்களாகத் தக்க நிலைமை இருந்தமையால் இருந்த ஒரு சில அச்சுறுத்தல்களும் பொருட்படுத்தக் தக்கனவல்ல. எனவே, உறுதியான அதிகார அடித்தளம் காரணமாக கிராம விதானை, பள்ளி ஆசிரியர், பௌத்த குரு என்போரே கிராமத் தலைவர்களாக இனங்காணப்பட்டனர்.

எவ்வாறாயினும், எறக்குறைய சென்ற 20 ஆண்டுகளில் இவங்கைக் கிராமங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றுள் கல்வி வாய்ப்புகள் விரிவாகியமை, வருமானம் பெறுவதற்கு வெளி வாய்ப்புகள் அதிகரித்தமை, ஜனநாயக மயமாக்கல், பன்முகப் படுத்தல் என்பவற்றின் காரணமான அதிகாரிகள் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவை குறிப்பிடத்தகுவனவாகும். அத்துடன் மிகக்கூடிய அளவில் கிராமங்களில் அரசியல் மயமாக்கலும் இடம் பெற்றுள்ளது. அதேவேளை தலைவர்கள் பற்றிய கருத்து மாற்றமடைந்துள்ளது என்பது பல கிராமத்தவர்களின் கருத்துரைகளிலிருந்து அறியக் கிடக்கிறது. ஒரு தலைவரில் என்னென்ன பண்புகளிருக்க வேண்டுமென கேட்டபோது, "மெனிக்கமை வாசியான 20 வயது க. பொ. த. (சா.) மாணவன் ஒருவன் பின்வருமாறு கூறினான்:

> "ஒரு தலைவர் காணிச் சொந்தக்காரராகவோ அரசாங்க உத்தியோகத்தராகவோ இருக்க வேண்டுமென்பதில்லை; அவர் கல்வி கற்றிருக்க வேண்டும். அத்துடன் வெளியிடங்களிலுள்ள உத்தியோகத்தர்களுடன் தொடர்பிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு தொழில் தேடித்தரவும் கிராமத்தின் நலனுக்கு உழைக்கவும் கூடியவராக இருக்க வேண்டும்."

இது ஒரு தலைவர் பற்றி கிராம மக்கள் வெளியிட்ட பொதுவான கருத்தாகும். எனவே தலைவரில் இருக்க வேண்டுமெனக் கருதப்படும் தகைமை செல்வத்திலிருந்து தொழில் தரக்கூடிய ஆற்றலுக்கு மாறியுள்ளது என்பது தெளிவு.

நற்போலுநய அதிகார அமைப்பு

தலைவர்களை இரு பிரதான பகுதிகளில் அடக்கலாம். உத்தியோகப் பற்றுள்ளவர், உத்தியோகப் பற்றற்றவர். உத்தியோகப் பற்றுள்ள தலைவர்கள் என்போர் ஒரு கிராம நிறுவனத்தில் அல்லது அமைப்பில் தாம் வகிக்கும் பதவி காரணமாக அதிகாரம் செலுத்துவோராவர். உத்தியோகப்பற்றற்ற தலைவர்கள் என்போர் பதவி வகிக்காமலேயே பிறர் மீது செல்வாக்குச் செலுத்தத்தக்க நிலையில் உள்ளோராவர். இங்கு உத்தியோகப்பற்றுள்ள தலைவர்கள் பற்றியே பிரதானமாக ஆராய்வோம்.

மத்தியினால் கட்டுப்படுத்தப்படும் கிராம மட்ட அமைப்புக்கள் பலவுண்டு. இவை அரசாங்கக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன. உள்ளூர்க் கட்சி அமைப்புகளும் மத்தியிலிருந்து கட்டுப்படுத்தப்படுதல் கூடும். எனவே இப்பதவிகளை வகிப்பவர்கள் யார் என்ற வினா எழுகிறது. இன்று பதவி வகிப்பவர்கள், கடந்த காலத்தில் விதானையாரால் தெரிவு செய்யப்பட்ட அதே அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறார்களா? நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியது போல சென்றகாலத்தில் அதிகாரம் பெறுவதற்கு செல்வம் ஒரு முக்கிய கருவியாக இருந்தது. ஆதலால் இவ்விடயத்தில் தெளிவானதொரு வினா எழுகிறது. நிலவுடைமை அதிகாரம் பெறுவதற்கு இன்றும் அவசியமானதா அல்லது வேறு வழிகளும் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விணக்களுக்கு விடையளிக்குமுன் மெனிக்கமையில் பாரம்பரியமாக நிலச்சுவாந்தர்களாகவுள்ள குடும்பங்கள் கிராம அலுவல்களில் இன்றும் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதைக் கூற வேண்டும். அவர்கள் மதிக்கப்படுவதோடு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது நீடிக்காது. இந்நிலை இன்றைய சந்ததியினரோடு மாறிவிடலாம். மேலும் இலங்கையின் வேறு பல கிராமங்களைப் போன்று மெனிக்கமை நகர்ப்புறச் செல்வாக்குக்கு உட்பட்டுள்ளது; அத்துடன் மத்திய கட்டுப்பாடுடைய அதிகாரவர்க்க ஊடுருவலுக்கும் இலக்காகியுள்ளது.

இத்தகைய காணிச் சொந்தக்காரர்களான குடும்பங்கள் தொடர்ந்து கிராமமக்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்குப் பல காரணங்களுண்டு. அவர்களின் தற்போதைய செல்வம் முக்கியமானதொன்று; பல கிராமத்தவர்கள் தம் சீவனோபாயத்திற்கு இச்செல்வந்தர்களில் தங்கியிருக்கின்றனர். மற்றெல்லாவற்றையும் விட அவர்கள் விரும்பப்படுவதற்கு அவர்களின் குடும்பப் பின்னணி முக்கியமான காரணமாகும், மரபுவழி வந்த செல்வம் கௌரவமும் பதவியும் பெறுவதற்கு உதவுகிறது. அது அண்டிவாழ்பவர்களை உருவாக்குவதற்குரிய அதிகாரத்தை அளிக்கிறது. இரண்டாவதாக, மற்றவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்படியும் நிலையில் வைத்திருப்பதற்காக பாரம்பரிய நிலச்சுவாந்தர்கள் கணிசமான அன்பளிப்புக்களை வழங்கி தம்மைப்பற்றி தர்மசிந்தையுள்ளவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் போக்குமுள்ளது. செல்வமிருந்தால் கல்விகற்கும் வாய்ப்பும் அதிகமாகவுண்டு. கல்வியின் மூலம் மதிப்பைப் பெறுவதோடு மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

எவ்வாறாயினும், மத்திய அரசாங்கம் கிராமத்தில் பரவலாக ஊடுருவியிருப்பது அதிகார அமைப்பைச் சிக்கலாக்கியுள்ளது. அதிகமானோர் தலைமை அந்தஸ்துகளை அடைய நாடுகின்றனர். இதனால் தலைவர்களுக்கும் பின்பற்றுவோருக்குமிடையிலான உறவுகள் உறுதியற்றவையாகின்றன. ஏனெனில் அவை சாதி, உறவுமுறை, சமூக பொருளாதாரத் தொடர்புகள் என்பவற்றில் தங்கியிருப்பதில்லை. மாறாக அரசியல் தொடர்புகளிலேயே தங்கியிருக்கின்றன. சிறந்த வாய்ப்புகளை அளிக்கத்தக்க வருக்கே மக்கள் விசுவாசத்தைத் தெரிவிக்கின்றனர். எனவே கிராமிய அதிகார அமைப்பு பற்றிய ஆய்வில் கும்பல் பிரிவுகள் பற்றிய ஆராய்ச்சி பிரிக்க முடியததாகி விடுகிறது. அரசியல் கட்சியிலிருந்து அரசியல் கும்பல்கள் வேறுபட்டவையாகும். அரசியற் கட்சிகள், ஒரு கொள்கையின் அடிப்படையில் உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். மேலும் கட்சிகள் வெளியிலிருந்தே அரசியல் வாழ்க்கை மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. எவ்வாறாயினும் உள்ளூர் மட்டத்தில் இக்கட்சிகள் ஓர் உள்ளூர் சாயலைப் பெறுகின்றன. இதனால் பல்வேறு கும்பல்களுக்கிடையிலான எதிர்ப்புகள் வெளியாகின்றன.

இத்தகைய அரசியல் கும்பல்கள் கிராமங்களில் காணக்கிடக்கின்றன. அவை, ஒரே அரசியற் கட்சியிலுள்ள பகைமையை மையமாகக் கொண்டு அல்லது பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் பகைமை மையமாகக் கொண்டு அமைகின்றன. இவ்விரு வகையிலும் ஒரே வகையான பற்று செயல்படுவதாகத் தோன்றுகிறது. கும்பல் தலைவரால் கிடைக்கத்தக்க பயன்கள் கருதியே உறுப்பினர்கள் அவர்பால் சார்கின்றனர்.

உத்தியோகம் வகிக்காதோர்

உத்தியோகம் வகிப்பவர்களைத்தவிர ''திரைக்குப் பின்னால்'' இயங்கும் தலைவர்களும் உளர். அவர்கள் உத்தியோகம் வகிப்பதில்லையெனினும் மதிப்பும் செல்வாக்கும் உடையவர்களாவர். பல ஆராய்ச்சியாளர்கள் தலைவர்களை ஆசார முறையான, ஆசார முறையற்ற, உத்தியோக ரீதியான, உத்தியோகப் பற்றற்ற, கருத்துத் தலைவர்கள் என பல வகையாக வகுக்க முயன்றுள்ளனர்.

இரு கிராமங்களிலும் நிலச்சுவாந்தர்கள் தம் பொருளாதார பலத்தைக் கொண்டு பல்வேறு சங்கங்களில் பதவிகள் பெற்றுள்ளனர். பதவி வகிப்பதில் ஆர்வம் காட்டப்படுவதற்குப் பல காரணங்களுண்டு. செல்வம்/ஆளுமை என்பவற்றின் காரணமாக நிலச்சுவாந்தர் ஒருவர் தாமே பதவி வகிப்பதற்குப்பதில் தம் சொற்படி நடக்கக் கூடியவர்களைப் பதவிகளில் அமர்த்தலாம் என்று கூறப்படலாம். ஆனால், இப்பொழுது கிராமங்களில் அந்தளவுக்கும் யாருக்கும் ஆதிக்கமில்லை. மேலும், வருமான மூலங்களும் பயன் பெறுவதற்கான மூலங்கள் பலவற்றை உருவாக்குவதற்கான வெளித்தொடர்புகள் என்பனவும் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளன. எனவே பதவிகளை ஏற்றுக்கொள்ளல், அரசியல் ஆதரவாளர்களுக்கு வெளிப்பயன்களைப் பங்கிடுவதன் மூலம் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதற்கான ஒரு வழியாகும். எனவே இன்று உத்தியோக ரீதியான அல்லது உத்தியோகப் பற்றற்ற தலைவர்கள், ஆசார முறையான ஆசாரமுறை சாராத தலைவர்கள் என்பவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் பொருட்படுத்தத் தக்கனவல்ல என்று நாம் முடிவு செய்யலாம். எனினும், அரசாங்க அதிகாரத் துறையை ஊடுருவல் அதிகாரத்தை முறைப்படியானதாக ஆக்குவதற்கு வழிவகுத்துள்ளது எனலாம். இப்புதிய முறைப்படியான தாக்கும் அமைப்பில் பாரம்பரியமாக அதிகாரம் பெற்றுருந்தோர் இன்றும் ஆதிக்கம்

(33ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்பு அபிவிருத்தி

வி. சுகவனேசபிள்ளை

1. வீடமைப்பு அபிவிருத்தி என்றால் என்ன?

வீடமைப்பு அபிவிருத்தியானது, 'மெய் ஆதனம்' என்பதிலிருந்து பெறுத்தறியப்பட வேண்டும். மெய் ஆதனத்தின் (Real Estate) அடிப்படை, வேறுபாடு யாதெனில், இந்த காணிகள் மனிதனால் விலைக்கு வாங்கப்பட்டு, அவை துண்டுக் காணிகளாக்கப்பட்டு, நிலைதிக உள்ளக வசதிகளுடனோ அல்லது அவைகள் இல்லாமலோ இலாபத்துடன் மீண்டும் விற்கப்படுகின்றது. வீடுகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தல் என்றவகட இதனைக் கருத்துக்கொள்ளலாம். ஆனால் வீடமைப்பு அபிவிருத்தி என்னும் பொழுது, பாவிக்கப்படாதுள்ள காணிகளைக் கொள்வனவு செய்து, இதில் வீடுகள் கட்டப்பட்டு, விட்டுத்த வேண்டிய உள்ளக வசதிகள் அளிக்கப்படுவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு, பின்னர் வீடுகளை எதிர்பார்த்துள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தியாக்கக்கூடிய வகையில், அக்காணிகளிலும், கட்டடங்களிலும் பிறந்த பயன்பாட்டினைப் பெறும் முகமாக, அவை மீண்டும் கட்டப்படுகின்றது என்பதாகும். உ-ம். நகரங்களில் அமைந்துள்ள கட்டுத் தொடர மாடி வீடுகள்.

2. வீடமைப்பு அபிவிருத்திக்கான தேவை உள்ளதா?

மேற்கூறப்பட்டுள்ள இரு வகைகளிலும், காணிகள் அமைந்துள்ள இடவமைப்பு, வீடுகளின் அமைப்பு (வேறுபடுத்தப்பட்ட தனிவீடுகள், அரைவாசியாக பிரிக்கப்பட்டுள்ள வீடுகள், கட்டுத்தொடர்மாடி வீடுகள்) என்பவற்றைப் பொறுத்து வீடமைப்பு அபிவிருத்திக்கான கட்டாயத் தேவை ஒன்றுள்ளது. ஏற்கனவே உள்ள கட்டடங்களை அபிவிருத்தி செய்தல் என்ற நோக்கிலிருந்து, இந்த எண்ணக்கருவினை ஆராயும் பொழுது, இற்றைக்கு அந்தரமாக கொழும்பு, கண்டி போன்ற முக்கிய நகரங்களிலேயே செறிவு படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த அறுபவம், ஒரு எதிர்க்கிலினத் தரக்கூடியதாக இருக்கலாம் என்பதையும் காணமுடிகிறது. உயர் மாடிகளைக் கொண்ட தனியார் அல்லது வேறுவகையான மனை அமைக்கப்பட்ட கட்டடத் தேவைகள் பற்றி ஒரு ஒழுங்கான ஆய்வினை மேற்கொள்ளாது, ஒரு நியமற்ற அடிப்படையில் இத்தகைய கட்டடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமை காணமுடிகிறது. கடந்த காலத்தில், கட்டடங்களுக்கான தேவையற்றிருந்த ஒழுங்கான ஆய்வினை மேற்கொள்ளாது அடிப்படையில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. உதாரணமாக, இவ்வகையின் தனி நபரானது சிறீ ஜயவர்தனபுரம்ற்கு மாற்றப்படுவதன் மூலம், அதேக அதுவரை கங்கள் இப்புதிய தலைநகரத்திற்கு மாற்றப்படுவதன் காரணமாக, கொழும்பினை விட, சிறீ ஜயவர்தனபுரவிலேயே வீடமைப்பு அபிவிருத்திக்கான தேவை அதிகம் காணப்படுவதாகும். இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

எனவே, பொருத்தமுறையினதும், தனியார் நுகரவினதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், அதிகரித்துவரும் குடித்தொகைக்கு வேண்டிய வீடுகளை அளிப்பது என்பதாகும். இந்த அடிப்படை விலைக் கொண்டே அரசாங்கத்தினது 10 வருடக் வீடுகள் அனைக்கும் கொள்கையும் அமைந்துள்ளதுடன், இந்த இலட்சியத்தினை அடைவதற்காக அரசாங்கத்தினை பொருத்துறை வருமானியுள்ள தோடு, தனியார் நுகரவினரா லும் இவ்விலட்சியத்திற்காக பங்களிப்பு நினைவேற்றப்பட வேண்டும். வீடுகளுக்கான கோரிக்கை, ஏகா இருந்து வருவதுடன், இக்கோரிக்கையானது எப்படியாவது நிறைவேற்றப்படவேண்டும்.

3. வீடமைப்பு அபிவிருத்தியற்கு அரசின் கொள்கை யாது?

இலங்கையிற்கு பிரதம மந்திரி அவர்களால், சமர்ப்பிக்கப்பட்ட, எல்லோருக்கு வீடுகளை வழங்குவதற்கு வழிவகுக்கும் நிகழ்ச்சித் திட்டமானது, உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் மிகவும் அவதானமான அவசியப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக அநேக பொது நிறுவனங்களும், அதிகார சபைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு எல்லா மூலவளங்களையும் பயன்படுத்துவது கட, அரசினது கொள்கையாகும். வீடுகளை வழங்கும் பொருட்டு, வீடமைப்பு அபிவிருத்தியில் தனியார் துறையினரும் ஈடுபடக்கூடிய வகையில் பல ஊக்குவிப்புக்கள் போன்ற பல ஊக்குவிப்புக்களை அரசாங்கம் வழங்கியுள்ளது. கிராமோதய சபைகள் போன்ற பல்வேறு பட்டங்களுக்குப் பல முன்னுரிமைகளுக்கப்படுவதன் மூலம், வீடமைப்புத் தேவையைப் பூர்த்தியாக்கும் இலக்கினை அடைவதில் அரசாங்கம் வெற்றி கண்டு வருகின்றது. கிராமிய மட்டத்தில், கிராமப் புறங்களில் இடைக்கிடையே கட்டப்படாத செங்கற்கள் போன்றவற்றைக் கொண்டு பாரம்பரிய முறையில் வீடுகளை கட்டுவதற்கும், அதற்கு வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய உள்ளக வசதிகளை வழங்குவதற்கும், வேண்டிய உதவிகள் கிராமிய மக்களுக்கு வழங்கப்படுகிறது. நகரப் பகுதிகளிலும், கிராமங்களிலும் வாழ்கின்ற தாழ்ந்த வருமானங்களைக் கொண்டுள்ளவர்களுக்கு வீடுகளை வழங்குவதனையே அரசாங்கமானது முக்கிய கவனத்தினைக் கொண்டுள்ளது. இதற்குமாறாக, தனியார் துறையானது அரசினது உதவிகள் கிடைக்காதவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், குறைந்த வருமானத்தினைப் பெறும் பிரிவினரின் தேவைகளை குறைநிரப்புச் செய்யவும் வேண்டியிருந்தது.

4. முழுதளவிலான கொள்கையில் தனியார் துறையினது பங்களிப்பு

முன்னர் கூறப்பட்டுள்ளது போன்று அரசாங்கமானது சேரிவாசிகளுக்கு வீடுகளையும், மாதிரிக் கிராமங்களையும் அமைத்துக் கொடுத்தும், மக்கள் வாழ்ந்து வரும் வீடுகளை தரமுயர்த்தியும் செய்து வந்த அதேசமயம், தாழ்ந்த இடைத்தர, இடைத்தர, உயர் இடைத்தர வருமானங்களைப் பெறும் பிரிவினர்களின் வீட்டுத் தேவைகளைத் தனியார் துறையினரே பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.

இத் தனியார் துறை வீடமைப்பு அபிவிருத்தியாளர்கள், வீடற்றோருக்கு வீடுகளை வழங்க வேண்டிய அரசாங்கத்தினது தேவையினை மதித்து, இந்தப் 10 லட்சம் வீட்டுத்திட்டத்தில் தமது பங்களிப்பினை வழங்க முன் வந்துள்ளனர். தமது சொந்த வீடுகளைக் கட்டுவதற்கு வேண்டிய நிதிவளத்தினையோ, வேறு மூல வளங்களையோ கொண்டிராத அல்லது, வீடுகளைக் கட்டும்போது மேற்பார்வை செய்வதற்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவுளைக் கொண்டிராத, இன்னமும் வாடகை வீடுகளில் வாழும் நகர அடிப்படையிலான தாழ்ந்த இடைத்தர வருமானக் கூட்டத்தினரையே இத் தனியார் துறையினர் தமது சந்தைவாய்ப்பாக இனங்கண்டுள்ளனர். வீடுகளை வழங்கும் அரசாங்கத்தினது முழுதளந்த கொள்கையுடன், தனியார் துறையினர் ஒத்துப்போக்க் கூடிய பகுதி இதுவென்று நான் கருதுகிறேன்.

5. தனியார் துறை ஈடுபாட்டிற்கான கோட்பாடும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்:

எந்தவொரு துறையிலும் தனியார் துறை ஈடுபாட்டிற்கான கோட்பாடு, இலாப நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும். இது முதலீட்டாளரின் முதலீட்டிற்கு பாதுகாப்பினை வழங்குவதுடன், அவன் அம் முதலீட்டின் மூலம் நியாயமான விளைவினைப் பெறுவதற்கும் வழிவகுக்கிறது. இந்தக் குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு, தனியார் துறையானது, அரசாங்கத்தினால் வழங்கப்படும் வரிச் சலுகைகள் வரி ஊக்குவிப்புக்கள் தனியார் துறையினரை இத்திட்டத்தில் பங்குபற்றச் செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டுக் கட்டமைப்பு நிதியுதவிகள், ஏனைய வசதிகள் போன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தும்.

தாழ்ந்த இடைத்தர வருமானத்தினைப் பெறுவோரினால், வீடுகளுக்கான தேவை அதிகம் உணரப்படும் பகுதிகளான கொழும்பு, சிறீ ஜயவர்தனபுர ஆகியவற்றின் சுற்று வட்டாரங்களிலுள்ள பகுதிகளே, தனியார் துறை வீடமைப்பு அபிவிருத்தியாளன் இலாபகரத்துடன் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு விரும்பும் பகுதிகளாகும். தாழ்ந்த இடைத்தர வருமானம் பெறுபவர்களினதும், இடைத்தர வருமானம் பெறுபவர்களினதும் வீட்டுத் தேவையானது முறையே 500 சதுர அடிக்கு குறையாததும், 1000 சதுர அடிக்கு மேற்படாததுமாக இருக்கிறதெனறும் அதன் விலை முறையே ரூபா 100,000/— ற்கும் ரூபா 300,000/— ற்குமிடைப்பட்டு இருக்கிறதென்றும் அநுபவங்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. இவ்விலைகளில் 10 பேர்ச்சர்ஸ்களுக்கு குறையாததும், 15 பேர்ச்சர்ஸ்களுக்கு மேற்படாததுமான விஸ்தீரணத்தினைக் கொண்டுள்ள காணியின் விலையும் அடங்கும். கணவன், மனைவி ஆகிய இருவரும் தொழில் செய்து, மாத வருமானமாக ஏறத்தாழ ரூபா 2500/— க்கும் ரூபா 6,000/— க்குமிடையில் வருமானத்தைப் பெறுகின்ற குடும்பத்தின் வருமான எல்லைக்குள் இவ்விலைகள் அடங்குகிறது. இத்தகைய ஒரு குடும்பத்திற்கு, நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ஆகக்குறைந்த வட்டிவீதங்கள், முதலையும், வட்டியையும் மீளச் செலுத்துவதில் நீடித்த கட்டுப்பணத் தவணைகள் போன்ற உதவிகள் தேவையாயுள்ளது. இயலுமானவரை ஆகக்கூடிய மக்களுக்கு இடமளிக்கக் கூடியவாறு, இவ் இலாபங்கள் அநேகமாக எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது.

6. இந்த இலட்சியத்தினை நிறைவேற்றுவதில் எதிர்கொள்ளப்பட்ட தடைகள்:

(அ) மிகவும் வேண்டிய ஸ்தானங்களில் மிகவும் மலிவாக காணிகள் கிடைக்கக் கூடியமை.

(ஆ) வீடு கட்டுவதற்கு வேண்டிய பொருட்கள் போதாமை.

(இ) வீடு கட்டுவதற்கு வழங்கும் நிதிவழங்களின் செலவு.

(ஈ) வீட்டினை வாங்க இருக்கும் ஒருவனுக்கு, கடன் மூலம் நிதிவழங்குவதனால் ஏற்படும் செலவு.

(உ) உள்ளக வசதிகளுக்காக, உயர்ந்த செலவு.

(ஊ) உள்ளக வசதிகளை அமைப்பதற்கு வேண்டிய அநுமதியினைப் பெறுவதில் தாமதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) மொத்த வியாபார விற்பனை வரி, முத்திரை வரி என்பவற்றுக்கான இரு வழி வரிமதிப்பீடு

(உ) பலதரப்பட்ட அனுமதிகளைப், பன்றாகப்படுத்தப்பட்ட சபைகள் மூலம் பெறவேண்டியிருந்தமை

(ஊ) படிவங்களை நிரப்படுத்துவதிலும், அவற்றை பதிவதிலும் பல்வேறு அதிகார சபைகளில் காணப்பட்ட நிர்வாகச்/செயன்முறைச் சிக்கல்கள்.

சொத்து முகாமை

இந்த சொத்து முகாமை என்பது, ஒரு வீட்டுத் தொடரில் வாழ்கின்ற எல்லா குடியிருப்பாளர்களுக்கும் வேண்டிய பொதுச் சௌகரியங்களை சிறந்த முறையிலும், பயன்படத்தக்க முறையிலும் வழங்குவதைக் குறிக்கும். இதற்கென ஒரு பிரிவு, உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சில் தாபிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். ஒரு குறிப்பிடப்பட்ட திட்டத்தின் மூலம் இப் பொதுச் சௌகரியங்கள் தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்துவது, இப்பிரிவின் கடமையாகும். குடியிருப்பாளர்களையும், சொத்து முகாமைப் பிரிவிலுள்ள சில உத்தியோகத்தர்களையும் கொண்டு அமைக்கப்படும் குழுக்கள் மூலம், இந்நோக்கம் எய்தப்படுகிறது. தற்சமயம், தனியார் துறையினராகிய நாம், இந்தப் பொறுப்பினை ஏற்க முடியாதுள்ளது. தனியார் துறையினரான நாம், உள்ளக வசதிகளையும், பொதுச் சௌகரியங்களையும் வழங்கி, குடியிருப்பாளர்கள் தனித்தோ அல்லது கட்டடங்களோ, தங்களின் சொந்த நிலத்துண்டுகளில் இத்தகைய வசதிகளும், சௌகரியங்களும் தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குகின்றோம்.

தனியார் துறை வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைக் கொள்ளவு செய்து, இந்நிலத்தின் மீது இப் பொதுச் சௌகரியங்களை நடைமுறைப்படுத்தலும், மேற்பார்வை செய்யலும் தம்மை ஒரு குழுவாக ஆக்கிக் கொண்டவர்களுக்கே நாம் ஆலோசனைகளும், பொய்க்கலும் வழங்குகின்றோம். அங்கத்தவர்களின் தேவைக்கேற்பவும், இப்பொதுச் சௌகரியங்களை நிர்வகித்து, தொடர்ச்சியாக இச் சேவையினை வழங்குவதற்கமையவாகவும், இக் குழுவின் அமைப்பு, வேண்டிய நிதிவசதி என்பன துங்கத்தவர்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும், இவ்வாறான வீட்டுத்திட்டங்களில் வாழ விருப்பமுள்ளோரில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர், நமக்கு வேண்டிய வசதிகளை ஏனையோரின் தலையீடுன்றி அல்லது மற்றவர்களுக்கு தமது தலையீடின்றி, நமக்குத் தாமே நிர்வகிக்கும் மாதிரியிருப்பதையே கொண்டுள்ளதென அறுதியாக அறிய முடிகிறது. எனவே, கடுமானவரை, வீடமைப்பு அபிவிருத்தியாளர்கள் இந்நகைய பொதுச் சௌகரியங்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். ஆனால் இப்படியான தேவைகள் வேண்டப்படுமிடத்து, இந்நகைய வீட்டுத்திட்டங்களுக்கு, இப்பொதுச் சௌகரியங்களை வழங்கவேண்டிய கடப்பாடு இவர்களுக்குண்டு. ஒரு குறிப்பிட்ட பிரிவிலுள்ள உள்ளூராட்சி அதிகார சபை அல்லது பொதுச் சௌகரியங்களை வழங்கக் கூடிய சபை என்பன குடியிருப்பாளர்களிடமிருந்து ஒரு நிர்வகிப்பதற்கான அறவிடு இப் பொதுச் சௌகரியங்களை நிர்வகிப்பதையும், தொடர்ந்து கிடைப்பதையும் மேற்கொள்ளுமாயின், ஒரு குறிப்பிட்ட இடத்தில் 20 ற்கு மேற்பட்ட வீடுகளை அமைக்கும் திட்டத்தில் இருக்கும் தனியார் துறை வீடமைப்பு அபிவிருத்தியாளர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்பது இதற்கு ஒரு தீர்வாகக் கருதலாம்.

5. நகரத்திற்குட்பட்ட பகுதிகளில் வீடமைப்பு அபிவிருத்தி பற்றிய சாதகமாகவும், பாதகமாகவும் அந்த கொள்கைகளுள்ளன.

அபிவிருத்தி நிமித்தம் நாட்டுப் பகுதியினைப் பாதுகாக்கும் பொருட்டு, மத்திய அரசாங்கமானது, புதிய வீடுகளை கைவிடப்பட்ட பிரதேசங்களிலும், நகரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலும் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்தமை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மத்திய தரவீடுகளில் பல்லாண்டு காலமாக இடம்பெற்றுவரும் வீடமைப்பு அபிவிருத்தியானது, ஏனையவைகளிலிருந்து அபிவிருத்திகள் மூலம் நாட்டினது அழகைத் தவறாமலாவது கால இடைவெளியிட்டு ஆராயப்பட்டு வருகின்ற இச்சமயத்தில், மத்திய அமைச்சினால் இப்புதிய உபாயமானது, அதன் அறுவடையினைப் பெறுவதற்கு மிகவும் கொள்ளக் கூடிய ஒன்றாகும். இவ்வகையைப் பொறுத்தவரையில், மாதுளை நாட்டு வைத்தியப் பாதுகாப்பு, நகரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தனியார் துறை வீடமைப்பு அபிவிருத்தியாளர்களைக் கேட்பதற்கு நாம் இன்னும் அதே காலம் பெறுதிருக்க வேண்டும். நகரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் காணிகளின் பெறுமதி மிகவும் உயர்வாக இருப்பதால், ஒரு அடுக்கு வகுப்பு பிரிவுக்கு, அவரவருடைய வருமானத்திற்கு ஏற்ப 750 ச. அடியுள்ள ஒரு வீட்டினை இயலுமானவரை செலவு செய்வது கஷ்டமானதாக இருக்கும். கடுமையான பெறுமதி அதிகமாக இருப்பதால், தனியார் துறை வீடமைப்பு அபிவிருத்தியாளர் தொடர்மாடி வீடுகளைக் கட்டி அவற்றை விற்க வேண்டியுள்ளது. இதிலும் கூட, உயர்த்திகள் இணைக்கப்படாமலிருப்பதால், மூன்று தட்டு மாடிகளை விடவதிக தட்டுகளைக் கொண்ட மாடிவீடுகளை அபிவிருத்தியாளர் விற்க முடியாது. நகர எல்லைக்குள் தொடர் மாடி வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்பு, வீடமைப்பு அபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியாளர்கள் வேறு பல அம்சங்கள் பற்றியும் தம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. ஒரு சாதாரண இலங்கைப் பிரஜை, அவர் தாழ்ந்த இடைத்தர, இடைத்தர, உயர்ந்த இடைத்தர, செல்வந்த வகுப்பு போன்ற எத்தகைய வருமான வகுப்பினரைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அவர் பழமை பேணுபவராகவும், வீட்டுத் தோட்டத்தைக் கொண்ட முற்றாக பிரிக்கப்பட்ட அல்லது அரைவாசி பிரிக்கப்பட்ட வீட்டையே விரும்புகிறவராகவும் காணப்படுகிறார். ஏனெனில் இவர் தனது வாழிடத்தினைத் தெரிவு செய்கையில், தனது கவனத்தில் எடுக்கும் அம்சங்களில், அந்தரங்கப் பாவிப்பிற்கே முக்கிய இடத்தினைக் கொடுக்கின்றார்.

மேற் கூறப்பட்ட அம்சங்கள் காரணமாக, ஒரு வீடமைப்பு அபிவிருத்தியாளர், வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, நகரத்தின் சுற்றுப்புறப் பிரதேசங்களை நாடுவதைத் தவிர வேறு மாற்றுவழி இருக்கவில்லை. நகரத்தின் சுற்றுப்புறப் பகுதிகளில் காணிகள் நியாயமான விலையில் போதுமான அளவு இருக்கின்றது. வீடமைப்பு அபிவிருத்தியாளர் எதிர் நோக்கிய முக்கிய பிரச்சினை யாதெனில், கொள்வனவு செய்யப்படும் காணிக்கு சிக்கலற்ற உறுதியைப் பெறுவது கடினமாக இருந்தது. ஏனெனில் குறிப்பிட்ட காணிக்கு எந்த வகையிலும் தொடர்பற்ற, மரண சாதனம் எழுதாத மரபுரிமை ரீதியாக பகுதிச் சொத்துரிமையைக் கோரும் அநேகம் பேர்கள் அக்காணிக்கு உரிமை கோருவதை காணக்கூடியதாக இருக்கிறது. மின்சாரம், நீர் வழங்கல், வீதிகள், அழுக்கு நீர் அகற்றுதல், வடிகால் என்பவற்றின் உள்ளக வசதிகளின்மை போன்ற வேறு பல தடைகளும் இங்கு காணப்படுகிறது. 10 அடி அகலத்தினைக் கொண்ட துணைவீதிகள் காணிகளுடன் இணைக்கப்பட்டிருப்பதை பொதுவாகக் காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், கொள்வனவு செய்யப்படும் காணிகளை சிறுதுண்டுகள் ஆக மாற்றுவதற்கான திட்டத்தின் முன் அனுமதியைப் பெறுவதற்கு முன்பாக, உள்ளூர் அதிகார சபையினது நியதிகளுக்கமைய துணை வீதிகளை அகலமாக்கும் வண்ணம் போதுமானளவு காணியைக் கொள்வனவு செய்வதில் வீடமைப்பு அபிவிருத்தியாளர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

9. வீடமைப்பு அபிவிருத்தியும், எதிர்பார்க்கக்கூடிய சிக்கல்களும்

ஒரு வீடமைப்பு அபிவிருத்தியின்போது பலதரப்பட்ட சிக்கல்கள் உள்ளன. 27 ந் திகதி செப்ரம்பர் 1986 ம் ஆண்டு ''பினான்சியல் ரைம்ஸ்'' என்ற சஞ்சிகையில் ''திரு. பாரெட் ஆபத்தின் விளிம்பிலிருந்து எவ்வாறு மீண்டார்?'' என்ற தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு பிரசுரத்தினை இவ்விடயம் தொடர்பாக மீண்டும் இக்கட்டுரையில் பிரசுரிக்க விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் பிரித்தானியாவில் வீடுகள் நிர்மாணிக்கும் மிகப்பெரிய கம்பெனியின் தலைவரான சேர் லோறி பாரெட் என்பவர், மற்றவர்கள் பொறாமை கொள்ளக்கூடிய வகையில் ஒரு தீரச் செயலை நிலைநாட்டினார்.

ஒரு வருடத்திற்கு முன்பு, வரிக்கு முன்பான இலாபங்கள் 35.6 மில்லியன் ப. லிருந்து 4.1 மில்லியன் ப. க்கு குறைவடைந்ததை இவர் அவதானித்து, இப்பாரிய ஆபத்திலிருந்து தனது கம்பெனியைக் காப்பாற்றும் வண்ணம் ஒரு உபாயத்தை அறிவித்தார்.

இவர் விற்கும் வீடுகளின் எண்ணிக்கையானது, 1984 ல் 13,700 இலிருந்து 1985 ம் ஆண்டில் 10,300 க்கு குறைவடைந்து ஈற்றில் வருடத்திற்கு 8100 ஆக வீழ்ச்சியடைந்தது. ஆனால் அவரது இலாபங்கள் 25.4 மில்லியன் ப. வரையிலும், கம்பெனியின் கடனளவானது 59 மில்லியன் ப லிருந்து 9.5 மில்லியன் ப. க்கு குறைவடைந்தும் இருந்தது.

இவர், பிரித்தானியாவின் ஆகக்கூடிய வீடு நிர்மாணிப்பாளர் என்ற பெயரினை இழந்திருக்கக் கூடும். இது தற்போது ஒவ்வொரு வருடத்திலும் 10,000 வீடுகள் அமைக்கும் விம்பி அன்ட் ரார்மக் என்ற கம்பெனியினால் சரிநிகராக போட்டி போடப்படுகின்றது. ஆனால் இவர், முழு ஐக்கிய ராச்சியத்தின் வீடமைப்பு சந்தையினை மாற்றக்கூடிய வகையில் புதிய போக்குகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு மீட்பினைக் கொண்டு வந்தார்.

இவர் சிறிய, மலிவான வீடுகளுக்கான சந்தை வாய்ப்புகளிலிருந்து, சிறிது சிறிதாக பெரிய வீடுகளை அமைத்து, செல்வந்தர்களுக்கு ஆடம்பரமான வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தினார். இவர் வீடுகளை நகரங்களுக்குட்பட்ட பிரதேசங்களிலும், பாழடைந்த நிலங்களிலும் அமைத்தார்.

முதல் தரம் வீடுகளைக் கொள்வனவு செய்வோருக்கு, வெறுமனே மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடுகளை வழங்காது, சிறிய, மலிவான, தளபாடங்களடங்கிய வீடுகளை விற்கும் எண்ணத்தினை அடிப்படையாகக் கொண்டு, பிரித்தானியாவின் வீடுகள் நிர்மாணிக்கும் கைத்தொழிலில் bunting கூடாரங்கள், சந்தை வாய்ப்புகள், ஆரம்ப இல்லங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தியவர் சேர் லோறி மாத்திரமே.

மேலும், வாசனை உற்பத்தித் தொழில் அல்லது மோட்டார் கார் உற்பத்தித் தொழில் போன்ற உற்பத்தியைப் பற்றிய தெளிவான, விளக்கமான சந்தை வாய்ப்பு உபாயத்தினைக் கொண்ட வீடமைக்கும் ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org